விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 03 புதன்கிழமை (15.02.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 058

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO 100
SLS 107 தரம் கொண்டதும்
வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஜனாதிபதி மகிந்தவுக்கு ஒரு வாய்ப்பை வழங்கவே

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவு



## தமது முடிபை அறிவித்தது அமெரிக்கா

*(கொழும்பு),* ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்கும் என்பதனை உறுதிப்படுத்துகின்றோம் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஜனநாயகம், பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமெரிக்க துணை இராஜாங்க செயலாளர் மரியா ஒட்டேரோ மற்றும் மத்திய, தெற்கு ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் ஆகியோர் தெரிவித்தனர். *(24ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கை அரசின் போர் வெற்றிக்கு பாகிஸ்தான் பெரும் பங்காற்றியுள்ளது

### அதனாலேயே உறவு பலமடைகிறது - பாக். ஊடகம்

இலங்கை அரசின் போர் வெற்றிக்குத் தேவையான உதவிகளை பாகிஸ்தான் கொடுத்து வந்ததாலும் தென்னாசியப் பிராந்திய நாடுகளிலிருந்து பாகிஸ்தானை இந்தியா தனிமைப்படுத்த முயற்சிப்பதாலுமே இலங்கையுடன் பாகிஸ்தான் தனது உறவைப் பலப்படுத்திக் கொண்டுள்ளது. இவ்வாறு பாகிஸ்தானிய ஊடகமான த நேசன் தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாகிஸ்தானுக்கான சுற்றுப் பயணமானது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவதாக அமைந்துள்ளது. பாகிஸ்தானுக்கான வருகையை மேற்கொண்ட ஜனாதிபதி கடந்த சனிக்கிழமை பாகிஸ்தான் பிரதமர் கிலானி மற்றும் அதிபர் சர்தாரி ஆகியோருடன் தனிப்பிட்ட சந்திப்புக்களை மேற்கொண்டதுடன் இரு நாடுகளினதும் ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்துவது தொடர்பான விடயங்களையும் கலந்துரையாடியுள்ளார்.

பாகிஸ்தானிய பிரதமர் கிலானியுடன் ஜனாதிபதி மேற்கொண்ட சந்திப்பின்போது இரு நாடுகளின் பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகச் செயற்பாடுகளை மேலும் 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிப்பது எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.தீவிரவாதத்தை ஒழிப்பதில் இலங்கை அரசாங்கத்திற்கு பாகிஸ்தான் தனது ஆதரவுகளை வழங்கியதன் காரணமாக உருவாகியுள்ள நல்லெண்ண முயற்சியானது ஏற்கெனவே இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் ஆழமாக விரிவாகக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் பாகிஸ்தான், இராணுவத் தளபாடங்களை மட்டுமன்றி இலங்கை இராணுவத்திற்கு தேவையான *(24ஆம் பக்கம் பார்க்க)*

## நெடுங்கேணி மக்கள் மீது படையினர் தாக்குதல்!

(நெடுங்கேணி)

நெடுங்கேணியில் நேற்றிரவு பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வீதியால் பயணித்துக் கொண்டிருந்த இளைஞர்களை இடைமறித்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளதால் பெரும்பாலான மக்கள் அச்சத்தில் வீடுகளுக்குள் முடங்கிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதித் திருத்த வேலைகளுக்காக அங்கு சென்று தங்கியுள்ள பெரும்பான்மை இன தொழிலாளர்களின் முன்னிலையிலேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தமது இராணுவக் காவலரணை அப்பகுதி இளைஞர்கள் நெருங்க முற்பட்டவேளையிலேயே தாம் *(24ஆம் பக்கம் பார்க்க)*

## அமெ. இராஜாங்க செயலர் பிளேக்கிற்கு விசர் பிடித்துள்ளது-அமைச்சர் மேர்வின்

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் துணை இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக்கிற்கு விசர் பிடித்துள்ளதாக பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு பிளேக்கிற்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது என கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் குறிப்பிட்டுள்ளார்

அரசாங்கத்திற்கும் றொபேர்ட் ஓ பிளேக்கிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையின்போது தாம் பிரசன்னமாகியிருந்தால் வேறுவிதமான முடிபுகள் கிடைக்கப்பெற்றிருக்கும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு மின்சார நாற்காலி தண்டனை விதிக்க அமெரிக்கா முனைப்புக் காட்டி வருகிறது.

அதேவேளை அரசாங்கத்திற்கும் *(24ஆம் பக்கம் பார்க்க)*

## வடமராட்சி மீனவர்களும் நேற்று தொழில் பகிஷ்கரிப்பு

எரிபொருள் விலை அதிகரிப்பினை கண்டித்து வடமராட்சியை சேர்ந்த மீனவர்கள் நேற்றுப் பகல் தொழிலுக்கு செல்லாது பகிஷ்கரிப்பு போராட்டத்தில் குதித்துள்ளனர். நாடளாவிய ரீதியில் இன மத எல்லை கடந்து எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிராக மீனவர்கள் ஆர்ப்பாட்டங்களிலும் பகிஷ்கரிப்புகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். மன்னார் மற்றும் நீர்கொழும்பு பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் வீதிகளை வழிமறித்து போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் நேற்று வடமராட்சியைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று காலை எட்டு மணியுடன் தொழில் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். காலை கரை திரும்பிய மீனவர்கள் எவரும் பகல் தொழிலுக்குச் செல்லவில்லை. (ந-8,11)

## கொழும்பில் நேற்று இருள் சூழ்ந்த காலநிலை



கொழும்பில் நேற்று பிற்பகல் 3.45 மணியளவில் வானம் இருட்டி கடும் மழை பெய்தது.

இதனால் பகல் வேளை இரவுபோல் காட்சியளித்தது.

திடீரென பெய்த கடும் மழையினால் கொழும்பு நகரின் பல வீதிகள் நீரில் மூழ்கியதோடு பாரிய வாகன நெரிசலும் ஏற்பட்டது.(ந-8,11)

## ஆலோசனைக் குழுவில் சவேந்திர சில்வாவா? பான் கீ மூனிடம் நவநீதம்பிள்ளை கேள்வி



ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்

படைக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இலங்கையின் முன்னாள் படைத்துறை அதிகாரியும், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுமான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கேள்வி எழுப்பியுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அந்த நியமனம் தொடர்பில் தனது ஆழ்ந்த கவலையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் வெளியே வந்த ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் நேற்று முன்தினம் சவேந்திர சில்வாவின் நியமனம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், இது கவலைக்குரிய விடயம்.பரிசீலனை விடயத் தில் ஐக்கிய நாடுகள் சபை மிகவும் தெளிவான கொள்கையைக் கொண்டது. இது எனது பணியகம் செய்யும் வேலையின் ஒரு பகுதியாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மனிதவுரிமை மீறல்களைப் புரிந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் தனிநபர்கள் பற்றிய *(23ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கை ரூபாய் பெறுமதி வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று 120 ரூபாய் 10 சதமாகக் குறைவடைந்தது.

வரலாற்றில் டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் மிகக் குறைந்த பெறுமதி இதுவாகும்.

நாணயப் பரிமாற்ற வீதத்தில் இலங்கை மத்திய வங்கி தனது தலையீட்டை விலக்கிக் கொண்டதையடுத்து இவ்வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# றுகுணு பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றத்தை யடுத்து தமது வாழ்க்கைச் சுமையை குறைக்குமாறு வலியுறுத்தி, றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் தமது வளாகங்களுக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இம் மாதத்திலிருந்து தமது விடுதிக் கட்டணத்தை அதிகரிக்கப்போவதாக பல்கலைக்கழக நிர்வாகம் தமக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக றுகுணு பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவர் நந்திக குணசேகர கூறினார்.

விடுதிகளைப் பராமரிக்கப் பணம் தேவையாகவுள்ளதால் இந்தக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

வசதி குறைந்த மாணவர்கள் மீது இது மேலும் சுமையேற்றுவதாகவுள்ளது.

றுகுணு பல்கலைக் கழகத்தில் வலுக்குறைந்த மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

விடுதிக்கட்டண அதிகரிப்பால் இவர்கள் மிக மோசமாக பாதிக்கப் படுவர் என அவர் கூறினார். (ந-8,11)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம்முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் திருமதி விசுவலிங்கம் வடிவமலர்

கொடுக்குளாய் வீதி, ஆழியவளையைச் சேர்ந்த எமது குடும்பக் குலவிளக்கு விசுவலிங்கம் வடிவமலர் 17.01.2012 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எங்களின் துயரினை பகிர்ந்து கொண்டவர்களுக்கும், நிதி மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், தொலைபேசி மற்றும் ஏனைய வழிகளில் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிக் கிரியைகள் வரை எங்கள் துயரத்தில் பங்கு கொண்டு பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 16.02.2012 ஆம் திகதி வியாழக்கிழமை இல. 46, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

எங்கள் குடும்பகுல விளக்கின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் குடும்பத்தினர்

இல. 46, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.
தொலைபேசி: 0777437153

(C-5857)

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்”

## முழங்காவில் சபரிமலை ஐயப்பன் கோவில் மண்டலாபிஷேக பூர்த்தி வைபவம்



முழங்காவில் 31 ஆம் கட்டை சபரிமலை ஐயப்பன் ஆலய கும்பாபிஷேக நிகழ்வை இட்டு மண்டலாபிஷேக பூர்த்தி நாளாகிய 18.02.2012 அன்று சனிக்கிழமை காலை 7 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும் அஷ்டோத்திர சங்காபிஷேகத்தினை முன்னை நாள் வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் கோவில் குருக்களும் தற்போதைய முழங்காவில் செல்வயோக விநாயகர் ஆலய பிரதம குருக்களும் ஆகிய பிரம்மஸ்ரீ ஜெகநாதக்குருக்கள் நடத்தி வைப்பர். அன்று விசேட பூசையுடன் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்

அன்னதானம்: கிருஷ்ணா பாம், கிருஷ்ணா மானிப்பாய்
தொடர்புக்கு :- பிரம்மஸ்ரீ ஜெகநாதக்குருக்கள்
077 1023789, 077 6420417

(C-5853)

## மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் நடராசா



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நடராசா அவர்கள் 13.02.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அழகம்மாவின் அன்புக் கணவரும், தங்கராசாவின் அன்புச் சகோதரனும், பரமசிவம் (கனடா), ஜெயலிங்கம் (லண்டன்), ஜெயலச்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, வவா, கனகநாயகம் ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், கீர்த்தனா, குகதர்சன், நந்துசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 16.02.2012 வியாழக்கிழமை பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று உடலம் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

காளிகோவில் வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.

(C-5859)

## குத்தகை ஏலத்தில் விடல் 2012
## கரைச்சிப் பிரதேசசபை கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க் காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இறைச்சிக் கடைகளை 2012ம் ஆண்டுக்கு மீள ஏலத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கமைய ஏலம் கோரப்படுகிறது.

ஏலம் விடப்படும் திகதி- 29.02.2012 மு.ப 10.00 மணிக்கு
ஏலம் விடப்படும் இடம்- கரைச்சிப் பிரதேசசபை தலைமை அலுவலகம்

| இல. | குத்தகையின் பெயர் | ஏலவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|
| 01. | பரந்தன் ஆட்டிறைச்சிக்கடை | 5000.00 |
| 02. | உருத்திரபுரம் D10 கோழியிறைச்சிக்கடை | 5000.00 |
| 03. | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 10000.00 |
| 04. | வட்டக்கச்சி மாட்டிறைச்சிக்கடை | 10000.00 |
| 05. | உருத்திரபுரம் D8 மாட்டிறைச்சிக்கடை | 10000.00 |

நிபந்தனைகள்

1. ஏலத்தில் பங்குபற்றுபவர் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணமும் அதன் பிரதியும் கொண்டுவருதல் வேண்டும்.
2. ஏலத்திற்கான வைப்புப் பணத்தை செலுத்திய பின்னரே ஏலத்தில் பங்குபற்ற முடியும்.
3. கடந்த காலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் ஏலத்தில் பங்குபற்றத் தவறியவர்களாவர்.
4. ஏலத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
5. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதி பணத்தினை உடனடியாகச் செலுத்தி சபையுடன் ஒரு ஒப்பந்தம் செய்தல் வேண்டும். தவறின் அவரின் பெயர் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்படுவதுடன் ஏல வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
6. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் காலம் முதல் கடையை நடாத்த முடியும்.
7. மேலதிக விபரங்களை கரைச்சிப் பிரதேச சபையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

கரைச்சிப்பிரதேசசபை,
கிளிநொச்சி.

வைத்திலிங்கம் குகராஜா
தவிசாளர்.

(C-5858)

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்

## திருமதி அன்னப்பிள்ளை சொர்ணவடிவேல்

(மாசிலாமணி)

பிறப்பு
1929 . 02 . 20



இறப்பு
2012 . 02 . 01

*அறிவில் ஆற்றலில் பாசத்தில் சிறந்த உள்ளத்தில் உயர்ந்து பல்லோரும் போற்ற வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வம்*

திருமதி அன்னப்பிள்ளை சொர்ணவடிவேல் அவர்களின் *அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 15.02.2012 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.*

சண்டிலிப்பாய் மத்தி
சண்டிலிப்பாய்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(7496)

## இன்று ஒரு தகவல்

# எது விரதம்

ஓர் ஊரிலே ஒரு துறவி இருந்தார். அவர் விதிமுறைகளை மீறாதவர். கடுமையாக விரதங்களை கடைப்பிடித்து வருபவர். ஆதவன் உதயமான பின் ஆகாரம் எதையும் தொடமாட்டார். தண்ணீர் கூட குடிக்க மாட்டார்.

அவருடைய நெறிதவறாத தன்மை கடவுளையே ஆச்சரியப்பட வைத்தது.

அவருக்காக ஏதாவது செய்யவேண்டுமென நினைத்தார் கடவுள். என்ன செய்வது?

எப்போதுமே நிலைத்து இருக்கிற மாதிரி ஒரு காரியம் செய்தார்.

அவரது நெறிதவறாத தன்மையைப் போற்றுவதற்கு ஆகாயத்திலே ஒரு விண்மீனை உண்டாக்கினார்.

அதுவும் பகல் நேரத்திலே தெரியக்கூடியவாறு உண்டாக்கினார்.

ஒருநாள் அந்தத் துறவி பக்கத்தில் இருந்த மலை உச்சிக்குப் போகவேண்டியிருந்தது. அதற்காக காலை நேரத்திலேயே புறப்பட்டார்.

அப்போது அந்த ஊரிலே இருந்த ஒரு சிறியவயது சிறுமி "எங்கே போகிறீர்கள் தாத்தா? என்று விசாரித்தாள்.

"அதோ–அந்த மலை உச்சிக்குப் போகிறேன்" என்று கூறினார்.

"அப்படியென்றால் நானும் வருவேன்" என்று அடம் பிடித்தாள் சிறுமி. எவ்வளவோ சொல்லிப்பார்த்தார்–சிறுமி கேட்ட பாடில்லை.

"சரி வா!" என்று அழைத்துக்கொண்டு கிளம்பினார்.

இரண்டு பேரும் ஒரு ஒற்றையடிப் பாதை வழியாக மலை மேலே ஏற ஆரம்பித்தார்கள். சிறிது தூரம் சென்றபின்னர் வெயிலின் தாக்கம் அதிகரிக்க தாகம் எடுத்தது.

"தாத்தா தண்ணீர் வேண்டுமென்றாள்" அந்தச் சிறுமி. உடனே அவர் குடிக்கக் கொடுத்தார்.

"தாத்தா நீங்கள் குடித்தால்தான் நான் குடிப்பேன்" என்று பிடிவாதம் பிடித்தாள் அந்தச்சிறுமி.

அவர்தான் பகல் நேரத்திலே எதுவும் சாப்பிடமாட்டார்.

"நான் இப்போது விரதத்திலே இருக்கிறேன்... ஆதவன் உதயமான பின்னர் நான் எதுவுமே சாப்பிடமாட்டேன். தண்ணீர் குடிக்க மாட்டேன்" என்றார்.

அந்தச்சிறுமி அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவே இல்லை... அவர் சொன்னதை காதிலே எடுக்கவேயில்லை.

"அது எல்லாம் முடியாது... நீங்கள் தண்ணீர் குடித்தே ஆக வேண்டும்" என்று அழுதபடி அடம்பிடித்தாள்.

இவர் என்னென்னவோ எல்லாம் சொல்லிப்பார்த்தார். எதற்குமோ சிறுமி உடன்படுவதாகத் தெரியவில்லை. பிடிவாதமாக இருந்தாள்.

துறவிக்கு மிகவும் சங்கடமாகப் போய்விட்டது. என்ன செய்வது? ஒரு புறம் விரதம்! மறுபுறம் சிறுமியின் தாகம்.

எது முக்கியம்? சிறிது நேரம் குழப்பம். அதன்பின் அவர் ஒரு முடிவுக்கு வந்தார்.

தண்ணீரைப் பருகினார். அதன் பின் அந்தச் சிறுமியும் தண்ணீரைக் குடித்தாள். சிறுமியின் தாகம் தணிந்தது.

மறு படியும் அவர்கள் தங்களின் பயணத்தை ஆரம்பித்தார்கள்.

அந்தத் துறவி தலைகுனிந்த படியே நடந்தார்.

ஆகாயத்தை நிமிர்ந்து பார்க்க அவருக்குத் துணிவில்லை.

"விண்மீன் இருக்காது..." என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

உச்சிக்குப்போய் சேர்ந்தார். "அப்பாடா!" என்று கூறிக்கொண்டு ஒரு மரத்தடியிலே உட்காந்தார். அதன் பின்னர் மெதுவாக ஆகாயத்தைப் பார்த்தார். அங்கே இரண்டு விண்மீன்கள் இவருக்காக ஒளிவீசிக்கொண்டுருந்தன.

"எது விரதம்" என்ற கேள்விக்கான விளக்கம் அவருக்குக் கிடைத்தது.

அடுத்தவர்கள் தவிக்கிற போது... அந்தத் தவிப்பைப் நீக்குவதற்கு நாம் தடம் மாறிப்போனாலும் அது பிழை இல்லையென்பதுதான் பொருள்.

ஒருவன் சொன்னான்; "இன்னொருவர் கஷ்டப்படும் போது அதை ஒரு நிமிடம் கூட என்னால் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது" என்றார்.

"என்ன செய்வாய்" என்று கேட்டேன்.

"உடனே என் இரண்டு கண்களையும் இறுக்கமாக மூடிக் கொள்வேன்" என்று சொன்னான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிளி.அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு 75 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது

## அ.மு.பிரிவின் உதவிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் பிரதேச செயலக ரீதியாக அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாக கிளி.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கான நடப்பாண்டுக்குரிய புதியதெரிவுகள் பிரதேச செயலாளர்கள் தலைமையின் கீழ் நடைபெற்று வருகின்றது.

இதனடிப்படையில் கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி பூநகரி பிரதேச செயலர் பிரிவிலும் முதலாம் திகதி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலும் இடம் பெற்றது.

அத்தடன் இன்று புதன்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் பிரதேச செயலர் ரி.முகுந்தன் தலைமையில் கிளி.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மாவட்ட உதவிப்பணிப்பாளரின் நெறிப்படுத்தலில் இடம் பெறவுள்ளதாக தெரிவித்தார்.

இக்குழுக்களின் தெரிவின் போது கிராம சேவகர்கள், அரச திணைக்களங்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதிக்குழுக்களின் தெரிவு கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் இடம்பெறவுள்ளது.

தற்போது அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டத்தில் இவ் அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு 75 மில்லியன் ரூபா கடந்த 2010ஆம், 2011ஆம் ஆண்டுகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களது வீடுகள் புனரமைப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்நிதியின் மூலம்கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 3 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவீதம் உதவி வழங்கப்பட்டதாகவும் அதேபோன்று விவசாய நடவடிக்கையின்போது கடும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எட்டு தூவல் பாசனத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 100 பேருக்கு தச்சுவேலை உபகரணத் தொகுதியும் 100 பேருக்கு மேசன் வேலை உபகரணத் தொகுதியும் வழங்கப்பட்டதுடன் இலங்கையின் தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது வறட்சியால் பாதிக்கப்பட்ட 493 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணத் தொகுதியும் வழங்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-15)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.வலய உடற் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சன் தயாளன், சிறப்பு விருந்தினராக மார்டீன் குருமடப் பொறுப்பாளர் அருட் தந்தை சாள்ஸ், கௌரவ விருந்தினராக ஜோன் கவாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 25 | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 40 | 50 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 70 |
| தக்காளி | 20-25 | 30 | 30 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 20 | 30 |
| கோவா | 30 | 30 | 40 |
| கரட் | 60 | 40 | 50 |
| பூசணி | 30 | 30 | 30 |
| புடோல் | 20 | 60 | 40 |
| வாழைக்காய் | 30-45 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 60-65 | 50 | 55 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 60 |
| பாகற்காய் | 60 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | - | 40 | - |
| பயற்றங்காய் | 100 | 100 | 130 |
| லீக்ஸ் | 70 | 90 | 70 |
| பீற்றூட் | 40 | 30 | 40 |
| கறிமிளகாய் | 70 | 80 | 90 |
| முருங்கைக்காய் | 350-400 | 500 | 340 |
| போஞ்சி | 20-25 | 30 | 30 |
| கத்தரிதம்புள்ள | 15 | 10 | 15 |
| கீரை - 1 பிடி | 4-7 | 5-12 | 10 |
| தேசிக்காய் | 30-35 | 30 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 25 |
| வெங்காயப்பூ | 80 | 90 | 90 |

# இராசி பலன்

*15.02.2012*
*(மாசி 03, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.33 மணிக்கு*
*அட்டமி பிற்பகல் 12.28 மணிவரை*
*அனுசம் பின்னிரவு 3.13 மணிவரை*
*இராகுகாலம் 12.33-2.03 மணிவரை*
*சுபநேரம் 5.03-6.33 மணிவரை*
*அமிர்த சித்தம்*

**மேடம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், கொடுக்கல் - வாங்கல்களில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**இடபம்** வெளியூர் தொடர்புகளால் நன்மையுண்டு, மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், நண்பர்களின் சந்திப்புண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், தொழிலில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் விலகும், கௌரவமான நாள்.

**கடகம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், கல்வி முன்னேற்றம் கருதி சில செலவுகள் ஏற்படலாம், அடிப்படை வசதிவாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள முன்வருவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**சிங்கம்** அஞ்சல் வழியில் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், தொழிலை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், தாய்வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், வாகன சுகமுண்டு.

**கன்னி** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், பணத்தேவைக்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், நேற்றைய பிரச்சினை ஒன்று இன்று நல்ல முடிவுக்கு வரும்.

**துலாம்** விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையால் காரியம் சாதிப்பீர்கள்.

**விருச்சிகம்** விரும்பிய காரியம் விரும்பிய படியே நடைபெறும், குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து செல்வது நல்லது, பொருளாதார நிலை திருப்திதரும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**தனுசு** பக்குவமாக பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், ஊர்மாற்றம் இடமாற்றம் என்பன ஏற்படலாம், பண விரையம் அதிகரிக்கும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**மகரம்** இயல்பான வாழ்க்கையில் இன்பம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்பு உங்கள் தகுதியை உயர்த்தும், பொருளாதார நிலை உயரும், காரியங்கள் கைகூடும்.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும், ஆதரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், சுபசெய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியம் கைகூடும், பொருளாதார நிலை திருப்திதரும்.

**மீனம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், திடீர்பயணங்களினால் நன்மையுண்டு, எதிரிகள் விலகுவர், தந்தைவழி உறவினர்களால் நன்மையுண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**வளவன்**

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் கே. சசிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு ,கிழக்கு மாகாண கல்வி , கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலா, சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மருந்தக மேற்பார்வையாளரும் உடுவில் சுகாதார மருந்தக அலுவலருமான டாக்டர் எ.ஜெயகுமரன், சுன்னாக பொலிஸ் பொறுப்பதிகாரி ஜி .டி.ஆர். கங்கநாத் , கௌரவ விருந்தினராக பழைய மாணவனான செல்லையா இராஜகோபால் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் அ. அகிலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர் ரவீந்திரன் , கௌரவ விருந்தினர்களாக அண்ணா தொழிலக அதிபர் என்.பி. நடராசா, யாழ்ப்பாண நில அளவைத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் பி. சந்திரநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# சிறுவர்களின் உரிமையைப் பாதுகாக்க அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம்

## பொலிஸ் சிறுவர் பிரிவு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கு பொதுமக்கள் முன்வரவேண்டும் என யாழ். பொலிஸ் நிலைய சிறுவர் பிரிவு அறிவித்துள்ளது.மிகக் குறுகிய காலத்தில் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இவற்றை கட்டுப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்.

இருப்பினும் சில சம்பவங்கள் பொலிஸாருக்கு மறைக்கப்படுகின்றன. இதனால் அப்பிரதேசங்களில் இவ்வாறான சம்பவங்கள்.அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

சம்பவங்கள் நடைபெறும் இடங்க ளுக்கு அருகிலுள்ள அயலவர்கள் அச்சம் பவம் தொடர்பாக நேரிலோ அல்லது தொலைபேசிமூலமாகவோ அறிவிக்க முடியும்.

மிகக் கொடூரமான முறையில் நடைபெறும் இச்சம்பவங்கள் மறைக்கப்படுவது நியாயமற்றது.

எனவே, சிறுவர்களின் உரிமையை பாதுகாப்பது தொடர்பில் அனைவரும் விழிப்பாக இருந்து பொலிஸாரோடு இணைந்து செயலாற்ற முன்வரவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

# ஒரு மாதசிறை அனுபவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ்நிலையத்தில் மதுபோதையில் நடமாடிய நபர் ஒருவர் ஒரு மாத சிறைத்தண்டனை அனுபவித்து வீடு திரும்பினார்.

யாழ். பொலிஸாரினால் குறித்த நபர் பொது இடத்தில் மது போதையில் நடமாடினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு யாழ். நீதவான் மா. கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கினை விசாரித்த நீதவான் குறித்த நபர் ஒருவர் ஒருமாத சிறைத்தண்டனையை அனுபவிக்க உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# மின்தடைபற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும் இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின்விநியோகம் தடைப்படும் என யாழ்.பிரதேச மின் பொறியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம்ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வி.எஸ். வீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விசேட விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக கணக்காளர் வி.கிருபாகரன், யாழ். மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தலைவர் வி. ஸ்ரீசக்திவேல் ஆகியோர் கலந்து கொள்வர் என செயலாளர் சி.க. லோகநாதன் அறிவித்துள்ளார்.

இப்பொதுகூட்டத்தில் கரவெட்டி பிரதேச ஓய்வூதியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார்.

அத்துடன் புதுவருட உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெறும். (அ)

# தடகளப்போட்டிகள்

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் விளையாட்டு விழாவில் இருபாலாருக்குமான தடகளப்போட்டிகள் எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் காலை 6 மணிக்கு இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 6 மணிக்கு 5 ஆயிரம் மீற்றர் ஓட்டம். அதனைத் தொடர்ந்து சுவட்டு நிகழ்ச்சிகள் என்பன நடைபெறவுள்ளன.

இதில் பங்கு பற்றும் கழகங்கள் உரிய நேரத்திற்கு சமுகம் தந்து போட்டியில பங்கு பற்றுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர் (அ-3-24)

# அபிவிருத்தி மற்றும் பழையமாணவர் சங்கங்களே பாடசாலையின் இரு தூண்கள்

## சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு

(கரவெட்டி)

வடமராட்சிப் பிரதேச கிராமப்புற பாடசாலைகளில் அதிகமான பாடசாலைகளில் அபிவிருத்திச்சங்கம் பழைய மாணவர் சங்கம் சிறப்புற இயங்காமையினாலேயே பாடசாலைகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதென சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வடமராட்சி பிரதேசத்தில் அதிகமாக தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான பாடசாலைகள் மற்றும் தரம் 1 தொடக்கம் தரம் 11 வுரையான பாடசாலைகள் அதிகமாக கல்வி, விளையாட்டு , கலை, ஒழுக்கம் என்பனவற்றில் பின்னடைவில் உள்ளது.

இதற்கு அக்கிராம சமூகத்தினரே முக்கிய காரணமர்க உள்ளனர் குறிப்பாக தமது பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கும் பழைய மாணவர் சங்கத்திற்கும் தகுதியானவர்களை நியமிக்காமையினாலேயே அதிகமான பாடசாலைகளின் வளர்ச்சி , அபிவிருத்தி என்பனபின்னடைவை சந்தித்துள்ளது.

எதிர்காலங்களில் பாடசாலைகளில் மேற்குறித்த இரு நிர்வாகங்களிலும் தகுதியானவர்கள் நியமிக்கப்பட்டு சிறந்த முறையில் செயற்படுமானால் அதிக பாடசாலைகளின் வளர்ச்சியும் அபிவிருத்தியும் சிறந்த முறையில் வளர்ச்சிப்பாதையை அடையும்எனசமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (அ-3-24)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் சித்திவிநாயகர் சனசமூக நிலையம்

(பருத்தித்துறை)

நாகர்கோவில் மேற்கு சித்தி விநாயகர் சனசமூக நிலையம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் உள்ளதாக நிலைய நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் 3 தடவைகள் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைளினால் சனசமூக நிலையத்தின் செயற்பாடுகள் செயல் இழந்துள்ளதாகவும் இதனால் மீள இயங்க முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கும் அவர்கள் அரச மற்றும் பொது அமைப்புக்களின் உதவியை நாடியுள்ளனர்.

ஆயினும் இதுவரை எவரும் உதவ முன்வர வில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றனர்.

எனவே, உரியவர்கள் இச்சனசமூக நிலையத்தின் வளர்ச்சியைக்கருத்திற்கொண்டு உதவ முன்வரவேண்டும் என நிர்வாகிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-10)










வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் உட்பட விருந்தினர்கள் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரவேற்கப்படுவதனையும் மாணவிகளின் இசையும் அசைவும் நிகழ்வு இடம்பெறுவதையும் பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி ந. யமுனாநந்தகுமார் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு வெற்றிக் கேடயம் வழங்கி கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

# உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இங்கு எரிபொருள் விலை குறைவு

## அமைச்சர் யாப்பா கூறுகிறார்

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்திருப்பதால் இலங்கையிலும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த விலை அதிகரிப்பால் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் சம்பந்தப்பட்ட துறையினருக்கு எரிபொருள் மானியங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக சுற்றாடல் வளத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை சாதாரணமான நிலையிலேயே காணப்படுகிறது எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர் இலங்கையில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் விலை மாற்றத்தால் பொதுமக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாமலிருப்பதற்குத் தேவையான எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்திருப்பதால் இலங்கையிலும் எரிபொருள்களின் விலையில் மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டதாகக் குறிப்பிட்ட பெற்றோலிய வளத்துற்ற அமைச்சின் செயலாளர் டாக்டர் சமரதுங்க எரிபொருள்களின் விலையை அதிகரித்திருக்காவிட்டால் அரசாங்கத்துக்கு 188.5 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருக்கும். எனினும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டிருப்பதால் இந்த நட்டத்தை 63.3 மில்லியன் ரூபாவாக குறைக்க முடிந்தது என்று கூறினார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதால் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்குவது தொடர்பில் தனியார் பேருந்து சேவையில் ஈடுபட்டிருக்கும் சுங்கப் பிரதிநிதிகள் திறைசேரி அதிகாரிகள் மற்றும் தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சின் அதிகாரிகளுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டது என அமைச்சர் சி.பி.ரட்நாயக்க தெரிவித்தார். பேருந்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு அவற்றின் சேவை தூரத்திற்கு அமைய நாளாந்தம் டீசல்களை வழங்குவதற்கு இந்தக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது. இதற்கு அனைத்து தனியார் பேருந்து சேவை சங்கங்களும் இணங்கி இருந்தன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இது இவ்விதமிருக்க எரிபொருள்களின் விலை அதிகரித்திருப்பதால் மின்சார சபைக்குக் கொள்வனவு செய்யப்படும் எரிபொருள்களின் விலையும் அதிகரிக்கிறது. மின்சார சபைக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்யும் முறை தொடர்பில் சுயாதீன ஆணைக்குழுவிடம் ஆலோசனை கோரியிருப்பதாக மின்சக்தி மற்றும் சக்தி வலுத்துறை அமைச்சின்செயலாளர்எம்.எம்.சி.பேர்டினஸ் இதன்போது தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன பெற்றோலியவளத்துறை அமைச்சின் செயலாளர் டாக்டர் சமரதுங்க மின் சக்தி மற்றும்சக்திவலுத்துறைஅமைச் சின் செயலாளர் எம்.எம்.சி.பேர்டினஸ் திறைசேரியின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

# மீன்பிடி படகுகளுக்கு காப்புறுதி

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

மீன்பிடி சட்டத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ள புதிய திருத்தங்களின் கீழ் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் படகுகளில் உள்ள மீனவர்கள் உயிர்க்காப்பு அங்கிகளை அணிந்திருப்பது கட்டாயமாக்கப்படவுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் அனைத்து மீன்பிடிப் படகுகளும் புதிய காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்படுவது கட்டாயமாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். காப்புறுதி பெறாத மீன்பிடி படகுகளின் பதிவுகள் இரத்துச் செய்யப்படும் என அவர் கூறியுள்ளார்.

சிறிய சேதங்களுக்கு தனியார் காப்புறுதித் திட்டங்கள் நஷ்ட ஈடுகளை வழங்குவதில்லை. இதனால் புதிய திட்டத்தில் சிறிய சேதங்களையும் உள்ளடக்குவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# படகுச்சேவை இடம்பெறாது

(நெடுந்தீவு)

நெடுந்தீவிற்கான குமுதினி படகுச்சேவையானது திருத்த வேலை காரணமாக எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறமாட்டாது என நெடுந்தீவு பிரதேச செயலாளர் ஏ.சிறி அறிவித்துள்ளார். (அ)

# வேலை தேடுவோர் விபரம் திரட்டுதல்

கோப்பாய் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகளின் விபரங்கள் திரட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. என பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை கிராம சேவையாளரிடம் பெற்று பூர்த்தி செய்து படிவங்களை கிராம சேவையாளரிடம் ஒப்படைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


## தூரிகையின் புதிய பயிற்சி வகுப்புக்கள்



1. உடையமைத்தல் (தையல்)
2. கேக் ஐசிங்
3. மணப்பெண் ஒப்பனை
4. பேஷியல், ஐபுறோ ஷேப்பிங்
5. கூந்தல் அலங்காரம்

✦ மேலும் விரிவான விபரங்களை எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

✦ மேற்படி பயிற்சிகளில் விரும்பிய தனி ஒரு பயிற்சியிலும் கலந்து கொள்ளலாம்.

✦ ஆரம்ப பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தூரிகை நுண்கலை வளாகம்
11, பொன் கந்தையா பாதை,
ம.ம.வி.வீதி, நெல்லியடி.

(சு/5852)


# கஹவத்தை இரட்டைக்கொலை; தகவல் தருவோருக்கு சன்மானம்

## பொலிஸார் அறிவிப்பு

(கொழும்பு)

இரத்தினபுரி கஹவத்தை இரட்டைக் கொலை சந்தேக நபர்கள் தொடர்பான சரியான தகவல்களை வழங்குபவர்களுக்கு 10 இலட்சம் ரூபா சன்மானம் வழங்க பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

0777887744 மற்றும் 077 3350556 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

கஹவத்தைப் பகுதியில் 19 வயதான மகளும் 52 வயதான அவரது தயாரும் அண்மையில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை இனங்காண்பதற்காக விசேட பொலிஸ் குழுக்களும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பினை எதிர்பார்ப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். சந்தேக நபர்கள் அல்லது கொலையுடன் தொடர்புடைய ஏனைய நபர்கள் தொடர்பிலான சரியான தகவல்களை பொதுமக்கள் வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தகவல்களை வழங்கும் நபர் களின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)


## இளைய வளர்ப்பு வாழைக்கன்றை ஏன் நாட்ட வேண்டும்

- உயரம் குறைவானது. காற்றினால் ஏற்படும் சேதம் தவிர்க்கப்படும்.
- குறுகிய காலத்தில் அறுவடையைப் பெறலாம். (8 மாதங்களில்)
- அதிக எடையுடைய குலையைப் பெறலாம் (40 kg 50kg வரை)
- குருக்குத்தி நோயில் இருந்து பாதுகாப்பு
- அதிக கண்டுகளை குறுகிய இடத்தில் நடமுடியும் (3 அடிக்கு ஒன்று)
- குட்டிகளில் இருந்தும் அதே அளவு பயனை பெறக்கூடியது.
- குறைவான நீர்ப்பாசனம்
- அதிகளவான வருமானம்.

எமது நிறுவனத்தில் இளைய வளர்ப்பு அன்னாசி கண்டுகள் மற்றும் அனைத்து வகையான பயன் தருமரங்கள் அலங்கார சாடிகள் என்பன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவு இலக்கம் SA/JAF/02677

"மரம் நடுவோம் பயன்பெறுவோம்"

பவிசாரு பூங்கனிச்சோலை,
311/1, பலாலிவீதி,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.

தொ.பே.இல.
0212228199,0773976203,
071 8475629.

(சு/5852)



## 60 வது பிறந்த தின வாழ்த்துக்கள்



### சி.சிவபாலசிங்கம்

கிராம அலுவலர் பொலிகண்டி மேற்கு

ஆலமரத்தின் வேராக
நிழல் தரும் மரமாக– எமது
கிராமத்தை விருட்சமாக
வளர்த்திட்ட
பாசமிகு சிவபாலசிங்கம் ஐயா!
இன்று போல் என்றும்
எல்லா நலனுடனும் –நற்
கடமைகளுடனும்
இனிதாக வாழ்ந்திட
அகவை அறுபதில்
அழகு நலம் அளிக்கும்
அன்புக் கணபதி அருள் புரிய
பொன்னிறமாக மின்னும்
விண்மீன்களோடு
செம்மீன் குடும்பங்களும்–மேற்கு
கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க
குடும்பங்களும்–வாழ்க
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்
பொலிகண்டி மேற்கு
கடற் தொழிலாளர் சங்கமும்
செம்மீன் சனசமூக நிலையமும்

(சு/5846)

# பாவனையாளர்களுக்கு பாதுகாப்பான உணவு கிடைப்பதை உறுதி செய்யும் வேலைத்திட்டம்

சுகாதார சேவைகளை வழங்குவதில் யாழ். மாவட்டம் இலங்கையிலேயே முன்மாதிரியான மாவட்டமாக கணிப்பிடப்பட்டுள்ளது. எமது மாவட்டத்தில் வளப்பற்றாக்குறைகள் மத்தியிலும் பல்வேறு சுகாதார மேம்பாட்டு வேலைத் திட்டங்கள் மக்கள் மற்றும் ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதா்ர சேவைகள் பணிமனை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

எனினும் குடல்சார் தொற்று நோய்களான நெருப்புக் காய்ச்சல், வயிற்றுளைவு, வயிற்றோட்டம், செங்கமாரி போன்ற நோய்களை பொறுத்தமட்டில் நாட்டில் எமது மாவட்டமே நீண்ட காலமாக அதிகளவிலான நோய்த் தொற்றுக்களை கொண்டதாக காணப்படுகின்றது.

இதற்கு முக்கியமான காரணம் உணவகங்களில் சுகாதார நிலைமைகள் சரியாகப் பேணப்படாமையால் மக்களுக்கு பாதுகாப்பான உணவு கிடையாமையாகும்.

இதனைக் கருத்திற்கொண்டு ஏற்கனவே பொலநறுவை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றியளித்த பாவனையாளர்களை மையப்படுத்திய உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை எமது மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதற்கு பொதுமக்கள் , உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள், உணவு கையாளுவோர் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடகங்கள் போன்றவற்றின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது.

இதனடிப்படையில் உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள், உணவு கையாளுவோர், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், பொதுமக்கள் போன்றோருக்கு மாவட்டத்தில் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் விழிப்புணர்வுச் செயலமர்வுகள் மூலமாக கருத்துப் பகிர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு பாதுகாப்பான உணவு கையாளுதல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு திருத்தங்களை மேற்கொள்வதற்கு போதுமான கால அவகாசமும் மாவட்ட மட்ட செயற்பாட்டுக் குழுவினாலும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர்களாலும் வழக்கப்பட்டது.

சுகாதார வசதிகள், • பாதுகாப்பான உணவு கையாளுதல் போன்றவை தரமதிப்பீட்டு படிவத்தின் உதவியுடன் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டு உணவு கையாளும் நிலையங்கள் A,B,C,D என்ற நான்கு தரங்களில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் A சிறந்த தரத்தினையும் B திருப்திகரமான நிலைமையையும் C முன்னேற வேண்டிய நிலைமையையும் D தரக்குறைவான நிலைமையையும் குறிப்பிடுகின்றது.

இதனடிப்படையில் அனைத்து உணவு கையாளும் நிலையங்களினதும் அந்தந்த நிலையங்களின் தர மதிப்பீட்டுக்கான சான்றிதழ்கள் சுகாதார திணைக்களத்தினால் குறித்த கால இடைவேளையில் மீள்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இச்சான்றிதழ்களை வாடிக்கையாளருக்கு தெரியத்தக்க வகையில் ஒவ்வொரு உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களும் வைத்திருக்க வேண்டியது கட்டாயமாகும். இச்சான்றிதழ்களின் அடிப்படையில் குறித்த உணவு கையாளும் நிலையத்தின் தரத்தை வாடிக்கையாளர் ஒவ்வொருவரும் இலகுவாக அறிந்து கொள்ள முடியும்.

தரக்குறைவான இடங்களை தவிர்த்து தரமான இடங்களில் தமது உணவுத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுமாறு மக்களை சுகாதாரத் திணைக்களம் கேட்டுக் கொள்கின்றது. இதன் மூலம் மக்களுக்கு பாதுகாப்பான உணவு கிடைப்பதை உறுதி செய்வதுடன் உணவு கையாளுவோரின் செயற்பாடுகளையும் சாதகமாக மாற்றிக் கொள்ளமுடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நீங்கள் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யுமிடங்களில் குறைபாடுகளை கண்டால் உடனடியாக அப்பகுதிக்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் அல்லது சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்பு கொண்டு உங்களது முறைப்பாடுகளைத் தெரிவித்துக் கொள்ள முடியும். (அ)

## சிங்களவர்களின் காணிகளை வழங்கக்கோரி உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் உள்ள மங்களராம விகாராதிபதி வண அம்பிட்டிய சுமனரத்ன தேரர் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

நேற்றுக்காலை தொடக்கம் இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மக்களின் காணிகள் சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்டு போலி உறுதிகள் கொண்டு தயாரிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவற்றினை மீட்டு அம்மக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கையெடுக்க கோரி வலியுறுத்தியே அவர் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

மேலும் மட்டக்களப்பு மாவட்ட அரச அலுவலகங்களில் சிங்கள மொழி பயன்பாட்டில் இல்லை என்பதால் அங்குள்ள சிங்கள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேரரின் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பில் உள்ள சில சிங்கள, முஸ்லிம் மக்களும் பதாகைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (அ-2)

## கெற்பெலி வீதியை புனரமைக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

சுமார் 40 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாது மணல் வீதியாக காணப்படும் கெற்பெலி பாடசாலை வீதியினை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கெற்பெலி பாடசாலையில் தொடங்கி கடற்கரை வரையான மேற்படி வீதி சுமார் 2 கிலோமீற்றர் நீளம் உடையதாகும்.

கடல் ஏரியில் தொழில் புரிபவர்களும் வீதியை அண்டியுள்ள குடும்பங்களும் மேற்படி வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வீதியால் கனரக வாகனங்கள் பயணம் செய்வதால் இவ்வீதியில் பல இடங்கள் குன்றும் குழியும் காணப்படுகின்றன.

எனவே,இவ்வீதியால் வாகனங்கள் செல்ல முடியாதுள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, மக்களின் நலன் கருதி உரிய தரப்பினர் இவ்வீதியை புனரமைத்து போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-29)

## கொழும்பு பங்குச்சந்தை சரிவை நோக்கிய நிலையில்

(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தையில் அண்மைக் காலமாக தொடர்ச்சியான சரிவை எதிர்நோக்கிய நிலையே காணப்பட்டது. இந்நிலையில் இன்றைய கொடுக்கல் -வாங்கல்கள் தற்போது இடம்பெற்று வருகின்ற போது அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 5 ஆயிரம் புள்ளிகளை விட குறைவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த விலை வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக கடந்த வார இறுதியில் அதிகரிக்கப்பட்டிருந்த எரிபொருட்களின் விலை அமைந்திருப்பதாகவும் ரூபாவின் பெறுமதி [illegible] வேகமாக சர்வதேச சந்தையில் வீழ்ச்சியடைந்து வருகின்றமையும் காரணமாக அமைந்துள்ளதென பங்கு முகவர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்தும் வலிந்த விற்பனை சந்தையில் இடம்பெறுவதாகவும் இந்நிலை தொடரக்கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2010 ஜூலை மாதத்திற்கு பின்னர் இந்த அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 5 ஆயிரம் புள்ளிகளை விட குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆசியாவின் மிகவும் மோசமாக கொடுக்கல்- வாங்கல்கள் நடவடிக்கைகள் இடம்பெறும் பங்குச் சந்தையாக கொழும்பு பங்குச்சந்தை தரப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)




எரிபொருட்கள் அடங்கலான அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பைக் கண்டித்து அரசாங்கத்திற்கெதிரான ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது.
மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் வீண்விரயத்தை நிறுத்து, எண்ணெய் விலையை குறை போன்ற சுலோகங்களை எழுதிய பதாகைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பியவாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் ,ஆதரவாளர்கள் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஜனாதிபதியிடம் மக்களுக்கான உரிமைகளை கேட்டு செயற்படுத்தி வருகின்றோம்

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

எமது மக்களின் உரிமைகளுக்காக அரசியல் ரீதியில் உழைக்க முன்வருமாறு அண்ணன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எனக்கு அழைப்பு விடுத்திருந்தார். எனவே, அவரது வழிகாட்டலினால்தான் நான் இங்கு உள்ளேன் என மீள்குடியேற்றத்திற்கான பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மண்டபத்தில் பாரம்பரியத்திற்கு மகுடம் எனும் தொனிப்பொருளில் மூலிகைச் செடிகள் கண்காட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், போராட்ட வாழ்க்கையில் ஈடுபட்டு விரக்தி நிலையை நான் அடைந்திருந்த போது அண்ணன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசியல் ரீதியில் செயற்பட நான் முன்வர வேண்டும் எனக்கோரி எனக்கு ஊக்கம் அளித்ததுடன் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தலைமையில் வடபகுதியில் பாரிய அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரால் இவ்வாறான அபிவிருத்தி திட்டங்களில் ஒன்றையேனும் முன்னெடுக்க முடியுமா? முடியாது... அவர்களால் வெறும் பேச்சுகளை மட்டுமே பேசிக்கொண்டிருக்க முடியும். எமது மக்களுக்காக எதையும் மேற்கொள்ள முடியாது.

அவலங்களையும் அழிவுகளையும் கொண்டுவரும் செயற்பாடுகளை மேற்கொள்ளப் போகிறீர்களா? இல்லை எமது மக்களுக்கான உரிமைகளுக்காக அரசியல் ரீதியில் செயற்படப் போகின்றீர்களா? என அண்ணன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்னிடம் கேட்டார். அவருடைய வழிகாட்டலைப்பெற்றதால் தான் இன்று எமது மக்களுக்கான உரிமைகள் தொடர்பில் என்னால் செயற்பட முடியுமாக உள்ளது.

அவரும் நானும் எமது மக்களுக்கான உரிமைகளையே கேட்டு அவற்றை பெற்றுச் செயற்படுத்தி வருகிறோம். ஜனாதிபதி அவர்களிடம் கூட நாங்கள் அஞ்சாது இதையே கேட்டு வருகிறோம். என அவர் தெரிவித்தார். (அ-2)

# தாலிக்கொடி வழக்கில் நால்வருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

கொள்ளையடித்த தாலிக் கொடியை விற்றவர்களும் வங்கியவர்களும் உள்ளடங்கலாக நால்வர் யாழ். நீதிமன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் கொள்ளையடித்த தாலிக் கொடியினை துண்டு போட்டு நகைக் கடைக்காரருக்கு விற்றுள்ளனர். இது சம்பந்தப்பட்ட நால்வரும் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த நால்வருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 2 இலட்சம் பெறுமதியான 3 ஆட்பிணையிலும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டதோடு இப் பிணையில் நிற்பவர் ஒருவர் அரச உத்தியோகத்தராக காணப்படல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-4)

# சிறைக்கைதிகளின் சுகாதாரத்தை உறுதிப்படுத்த விசேட திட்டம்

(கொழும்பு)

சிறைக் கைதிகளின் சுகாதாரத்தை உறுதிப்படுத்தவென விசேட வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, சிறைச்சாலைத் திணைக்களம் மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கம் என்பவற்றுடன் இணைந்து சுகாதார அமைச்சு இத்திட்டத்தை மேற்கொள்ளவுள்ளது.

சிறைச்சாலைகளில் காணப்படும் நெரிசலால் தொற்று மற்றும் தொற்றாத நோய்கள் பல பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கட்டுப்படுத்தவே புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அதற்கென விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் சிறைக் கைதிகளுக்கென சுகாதார வாரம் ஒன்றை அமுல்படுத்தவும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்போது சிறைக் கைதிகள் அனைவரும் பூரண சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பாடசாலையின் அபிவிருத்திக்கு என்னாலான உதவியை புரிவேன்

## சில்வேஸ்திரி அலென்ரின் எம்.பி.தெரிவிப்பு



மாணவர்கள் தீய வழியில் செல்லாது கல்வியில் அக்கறை கொண்டவர்களாக செயற்படுவதன் மூலமே வளமான எதிர்காலத்தை அடைய முடியும் என ஈ.பி.டிபியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்துள்ளார்.

நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் பாடசாலை அதிபர் த. மனோகரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், வடபகுதியின் 1000 கோடி அபிவிருத்தி திட்டத்தில் இப் பாடசாலையையும் இணைப்பது தொடர்பில் பரிசீலனை செய்வதுடன் கல்வி வலயத்திற்கு அண்மையில் உள்ள இப்பாடசாலையில் நிலவும் தேவைகளை கல்வி வலய அலுவலகம் அறியும் என நினைக்கிறேன். எனவே, அவர்களும் குறித்த சில அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் இப் பாடசாலைக்கான அபிவிருத்தியினை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வருடத்திற்கான எமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி மூலம் பாடசாலையின் அணிநடை மற்றும் நிகழ்வுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பாண்ட் வாத்திய கருவியை பெற்று தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

ஏனைய புறக் காரணங்களோ குடும்ப வறுமையோ மாணவர்களின் கல்வியை பாதித்து விட நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. அவ்வாறான காரணங்களை புறந்தள்ளுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வோம். எனவே, எத்தடைகளிலும் எவ்வேளையிலும் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள். மக்களின் சுதந்திரமானதும் சுபீட்சமான வாழ்வுக்காகவே நாம் எம்மை அர்ப்பணித்து செயலாற்றி வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பகிடிவதையால் அறுபது வீதமான மாணவர்களின் கல்வி பாழாகியது

## அமைச்சர் எஸ்.பி.கூறுகிறார்

பகிடிவதை காரணமாக 60 வீதமான மாணவர்கள் பல்கலைக்கழக கல்வியை இடைநிறுத்துவதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸ்ஸ நாயக்க தெரிவித்துள்ளார். உடுநுவர - ஹன்தெஸ்ஸமகாவித்தியாலயவிளையாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண் டவாறு தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவ சங்கத் தலைவர் என பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவோர் பல்கலைகழக மாணவர் அல்ல எனவும், மாணவர் என்ற உரிமைஇல்லாது போன, பரீட்சையில் ஒருபாடத்தில் கூட சித்தியடையாதவர்களே அவர்கள் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறு பல்கலைகழகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களே ஏனைய மாணவர்களை நூலகங்களுக்கு செல்ல வேண்டாம், பாடங்களை கற்க வேண்டாம் விரிவுரைகளுக்கு செல்லவேண்டாம் என தெரிவிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

உண்டியலை வழங்கி பிச்சை எடுக்குமாறு பாடம் புகட்டும் இந்த நடவடிக்கையை விரைவில் மாற்றவுள்ளதாகவும் அமைச்சர் எஸ்.பி. திஸ்ஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்திற்கு செல்லும் எந்தவொரு மாணவரும் வீதியில் இறங்கி வேலைக்காக கையேந்தும் நிலை ஏற்பட இடமளிக்க வேண்டாம் எனவும் உயர்கல்வி அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


தாத்தாவை உளமார வாழ்த்துகின்றோம்

திரு.கே.ஆர். திருத்துவராஜா ("கலைப்பரிதி")



வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் 2011 ஆம் ஆண்டின் கலைத்துறைக்கான சிறந்த சேவையாற்றியமையை கௌரவித்து "கலைப்பரிதி" எனும் உயரிய விருது வழங்கப்பட்டமையை பாராட்டி மேலும் பல விருதுகள் பெற்று சிறப்போடு பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

"றோஸ்பவனம்" அல்வாய்

அன்போடு வாழ்த்துபவர்கள் பேரப்பிள்ளைகள்,





சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்

Kids Park Pre School & Day Care Center

முன்பள்ளி ஆசிரியர் தேவை-2012

எமது முன்பள்ளியில் கற்பிப்பதற்கு சிறந்த தகுதியும், ஆற்றலும், ஆளுமையும், ஈடுபாடும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ். நகரிலிருந்து 6 km க்குள் வசிப்பவர்கள் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி 20.02.2012.

தங்கள் சுய விபரத்தை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பணிப்பாளர்,
சிறுவர் பூங்கா
முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்
528, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

T.P.0779360607

# தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இணைந்தால் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் த.தே.கூட்டமைப்பினர் இணைந்து கொள்ள வேண்டும். ஆனால்,தெரிவுக்குழுவில் இணைந்து பிரச்சினை தீர்க்கப்பட்டால் அவர்களால் அரசியல் செய்ய முடியாது என்பதால் கூட்டமைப்பினர் இணையமாட்டார்கள் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட பாரம்பரியத்திற்கு மகுடம் பாரம்பரிய மூலிகைக் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்கு பாராளுமன்றத்தினுடாக தீர்வு காண முடியும் என பிரதி அமைச்சர் வி.முரளிதரன் கூறும் கருத்துக்கு நான் உடன்படுகிறேன். பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

இதனை எனது அனுபவத்தினூடாக கூறுகிறேன். 15 வருடத்திற்கு மேல் போராட்டத்தில் ஈடுபட்ட நான் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை இழந்து அரசியல் ஊடாக பிரச்சினையை தீர்த்துக் கொள்ளலாமென தீர்மானித்து ஜனநாயக அரசியலுக்குள் நுழைந்தேன்.

கடந்த 1950 ஆம் ஆண்டு முதல் அரசியல் பேச்சினூடாக பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதால் 30 வருடத்தின் பின்னர் ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்தோம். அதிலும் எட்டாத நிலையில் தற்போது மூன்றாம் கட்டத்திற்கு வந்துள்ளோம்.

பேச்சுவார்த்தை ஊடாக பிரச்சினைக்குத் தீர்வுகாண தெரிவுக்குழுவில் த.தே.கூ இணைந்து கொண்டால் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணடியும். ஆனால் த.தே. கூட்டமைப்பினர் வீரம் பேசுவார்கள். பிரச்சினையை தீர்க்கவல்ல தெரிவுக்குழு ஊடாக பிரச்சினை தீர்க்கப்பட்டால் அவர்களால் அரசியல் செய்ய முடியாது என்பதால் நாங்கள் மக்கள் பிரதிநிதிகளாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றோம். எமக்கும் ஜனாதிபதிக்குமிடையில் நெருக்கமான உறவு இருக்கிறது.பலமான அரசாங்கத்தினுடாக எதனையும் தீர்க்கலாம். கிடைக்கும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார். (அ-2)

## வறிய குடும்பங்களுக்கு சூரிய சக்தி மின்சாரம்

இவ் ஆண்டு இறுதியில் அனைவருக்கும் மின்சாரம் எனும் திட்டத்தின் கீழ் வடமேல் மாகாண பாதை அபிவிருத்தி மின்சாரம் நிர்மாணத்துறை கடற்றொழில் அமைச்சினால் புத்தளம் மாவட்டத்தில் 200 வறிய மக்கள் தெரிவு செய்யப்பட்டு சூரிய மின்கலம் மூலம் அவர்களுக்கு மின்சாரம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென வடமேல் மாகாண பாதை அபிவிருத்தி மின்சாரம் நிர்மாணத்துறை கடற்றொழில் அமைச்சு சுமார் 20 இலட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக புத்தளம் சீமாவெளி கிராமத்தில் மின்சார வசதியின்றி வசித்து வந்த 20 குடும்பங்களுக்கு சூரிய சக்தி மூலமான மின்சாரம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

சுமார் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான சூரிய மின்கலங்கள் 50 வீதம் சலுகையடிப்படையில் இக்கிராம மக்களுக்கு வழங்கப்பட்டன. (அ-2)

# கூரைகள் அற்ற நிலையில் பரந்தன் சந்தி பஸ் நிலையம்

## மீள்குடியேறிய மக்கள் கவலை

(பரந்தன்)

பரந்தன் சந்தியில் வீதிக்கு அருகாமையில் உள்ள பஸ் நிலையம் இதுவரை திருத்தியமைக்கப்படாமல் கூரையற்ற நிலையிலேயே காணப்படுகின்றது.

இதனால்இப்பிரதேசத்தில்பேருந்துசேவையை பெறும் மக்கள் வீதியின் ஓரத்தில் மர நிழல்களின் கீழேயே நிற்க வேண்டியுள்ளது.

இப்பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியேறி இரண்டரை வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் பஸ் நிலையத்தை புனரமைக்க எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லையெனப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதேவேளை கண்டி வீதியில் உமையாள்புரத்தில் உள்ள பொதுநோக்கு மண்டபத்திற்கு தேவைகளின் நிமித்தம் வரும் பொதுமக்கள் இறங்கிக் கொள்ள பஸ் தரிப்பிட அறிவித்தல் பலகை பொருத்துதல் வேண்டுமென இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தாம் சந்தியில் இறங்கி ஒரு கிலோ மீற்றர் தூரம் நடக்க வேண்டியுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (அ-2)

# வாழைச்சேனையில் கஞ்சா செய்கை கண்டு பிடிப்பு

(வாழைச்சேனை)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் பல்லத்துச்சேனை பகுதியில் சேனைப்பயிர் செய்கையுடன் சேர்த்து செய்கை பண்ணப்பட்ட கஞ்சா சேனையை வாழைச்சேனை பொலிஸார் நேற்று முன்தினம் கண்டுபிடித்துள்ளனர்.

இதன்போது சந்தேகத்தின் பேரில் மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்த குறித்த பிரதேசத்திற்குச் சென்ற பொலிஸார் செய்கை பண்ணப்பட்ட கஞ்சா செடிகளை கைப்பற்றியதுடன் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

இச்சந்தேக நபர்களையும் கஞ்சா செடிகளையும் வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஈ.ஜயவீர தெரிவித்தார். (அ-2)

# கிழக்கு மாகாண சபை அமர்வுகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் குழப்ப நிலையையடுத்து கிழக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட அமர்வு பெப்ரவரி 28 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நாடு மற்றும் நகரத் திட்டமிடல் திருத்தச்சட்டத்தின் மூலம் சட்டவிரோதமானது என தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எதிர்த்தனர்.

இதனால் சபை அமர்வு 10 நிமிடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் கூடிய சபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஒழுங்கு பிரச்சினை மற்றும் சட்டப்பிரச்சினை ஆகியவற்றை எழுப்பியமையால் முதலமைச்சர் சந்திரகாந்தனின் வேண்டுகோளுக்கிணங்க சபையை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைப்பதாக தவிசாளர் எச்.எம்.எம். பாயிஸ் அறிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் மற்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் நாடு மற்றும் நகரத் திட்டமிடல் திருத்தச்சட்ட மூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனையடுத்து கடந்த சனிக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சருடன் இடம் பெற்ற சந்திப்பின் போது திருத்தங்கள் மேற்கொள்வது என வழங்கிய உறுதிமொழியுடன் இதற்கு ஆதரவு வழங்கினர்.

இந்நிலையிலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட கிழக்கு மாகாணசபையின் அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இச் சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். (அ-2)

# கவிதை நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

கீர்த்தனா ராஜேந்திராவின் பூவொன்றின் புதிய மொழி கவிதை நூல் அறிமுக விழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். நல்லூர் துர்க்கா மணி மண்ட பத்தில் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கவிதை நூலிற்கான வாழ்த்துரையினை ஓய்வு நிலை அதிபர் தி.கிருஷ்ண குமார், சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் பொன். பாலகுமார் வழங்கவுள்ளனர்.

நூல் அறிமுகவுரையினை யாழ். பல்கலைக்கழக வணிகபீட முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி ஆற்றவுள்ளார். சிறப்பு பிரதியினை யாழ். இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி கிளை முகாமையாளர் இ.பிறேமராஜன் பெற்றுக் கொள்ளவுள்ளார். (அ-7)


ASAP புலமைப்பரிசில்

2011-2012

வடக்கு,கிழக்கு மாணவர்களுக்கானது

- நீங்கள் வடக்கு மாகாணத்தில் வசிக்கும் மாணவரா?
- பாடசாலைக் கல்வியை பூர்த்திசெய்துள்ளீர்களா?
- வேலைவாய்ப்பினை எதிர்பார்த்துள்ளீர்களா?
- USAID நிறுவனத்தின் அனுசரணையுடன் அரசாங்கத்தினால் வழங்கப்படும் கணனி மற்றும் ஆங்கிலபயிற்சியில் பங்குபற்றி அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொள்ளுங்கள்

விண்ணப்ப படிவத்தினை IDM சாவகச்சேரியில் பெற்றுக்கொள்ள முடியும்.



மேலதிக தகவல்களுக்கு

IDM

NATIONS CAMPUS

Chavakachcheri Branch

Managed by Step into(pvt)Ltd.

No.276, Kandy Road, Chavakachcheri.

021 2 270 270 / 021 7 200 600

(சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில்)

அனுசரனை

ADB EKSP Education for Knowledge Society Project

USAID FROM THE AMERICAN PEOPLE

ASAP Accelerated Skills Acquisition Program Empowering Youth Through Career Skills

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 41




வெற்றி கண்டவர், சோவியத்யூனியனை (U.S.S.R) ஸ்தாபித்தவர் மாமேதை விளாமிடிர் லெனின் சோவியத்தின் தலைவர் ( 1917-1922)

21-வது படையின் மண்டலத்தில் 3-வது குதிரைப்படை டிவிசன் மற்றும் பலப்படுத்தும் படைப் பிரிவுகளை உள்ளடக்கிய குதிரைப் படைத்தொகுதி எதிரியின் பின்னணியினுள் ஊடுருவித் தாக்கியது. எதிரித் தாக்குதலின்போது சோவியத் துருப்புக்களால் எதிரியின் ஸ்மலேன்ஸ்க் படைத் திரட்டை முறியடிக்க முடியாவிட்டாலும் மாஸ்கோ நோக்கிய சென்டர் படைத் தொகுதியின் முன்னேற்றத்தை இவை குலைத்தன. 20-வது படையும் 16-வது படையும் முற்றுகை வளையத்திலிருந்து மீண்டு, முக்கிய சக்திகளோடு தினேப்பருக்குப் பின்னால் விலகிச் செல்ல உதவின.

தற்காப்பிற்கு மாறி சோவியத் படைகளால் சென்டர் படைத் தொகுதியின் பக்கவாட்டு பிரிவுகளுக்கு ஏற்பட்டுள்ள அபாயங்களை அகற்றும் வரை மாஸ்கோ நோக்கி முன்செல்வதை தள்ளிப்போடுவது என்று ஜூலை 30 ஆம் திகதி பாசிச ஜேர்மனியப்படைத் தலைமை தீர்மானம் செய்த்து. ஆகஷ்டு 11 ஆம்திகதி கால்டர் தன் நாட்குறிப்பில் பின்வருமாறு எழுதினான். "மகத்தான ருஷ்யாவை நாம் சரிவர மதிப்பிடவில்லை. என்பதைப் பொது நிலவரம் மேன்மேலும் தெள்ளத் தெளிவாகக் காட்டிவருகிறது... இக்கூற்று எல்லாப் பொருளாதார மற்றும் ஸ்தாபன விடயங்களுக்கும் தகவல் தொடர்பு சாதனங்களுக்கும் குறிப்பாக முற்றிலும் இராணுவ அம்சங்களுக்கும் பொருந்தும்."

ஸ்மலேன்ஸ்க் சமரின் மூன்றாவது கட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளின் மையம் தெற்கே மாறியது. ஆகஷ்டு 8 ஆம் திகதி ஜேர்மனியர்களின் 2-வது போர்க்களப் படையும்

லெனின் கிராட்டில் நிலை அமைத்துள்ள சோவியத் படையினர்



2-வது டாங்கிப்பிரிவும் மத்திய சேனைக்கு எதிராகத் தாக்குதலைத் தொடுத்தன. பேரிழப்பிற்குப்பின் இவற்றால் தென் கிழக்கு மற்றும் தெற்குத் திசைகளில் சோவியத் துருப்புக்களைப் பின்வாங்குமாறும் நிர்ப்பந்தித்து ஆகஷ்டு 21 வாக்கில் 120-140 கி.மீ.தூரம் முன்னேறி கோமெல், ஸ்தாரோதூப் எல்லைக் கோட்டை அடைய முடிந்தது. இதன் மூலம் ஹிட்லர் படைகள் பிரியான்ஸ்க் மற்றும் மத்திய சேனைகளுக்கும் இடையில் புகுந்து தென் மேற்கு சேனையின் பக்க வாட்டிற்கும் பின்னணிக்கும் ஆபத்தை ஏற்படுத்தின.

எதிரியின் துஹோவ்ஷினா, ஏல்னா படைத்திரட்டுக்களை முறியடிக்கும் நோக்கத்தோடு மேற்கு சேனையும் சேம இருப்பு சேனையின் ஒரு பகுதியும் ஆகஷ்டு 16 ஆம் திகதி தாக்குதலைத் தொடுத்தன. இந்தத் தாக்குதல் மேற்கொண்டு வளராவிட்டா லும் ஏல்னா அருகே நடந்த சண்டைகளில் எதிரியின் பலமான தற்காப்பு குலைக்கப்பட்டு ஹிட்லர் படைகள் கடும் தோல்வியடையுமாறு செய்யப்பட்டது.

ஸ்மலேன்ஸ்க் சமரின் நான்காவது கட் டத்தில் (ஆகஷ்ட் 22-செப்ரம்பர் 10) சென்ரர் படைத் தொகுதியை தோற்கடித்து தென்திசையில் தென் மேற்கு சேனையின் பின்னணியை நோக்கிய இதன் முன்னேற்றத்தைக் குலைப்பதென சோவியத் படைத்

லெனின்கிராட் பாதுகாப்புக்காக அங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ள சோவியத்தின் விமான எதிர்ப்புப் பீரங்கிகள்



## 'ஜேர்மனி, ஜப்பான் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு 'மின்னல் வேக யுத்தம்' என்ற ஹிட்லர் போர்த்தந்திரத்தின் தோல்வி

தலைமை தீர்மானித்துள்ளது. இக் கட்டத்தில் எதிரியின் ஏல்னா படைத்திரட்டை முறியடிப்பது நிறைவு பெற்றது. பிரியான்ஸ்க் சேனையின் பிரதேசத்தில் 460 தாக்குவிமானங்கள், குண்டு வீச்சு விமானங்களைக் கொண்டு வான் நடவடிக்கை நிறைவேற்றப் பட்டது. இதன் விளைவாய் ஜேர்மனியர்களின் 2-வது டாங்கிப் பிரிவுக்குப் பெரும் சேதங்கள் ஏற்பட்டன.

ஸ்மலேன்ஸ்க் அருகே மேற்கு சேனையின் துருப்புக்கள் செப்ரம்பர் 1-ஆம் திகதி மீண்டும் தாக்குதலைத் தொடுத்தன. ஆனால், இது மேற்கொண்டு வளரவில்லை.

செப்ரம்பர் 10-ஆம் திகதி மேற்குத் திசையில் இயங்கிவந்த சோவியத் துருப்புக்கள் உயர்மட்டப் பிரதான படைத் தலைமையகத்தின் கட்டளைப் படி தற்காப்பிற்கு மாறின.

**650 கி.மீ. நீளத்திற்கும் 250 கி.மீ. ஆழம் வரையிலும் நடைபெற்ற ஸ்மலேன்ஸ்க் சமரின்போது சோவியத் துருப்புக்கள் எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தின. தங்குதடையின்றி மாஸ்கோ நோக்கி முன்னேறலாம் என்ற பாசிஸ்டுகளின் திட்டங்களைக் குலைத்தன.** இரண்டாம் உலகயுத்தத்தி லேயே முதன் முதலாக பாசிச ஜேர்மனித் துருப்புக்கள் தாக்குதலை நிறுத்திவிட்டு தற்காப்பிற்கு மாறும்படி கட்டாயப்படுத்தப்பட்டன. மாஸ்கோவை பாதுகாக்கவும் மாஸ்கோ அருகே நடந்த சமரின் பாசிச ஜேர்மனியத் துருப்புகளை முறியடிக்கவும் தயார்படுத்திக்கொள்ள சோவியத் படைத்தலைமைக்கு நேரம் கிடைத்தது.

ஸ்மலேன்ஸ்க் சமரின்போது சோவியத் துருப்புக்கள் மாபெரும் வீரத்தையும் ஆண்மையையும் யுத்தத்திறமையையும் வெளிப்படுத்தின. முதன் முதலாக மிகச்சிறப்பாக இயங்கிய படை யூனிட்டுக்களுக்கு கார்டு யூனிட்டுக்கள் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

ஜேர்மனிய ஜெனரல்களின் ஒப்புதல்படி ஸ்மலேன்ஸ்க் சமரில் ஹிட்லர் துருப்புக்கள் 2இலட்சத்து 50ஆயிரம் போர் வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் இழந்தன. படை த்தலைமையகம் திட்டமிட்டபடி எதிரியை முறியடிக்க முடியாவிட்டாலும் எதிரியின் முக்கிய தாக்குதல் படைத் திரட்டுக்கள் கடுமையாக அலைக் கழிக்கப்பட்டிருந்தன. என்று சோவி யத் யூனியனின் மார்ஷல் ஜூக்கவ் தன் நினைவுக் குறிப்புக்களில் எழுதினார்.

1941 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் திகதி பாசிச விமானப்படை மாஸ்கோவின் மீது முதல் தாக்கு தலைத் தொடுத்தது. இதில் 250 குண்டுவீச்சு விமானங்கள் கலந்து கொண்டன. வான் எதிர்ப்புத் தற்காப்பு நன்றாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ால், ஒருசில விமானங்கள்தான் தலை நகரங்களின் மீது பறந்தன. இவையும் பெரும் சேதத்தை ஏற்படுத்தவில்லை. சோவியத் சண்டை விமானங்கள், 12 ஜேர்மனிய விமானங்களையும் விமான எதிர்ப்பு பீரங்கிகள், 10 ஜேர்மனிய விமானங்களையும் சுட்டுவீழ்த்தின.



லெனின்கிராட் ஜேர்மனியின் முற்றுகையிலிருந்தபோது சோவியத்துருப்புகள் தாக்குகின்றன

### 3.லெனின்கிராட், கீவ், ஓதேஸ்ஸா மற்றும் செவஸ்தொப்பலின் வீரம் மிக்க பாதுகாப்பு

சென்டர் படைத் தொகுதி ஸ்மலேன்ஸ்க் திசையில் சோவியத் துருப்புக்களின் எதிர்த் தாக்குதலை களை முறியடித்துக் கொண்டிருந்த போது வடக்குப் படைத் தொகுதி லெனின் கிராட்டைக் கைப்பற்றவும் தெற்குப் படைத் தொகுதி கீவையும் பின் ஒதெஸ்ஸாவையும் கைப்பற்றவும் முயற்சி செய்தன.

லூகா தற்காப்பு மண்டலத்தைப் பிளந்தபின் எதிரித்துருப்புகள் செப்ரெம்பர் 8 முதல் 12 வரை லெனின் கிராடின் வெகு அருகில் வந்துஷ்லினெல்புர்கைக் கைப்பற்றி நகரை தரைப்பகுதியிலிருந்து முற்றுகையிட்டன. மேற்கொண்டு நகரத்தினுள் புகவும் நகரைக் கிழக்கேயிருந்து சுற்றிவந்து பின்லாந்து துருப்புகளுடன் ஒன்றிணையவும் எதிரி செய்த எல்லா முயற்சிகளும் லெனின் கிராட் சேனையாலும் பால்டிக் கப்பற்படையாலும்-பொதுமக்களின் தீவிர ஆதரவோடு- முறியடிக்கப்பட்டன. ஆனால், நகர நிலைமை மிகவும் மோசமானதாக இருந்தது. லதோகா ஏரி மூலமும் வான் மூலமும் மட்டுமே லெனின் கிராடோடு தொடர்பிருந்தது. இது லெனின் கிராடின் தற்காப்பை மிகவும் சிக்கலாக்கியது. ஏனெனில் இவ் வளியில் துருப்புகளுக்கும் நகரில் இருந்த ஜனங்களுக்கும் தேவையான அனைத்தையும் அளிக்க வகை செய்ய முடியவில்லை. செப்ரெம்பர் 4 முதல் ஹிட்லர். துருப்புக்கள் தோஸ்னே வட்டாரத்திலிருந்து லெனின்கிராடை நோக்கி கனரக பீரங்கிகளால் சுடத்தொடங்கியதால் நிலைமை இன்னமும் சிக்கலாயிற்று.

(தொடரும்)

# புலம்பெயர் தமிழ் மக்களால் போர் குற்றச்சாட்டை நிரூபிக்க முடியவில்லை

## அரசாங்கம் கூறுகிறது

(கொழும்பு)

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக தமிழ் புலம்பெயர் சமூகத்தினால் நிரூபிக்க முடியவில்லை என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடாக நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹ லுகல்ல தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு ஆதரவாளர்கள், புலம்பெயர் தமிழர்களினால் அரசாங்கத்திற்கும் படையினருக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றப் பிரசாரங்கள், ஆதாராங்களுடன் நிரூபிக்கப்படவில்லை.

சனல் -4 காணொளி போலியானது என அரசாங்கம் நிரூபித்துள்ளது. இந்தக் காணொளி தொடர்பில் எவ்வித பதிலும் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை.

இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சு வெற்றிகரமாக பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்ச செயல்கள் பற்றி தொடர்ந்தும் சர்வதேச சமூகத்திற்கு வெளிச்சம் போட்டு காட்டப்படும்.

புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக வாய் திறக்காமல் இருந்த தமிழ் சமூகம் தற்போது உண்மைகளை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது என லக்ஸ்மன் ஹ லுகல்ல தெரிவித்துள்ளார்.

(அ-2)

# புலிகளை தோற்கடித்த அரசாங்கத்தை அமெரிக்கா பழிவாங்க முயற்சியாம்

## வீரவன்ச கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடித்த இந்த அரசாங்கத்தை அமெரிக்கா பழிவாங்க முயற்சித்து வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

பயங்கரவாதத்தின் மூலம் இலங்கையை மற்றுமொரு இஸ்ரேலாக மாற்ற அமெரிக்கா முயற்சித்தது.

பிராந்திய வலய நாடுகளின் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதே அமெரிக்காவின் திட்டமாக அமைந்திருந்தது. எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் இந்த சதி முயற்சிகள் முறியடிக்கப்பட்டன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் முயற்சிக்கு அமெரிக்கா ஆதரவளிப்பதாக வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது விமல் வீரவன்ச மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான திட்டங்களைக்கண்டு நாட்டு மக்கள் அச்சமடையத் தேவையில்லை. காலானித்துவ நாடுகளின் எண்ணம் ஒருபோதும் ஈடேறாது என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (அ-2)

# தற்போதைய நெருக்கடி நிலை குறித்து நாடாளுமன்றில் விவாதியுங்கள்

## ஜே.வி.பி.எம்.பி. அநுரகுமார திஸாநாயக்க கோருகிறார்

(கொழும்பு)

நாட்டில் நிலவி வரும் நெருக்கடியான நிலைமைகள் குறித்து நாடாளுமன்றில் உடனடியாக விவாதம் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளுக்கு அமைய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. வரலாற்றில் ஒருபோதும் இல்லாத அளவிற்கு எரிபொருள் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தினால் நாட்டு மக்கள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இதனை ஒரு அவசர நிலைமையாகக் கருதி நாடாளுமன்றைக் கூட்டி பிரச்சினைகள் குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டுமென அநுரகுமார திஸாநாயக்க கோரியுள்ளார். (அ-2)

# சீனாவைச் சேர்ந்த நபருக்கு நீதிமன்றத்தால் அபராதம்

(கொழும்பு)

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ஒருதொகை சிகரெட்டுக்களை வைத்திருந்தமை மற்றும் அனுமதிப்பத்திரம் இன்றி வெளிநாட்டு மதுபானங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டுக்களின் பேரில் சீனாவைச் சேர்ந்த ஒருவருக்கு கொழும்பு நீதிமன்றம் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

கொள்ளுப்பிட்டியில் உள்ள கடை ஒன்றிலிருந்து கைது செய்யப்பட்டுள்ள இந்நபரிடமிருந்து 600 சட்டவிரோத சிகரெட்டுக்களையும் 47 வெளிநாட்டு சாராயப் போத்தல்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு கோட்டை நீதிவான் கனிஷ்கா விஜயரட்ன முன்னிலையில் இச்சந்தேக நபர் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார் தனது சொந்தப் பாவனைக்காக இவர் மதுபானங்களையும் சிகரெட்டுக்களையும் வைத்திருந்ததாகவும் இவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதாகவும் கட்சிக்காரர் சார்பில் வாதாடிய சட்டத்தரணிகளான பி.சி.டி. சில்வா, சுதர்சினி குணரட்ன தெரிவித்தனர். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.02 15

★ கி.மு.399-மெய்யியலாளர் சோக்கிரட்டீஸ் மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டார்.

★ 590-பாரசீகத்தின் மன்னனாக இரண்டாம் கொஸ்ராவு முடி சூடினான்.

★ 1637-புனித ரோம் பேரரசின் மன்னனாக மூன்றாம் பேர்டினண்ட் முடி சூடினான்.

★ 1898-ஐக்கிய அமெரிக்காவின் கடற்படைக் கப்பல் USS Maine கியூபாவில் அவானா துறைமுகத்தில் வெடித்து மூழ்கியதில் 260 பேர் உயிரிழந்தனர். இந்நிகழ்வையடுத்து அமெரிக்கா ஸ்பெயின் மீது போரை அறிவித்தது.

★ 1920-யாழ்ப்பாணத்தில் முதற் தடவையாக அரிசி பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூர் ஜப்பானிடம் வீழ்ந்தது. கிட்டத்தட்ட 80 ஆயிரம் இந்திய, ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்திரேலியப் படையினர் போர்க் கைதிகளாகப் பிடிபட்டனர்.

★ 1946-ENIAC என்ற முதல் தலைமுறைக் கணனி அறிமுகமானது.

★ 1950-சோவியத் ஒன்றியம், மக்கள் சீனக் குடியரசு ஆகியன பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

★ 1961-பெல்ஜியத்தில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து அமெரிக்க Figure Skating வீரர்கள் உட்பட 73 பேர் உயிரிழந்தனர்.

★ 1970-டொமினிக்கன் குடியரசு விமானம் ஒன்று சாண்டோ டொமிங்கோவில் கடலில் மூழ்கியதில் 102 பேர் உயிரிழந்தனர்.

★ 1989-ஒன்பது ஆண்டு கால ஆக்கிரமிப்புக்குப் பின் ஆப்கானிஸ்தானிலிருந்து அனைத்து சோவியத் படைகளும் வெளியேறியதாக அறிவிக்கப்பட்டது.

★ 1994-ரஷ்யா தார்தஸ்தானை ஒரு உட்குடியரசாக இணைத்துக் கொண்டது. தார்தஸ்தானின் விடுதலைக்கான போர் ஆரம்பமானது.

★ 1996-சீனாவின் இண்டெல்சாட் செய்மதி ஒன்று ஏவியவுடனேயே கிராமம் ஒன்றில் வீழ்ந்ததில் பலர் உயிரிழந்தனர்.

★ 1999-குர்டிஸ்தான் தீவிரவாதத் தலைவர் அப்துல்லா ஒக்கலன் துருக்கிய இரகசியப் படைகளினால் கென்யா வில் வைத்துக் கைது செய்யப் பட்டார்.

★ 2005-யூடியூப் சேவை ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1845-எலீஹூ ரூட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1937)

★ 1861-ஆல்பிரட் நார்த் வொய்ட்ஹெட், பிரித்தானியக் கணிதவியலர் (இ.1947)

★ 1861-சார்ள்ஸ் கில்லோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர் (இ.1938)

★ 1873-ஹான்ஸ் இயூலர்- செல்ப்பின், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ.1964)

★ 1922-டி.பி. விஜயதுங்கா, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி

★ 1949-அனுரா பண்டாரநாயக்கா, இலங்கையின் அரசியல்வாதி (இ.2008)

★ 1956-டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாளர்

★ 1984-மீராஜஸ்மின், மலையாளத் திரைப்பட நடிகை

### இறப்புக்கள்

★ 1973-அழகு சுப்பிரமணியம், ஆங்கில எழுத்தாளர், இலங்கையர் (பி.1915)

★ 1988-ரிச்சார்ட் பெயின்மான், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (பி.1918)

★ 1999-ஹென்றி கென்டால், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (பி.1926)



★ 1564-இத்தாலிய வானியியலாளரும் இயற்பியலாளருமான கலிலியோ கலிலியின் பிறந்த தினம் (இ.1642)



# சிறுவர் அரங்கம்

11

## அம்புலி மாமா கதைகள்

# ஆசைப்படாதே



காசியை ஆண்ட பிரம்மதத்தனுக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள். இறக்குமுன் அவன் தன் நாட்டைத் தன் மூத்தமகனிடம் ஒப்படைத்து இளைய மகனை நாட்டின் சேனாதிபதியாக நியமித்தான். மன்னன் இறந்த பின் மூத்த மகனின் பட்டாபிஷேகத்திற்கான ஏற்பாடுகள் நடந்தன. அப்போது அவன் "எனக்கு நாடாளும் ஆசை இல்லை. நாட்டை என் தம்பியே ஆளட்டும்" எனக்கூறி விட்டுப் போய் விட்டான்.

அவன் தலைநகரிலிருந்து வெகு தொலைவிலுள்ள ஒரு சிற்றரசனின் நாட்டிற்கு போய் ஒரு பணக்காரனிடம் வேலையாளாக அமர்ந்து உழைத்துக் காலம் கழிக்கலாயினான். ஒருமுறை காசியிலிருந்து நிலங்களைப் பற்றி அறிய வந்த அதிகாரிகள் அந்தப் பணக்காரனின் ஊருக்கு வந்தார்கள். அங்கு தம் மன்னரின் மூத்த மகன் இருப்பது கண்டு மரியாதை செலுத்தி வணங்கி நின்றார்கள்.

அதைக்கண்ட பணக்காரன் அந்த அரசகுமாரனிடம் "காசி மன்னரான உங்கள் தம்பிக்கு கடிதம் எழுதி எனக்கு விதிக்கப்படும் வரியைக் குறைக்கும் படி சொல்லுங்கள்" என வேண்டினான். மூத்த ராஜகுமாரனும் அவ்வாறே தன் தம்பிக்குக் கடிதம் எழுதி அந்தப்பணக்காரன் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிப்பணத்தில் கணிசமான தொகையைக் குறைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டான். காசி மன்னனும் வரியைக் குறைத்தான். இது கண்டு அந்தக் கிராமத்திலுள்ள வேறு சிலரும் தமக்கும் காசி மன்னனிடம் சலுகை பெற்றுத் தருமாறு மூத்த ராஜகுமாரனிடம் வேண்டவே அவர்களது வேண்டுதல்களையும் ஏற்குமாறு அவன் தன் தம்பிக்கு கடிதம் எழுதினான். அவர்களுக்கும் அவர்கள் வேண்டியது கிடைத்தது.

அதன் பின் அக்கிராமத்தவர் வரிப்பணத்தை அரசாங்க அதிகாரிகளிடம் கொடுக்காமல் மூத்த ராஜகுமாரனிடமே செலுத்தலாயினர். முதலில் அவர்கள் செலுத்திய பணத்தை ஏற்க மறுத்த அவன் பின்னர் அவற்றை ஏற்றான். அவன் மனம் மெதுவாக மாறலாயிற்று. மேலும் அவர்கள் தனக்கு செலுத்தும் வரிப்பணத்தைப் பார்த்ததும் அவன் மனதில் நாடாளும் ஆசை துளிர்க்க ஆரம்பித்தது. ஆனால் தானாக விட்டு வந்த நாட்டை மீண்டும் எப்படி அடைவது?



அதனால் அவன் ஒவ்வொரு சிற்றரசன் நாட்டையும் தன் வசப்படுத்திக் கொண்டு அதனைத் தன் தம்பிக்கும் அறிவித்துக் கொண்டே வந்தான். காசி மன்னனும் தன் அண்ணன் என்ற காரணத்தால் மூத்த ராஜகுமாரனின் செயலைக் கண்டிக்காமல் இருந்தான். முடிவில் மூத்த ராஜகுமாரனுக்கு காசியையும் பிடித்து விடவேண்டும் என்ற ஆசை வந்து விட்டது.

அவன் உடனே நான்கு பெரிய மனிதர்களைத் தன் தம்பியிடம் அனுப்பி "நாட்டை ஒப்படைக்கப் போகிறாயா அல்லது போருக்குத் தயாராகப் போகிறாயா?" என்று தூது விடுத்தான். தம்பியோ "அண்ணா! உன்னோடு போரிட நான் தயாராக இல்லை. போர் எதற்கு? இந்த நாடு உன்னுடையதே. நீதானே எனக்குக் கொடுத்தாய்? இப்போது நீயே திரும்பப் பெற்றுக்கொள்" எனப் பதில் சொல்லி அனுப்பினான்.

சில நாட்களில் மூத்தராஜகுமாரன் காசி மன்னனானான். அவனது தம்பி சேனாதிபதியாக இருந்தான். அப்போதும் நாடு பிடிக்கும் ஆசை அண்ணனை விடவில்லை. ஒவ்வொரு நாடாக வென்று தன் சாம்ராஜ்யத்தில் அவன் சேர்த்துக் கொண்டே போனான்.

தேவேந்திரனுக்கு இந்த விடயம் தெரியவே அவன் மூத்த ராஜகுமாரனுக்கு புத்தி புகட்ட விரும்பி ஒரு வாலிபனின் உருவில் அதனது தர்பாருக்கு வந்தான். அவனிடம் தான் இரகசியமாக ஒரு விடயம் கூற விரும்புவதாகச் சொல்லவே ராஜகுமாரனும் அந்த வாலிபனைத் தன் அந்தப்புரத்துக்குள் அழைத்துச் சென்றான்.

அந்த வாலிபன் மூத்தராஜகுமாரனிடம் "எனக்குத் தெரிந்து மூன்று நகரங்கள் உள்ளன. அவை பலம் பொருந்தியவை. அவற்றை வென்றால் நீங்கள் மாபெரும் சக்கரவர்த்தி என்று பெயர் பெறலாம்.நீங்கள் சிரமப்பட வேண்டாம். அவற்றை நானே வென்று உமக்குக் கொடுக்கிறேன்" என்றான். 'ஆகா' என அவன் மகிழ்ந்து போனபோது வாலிபனாக வந்த தேவேந்திரன் திடீரென மறைந்து விட்டான்.

மூத்தராஜகுமாரன் அந்த வாலிபனை நாடெங்கும் தேடிக்கண்டு பிடித்துத் தன் முன் கொண்டு வருமாறு கட்டளையிட்டான். ஆனால் கிடைக்கவே இல்லை.

இந்தக் கவலையில் அவன் நோயுற்று படுக்கையில் கிடந்தான். மூன்று நகரங்களை வென்று அடைய முடிய வில்லையே என்ற ஏக்கமே அவன் மனதில் இருந்தது.

இச்சமயத்தில் எல்லா சாஸ்திரங்களையும் கற்று விட்டு போதிசத்வர் தட்சசீலத்திலிருந்து காசிக்கு வந்தார்.

அவன் மன்னன் நோயுற்றுக் கிடப்பது அறிந்து அதை தான் போக்குவதாக தகவல் கூறி அனுப்பினார்.

மூத்தராஜகுமாரனும் அவரை வரவழைத்தான். "அப்போது அவர் "உன் நோய் என்ன?" என்று கேட்டார். அவனும் தான் மூன்று நகரங்கள் பற்றி அறிந்ததையும் அதைப்பிடிக்க முடியாது தவிப்பதையும் கூறினான்.

போதிசத்வரும் "இந்த மனவேதனையை உன்னால் அடக்கிக் கொள்ள முடியுமா?" என்று கேட்டார். அவனும் முடியாது.எனவே போதிசத்வரும் "உலகமே இப்படித்தான். கண்ணில் படுவதெல்லாம் கிடைத்து விடாது. முடிவில் மானிட உடல் அழிந்து போய்விடும். அதனால் இந்த மூன்று நகரங்களை மட்டுமல்ல. மேலும் மேலும் நாடுகளைப்பிடிக்க வேண்டும் என்ற ஆசையை விட்டுவிடு.

ஆசையை அடக்கினால் சுகப்படலாம். இல்லாவிட்டால் மன வேதனைப்பட்டு இம்மாதிரி



நோயுற்று உடல் நலிந்து முடிவில் அழிவுதான் ஏற்படும்" என நல்லுரை கூறினார். போதிசத்வரின் உபதேசம் அவன் மனதில் பதிந்தது.அவன் மனம் திருந்தி வாழ்நாள் முழுவதும் போதிசத்வரின் யோசனைகளைக்கேட்டு ஆட்சி புரிந்து வந்தான்.

# இனப்பிரச்சினை தீர்வில் முஸ்லிம்கள் குறித்தும் கவனம் எடுக்கப்படவேண்டும்

## பிளேக்கிடம் ஹக்கீம் எடுத்துரைப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வில் முஸ்லிம்களின் பரிமாணம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி இலங்கை வந்துள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் ரொபோர்ட் ஓ பிளேக் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்திற்கான உதவி செயலாளர் மரியா ஒட்டேரா ஆகியோரிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ஹக்கீம் விளக்கமளித்துள்ளார்.

இலங்கையின் பிரதான முஸ்லிம் கட்சியின் தலைவர் என்ற வகையில் இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றி கருத்து தெரிவித்ததற்கு அமைச்சர் ஹக்கீமுக்கு சகல உரிமைகளும் உண்டு என ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.



இலங்கை வந்துள்ள அமெரிக்க அரசாங்கத்தின் பிரதிநிதிகள் அமைச்சர் ரவூப் ஹக்கீமை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இதனையடுத்து அமைச்சரின் ஊடக பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யுத்தத்திற்கு பின்னரான நாட்டின் தற்போதைய நிலைமை நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய சட்டங்கள், சட்டத்திருத்தங்கள் தொடர்பிலும் அமைச்சர் அமெரிக்க பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தார்.

அதன்பின்னர் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு ஆட்களை கடத்தல் மற்றும் களவாக கொண்டு செல்வது பற்றி நீதி அமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் ரொபேர்ட் ஓ பிளேக் மற்றும் மரியா ஒடேரோ ஆகியோரும் பங்குபற்றினர்.

அதில் சட்டமா அதிபர் திணைக்களம், குற்றப்புலனாய்வு திணைக்களம், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் விவகாரப்பிரிவு மற்றும் வெளிநாட்டு அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

(அ-2)

# அதிகளவான போராளிகள் பலர் கருணாவுடன் இருந்துள்ளனர்

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை காட்டிலும் இயக்கத்தில் இருந்து பிரிந்த கருணாவிடம் அதிகளவில் களப்போராளிகள் இருந்து உள்ளனர் என்று இந்தியாவின் இராணுவ ஆய்வாளர்கள் நம்பி இருக்கின்றனர் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட் டுள்ளது.

குறைந்தது களப்போராளிகள் 500 இற்கும் அதிகமானோர் கருணாவுடன் இருக்கின்றனர் என்று இவர்கள் அனுமானித்து இருந்தனர்.

கருணாவின் தலைமையில் 6 ஆயிரம் போராளிகள் உள்ளனர். இவர்களில் 2 ஆயிரத்து 500 தொடக்கம் 3 ஆயிரம் பேர் வரையானோர் துப்பாக்கிதாரிகள். இத் துப்பாக்கிதாரிகள் 350 பேர் கொண்ட எட்டுக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றனர். இவர்கள் பல களங்கள் கண்டவர்கள். கருணாவின் தலைமையில் ஏராளமான சமர்கள் செய்தவர்கள் என்று கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தின் பிரதித் தூதுவர் குமார் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி தெரிவித்து இருக்கின்றார்.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கு அன்றைய தினம் அனுப்பபட்ட இராஜதந்திர ஆவணம் ஒன்றில் இருந்து விக்கிலீக்சிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. (அ-2)

# ஒரு இனத்துக்கு மட்டும் கூடுதல் அதிகாரம் வழங்கப்படக்கூடாது

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு இனத்திற்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கினால் ஏனைய சமூகங்களும் அதிகாரங்களை கோரும் அபாயம் உள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இன்று நாட்டில் சிங்கள மற்றும் தமிழ், முஸ்லிம் இனவாதிகள் மீண்டும் இனவாதத்தினை தூண்டி போரை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள். இந்த கடும் போக்கு இனவாதிகளின் சதி முயற்சிகளை முறியடிக்க நாட்டு மக்கள் அனைவரும் இனபேத மின்றி ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

நாட்டில் பயங்கரவாதத்தினை இல்லாதொழித்து நாட்டினை அபிவிருத்திப் பாதைக்கு கொண்டு சென்று கொண்டிருக்கும் நிலையில் நாட்டில் குழப்ப நிலையினை ஏற்படுத்த இனவாத சக்திகள் முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றன.

நாட்டில் எந்த ஒரு இனத்திற்கும் கூடுதல் அதிகாரம் வழங்கப்படமாட்டாது. அவ்வாறு வழங்கப்பட்டால் ஏனைய சமூகங்களும் அதிகாரங்களை கேட்கும் நிலை ஏற்படும் . குறிப்பாக பெரும்பான்மை இனமான சிங்களவர்களும் அதிகாரங்களை கேட்பார்கள்.

எனவே இனவாதிகளுக்கு அதிகாரங்கள் வழங்காது நாட்டு மக்களுக்கு தேவையானதை மட்டும் செய்ய வேண்டும் என்றார்.(அ-2)

# ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அவுஸ்திரேலியா விமர்சனம்

இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் விமர்சனம் வெளியிட்ட நாடுகளில் அவுஸ்திரேலியாவும் இணைந்துள்ளது.

எனினும் இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்ற கோரிக்கையை அது விடுக்கவில்லை.

மாறாக இறுதிப்போரின் போது இரண்டு தரப்பும் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் முழுமையான விசாரணைகளை நடத்த வேண்டும் என்று அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கெவின் ரூட் கோரியுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பல நல்ல பரிந்துரைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. எனினும் போர்க்குற்றங்கள் தொடர்பில் அந்த அறிக்கை உரிய பரிந்துரைகளை முன்வைக்கவில்லை. எனவே, தெளிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் உரிய காலவரையறைக்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கெவின் கேட்டுள்ளார்.

இவரின் இந்த விமர்சனத்தை அவுஸ்திரேலியாவின் தமிழ் காங்கிரஸ் வரவேற்றுள்ளது. எனினும் அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த விடயத்தில் மேலும் முனைப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த காங்கிரஸ் கோரியுள்ளது.

போர்க்குற்றங்களை விசாரணை செய்ய சர்வதேச பொறிமுறை தேவை என்ற நிலைப்பாடு எதிர்வரும் ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டில் முன்வைக்கப்படும் போது அதற்கு அவுஸ்திரேலியா ஆதரவளிக்கும் என்று தாம் நம்புவதாக காங்கிரஸின் பேச்சாளர் வருணி பாலா நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இதேவேளை, கெவின் ரூட்டின் விமர் சனம் செயலற்ற விமர்சனம் என்ற அவுஸ் திரேலிய கிரீன் கட்சியின் செனட்டர் லிரிஹ ரொன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் திஸர சமரசிங்க, கெவின் ரூட்டின் விமர்சனம் குறித்து இது வரை கருத்து எதனையும் வெளியிடவில்லை. (அ-2)



ஞானம் பத்திரிகை கொழும்பு தமிழச்சங்கத்தில் நடத்திய வாழ்த்து விழாவில் சாகித்திய இரத்தினா பட்டம் பெற்ற பேராசிரியர் சபா ஜெயராசாவிற்கு கவிஞர் துரையர் பாராட்டுக் கவிதை வழங்கி கௌரவிப்பதையும் திருமதி பா. சபாஜெயராசா, ஓய்வுபெற்ற அதிபர் க. புனேந்திரநாதன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# கைதியொருவர் கடத்தப்பட்டார்

கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு முன்னால் ஆயுததாரிகளால் கைதியொருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார். வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து வழக்கு விசாரணைக்காக நேற்று கொண்டுவரப்பட்ட கைதி ஒருவரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார்.

52 வயதான தெமட்டகொட பகுதியைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தெரிய வருவதுடன் இது தொடர்பன மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# இராட்சத இழுபடகுகள் மூலம் கொள்ளைபோகும் எமது கடல் வளம்

இங்கு காட்டப்பட்டுள்ள கடல் வளம் தொடர்பான புகைப் படங்கள் இம்மாத முற் பகுதியில் இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் ஆகிய இடங்களில்



இந்திய இராட்சத இழுவைப்படகுகள் மூலம் இலங்கையின் வடபகுதி கடற்பரப்பினுள் கொள்ளையிட்டுச் சென்ற பெறுமதிமிக்க கடல் வளங்களாகும். *டைகர் பிறோன்* எனப்படும் பெரிய இறால் (6-7 இறால் - 1 கிலோ) சங்கு,

1500 கி.கிராம் நிறையுடையது. கோழி உணவு தயாரிப்பதற்காக லொறியில் மண் அள்ளி ஏற்றப்படுவது போல பல லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்டன. ஏனைய பெறுமதி மிக்க மீன் வகைகள் பெட்டிகளில் அடைக்கப்பட்டு சந்தைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இராமேஸ்வர படகுகள் பாக்கு வளைகுடா பகுதியிலும் மண்டபம் படகுகள் மன்னார் வளைகுடா பகுதியிலும் இலங்கைக்குட்பட்ட வடபகுதி கடற்பரப்பில் வாரத்தில் மூன்று நாட்கள் நுழைந்து இவ்வாறான பெறுமதிமிக்க கடல் வளங்

மதிப்பிடப்பட்டன. 1 படகில் இவ்வளவு உற்பத்தி எனில் - தமிழக கரையோரத்தில் உள்ள சுமார் 3000 படகுகளும் எமது பகுதியில் மீன் பிடியில் ஈடுபடுமாயின் நிலமை என்னவாகும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

படகுகள் சுமார் 50-



60 அடி நீளமானவை கூடிய குதிரை வலுவுடைய இயந்திரம், வலையை இழுக்கும் விஞ்ச்

யும் பெறுமதி மிக்க மீன் களை இலக்கு வைத்து நடுத்தர- இரட்டை மடிகளும் இவர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

வலையின் அடியில் பாரமிக்க சங்கிலி பொருத்தப்பட்டுள்ளது

இவை அடித்தளத்தை வாரி இழுப்பதுடன் அங்கு காணப்படும் பவளப்பாறைகளையும் தகர்த்தெறியக் கூடியவை பாறைகளில் வலை சிக்காதிருக்க இறப்பர் உருளை



தது.

அவர்கள் இப்படித்தான் கூறுகிறார்கள். மிகச் சிறந்த வளமிக்க பகுதி வடகடல். அள்ள அள்ள குறையாத செல்வம் அங்கு உள்ளது.

அடிவாங்கினாலும் நாங்கள் போய்த்தான்



தீருவோம். அந்தளவுக்கு வளமானது. இலங்கையில் இந்த வலை தடைசெய்யப்பட்டுள்ளது அவர்களுக்குத் தெரியும். வடபகுதி மீனவர்கள் பாதிப்புக்குள்ளாவதும் அவர்களுக்குப் புரியும்.

ஆயினும் இதை அவர்கள் கருத்தில் கொள்வதாக இல்லை.

அவிழ்த்துவிட்ட எருமை மாடுகள் போலவும் திறந்த வீட்டுக்குள் நாய்கள் புகுவது போலவும் வட பகுதிக்குள் நுழையும் இந்திய இழுவைப் படகுகளை தடுத்து நிறுத்தும் வல்லமை இலங்கை அரசு



கணவாய், நண்டு, திருக்கை இத்துடன் அறக்குளா, சீலா, பாரை, முரல்,வாவல் ஆகிய பெறுமதிமிக்க பெரிய



மீன் வகைகளும் கறல், திரளி, பன்னா, கத்தனை எனப்படும் சிறிய(by catch) வகைகளும் அடங்குகின்றன. (கடலட்டை இந்தியாவில் தடை என்பதால் அது வெளிக்காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது)

சிறிய ரக மீன்கள் பெரும்பாலும் 1000 -

களை கொள்ளையிட்டு வருகின்றனர் தலா ஒரு படகில் கழிவு மீன்கள் சிறிய குஞ்சுகள் உட்பட 1000-1500 கி.கிராம் வரையிலும் பெரிய மீன்கள் ஏறத்தாழ 500 கி.கிராம் வரையிலும் இறால் 25-30 கிலோ நண்டு, கணவாய் 50-100 கிலோ வரையிலும் படகுகளில் இருந்து இறக்கப்பட்டு சந்தைப் படுத்தபட்டமை நேரில் அவதானிக்கப் பட்டது. இலங்கை ரூபாவில் 2 லட்சம் முதல் 2.5 லட்சம் பெறுமதியுடையதாக இது



அத்துடன் பெரிய இழுவை மடி. மடியானது ஒற்றைப் படகு மூலம் இழுக்கப்படுபவையாகவும் இரு படகுகள் ஒரு மடியை இழுத்துச் செல்லக்கூடிய ஆற்றல் கொண்டவையாகவும் உள்ளன. அடித்தளத்தில் வாழும் இறால் நண்டு போன்றவற்றை பிடிக்கக் கூடியதாக அடித்தள இழுவை மடி

களும் - அடியில் பொருத்தப்பட்டுள்ளன.

இராமேஸ்வரம், மண்டபம் ஆகிய பகுதிகளில்



பெருந்தொகையான இழுவைப்படகுகள் வலுபிதியாக மீன்களோடு கரை வந்து சேர்ந்தமையையும் சில படகுகள் அவசர அவசரமா கரை இழுக்கப்பட்டு திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிந்

கலாநிதி
சூசை ஆனந்தன்

க்கு கிஞ்சித்தும் கிடையாது.

தமிழக அரசும் மத்திய அரசும் இந்த நாசகார அழிவை கண்டும் காணாதது போலவுமே உள்ளது உருப்படியான ஆக்கபூர்வமான தீர்வுகள் எதையும் கண்டுபிடிக்கும் இலாபகரமற்ற அரசுகளாகவே இலங்கையும் இந்திய மத்திய மாநில அரசுகளும் உள்ளன. எமது வளம் முழுவதும் அழிக்கப்படும் வரை இந்திய மீனவர்கள் ஓயமாட்டார்கள் போலவே படுகிறது.

# அதிசய உலகம்...

## இதயம் இல்லாத மனிதன்

கடந்த வருடம் மார்ச் மாதம் கிரேய் லெவிஸ்(55 வயது) இனை உடைய நபர் இதயக் கோளாறு காரணமாக இறக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார். உயிருக்கு போராடிக்கொண்டிருந்த அவரை காப்பாற்றுவதற்கு புதிய முயற்சி ஒன்றை மேற்கொள்ள டெக்ஸாசில் உள்ள Texas Heart Institute ஐ சேர்ந்த இரு வைத்தியர்கள் முடிவு செய்தனர். குறித்த நபரின் இதயத்தை முற்றாக அகற்றிவிட்டு இதயம் போன்று செயற்படக்கூடிய Contunuos flos எனும் செயற்கை உபகரணத்தை பொருத்தினர். இதயத்தை போன்று இந்த உபகரணம் துடிப்பதில்லை. ஆனால், இதயம் செய்யக்கூடிய அனைத்து வேலைகளையும் செய்கிறது. இந்த முயற்சி வெற்றியளித்ததுடன் சிகிச்சை முடித்த அடுத்த நாளே குறித்த நபர் மருத்துவர்களுடன் பேசக்கூடியளவு போதிய உடல் நலம் பெற்றார்.



முதல் முயற்சியாக காளை மாடு மீது இந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இப்போது மனிதனிடமும் மேற்கொள்ளப்பட்டு வெற்றியளித்துள்ளது. இதன் மூலம் மருத்துவ உலகில் புதிய புரட்சி ஏற்பட்டுள்ளது. உலகில் இதயமில்லாது நடமாடும் முதல் மனிதன் எனும் பெயரை கிரேய் லெவிஸ் எனும் அந்த நபர் பெற்றுள்ளார்.

## அதிசய வண்ணத்தில் பிறந்த அபூர்வ அணில்

என்னதான்இறைவனால் படைக்கப்பட்ட உலகு என்று கருதினாலும் அவனது அருளால் சில. சந்தர்ப்பங்களில் சில அதிசயங்கள் நிகழத்தான் செய்கின்றது. இவ்வாறு காணப்படும் பல அதிசயங்களுக்கு மத்தியில் புதிதாக ஊதா நிறத்தில் அணில் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இரு சிறுவர்கள் தமது வீட்டுத்தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்த வேளையில் இந்த அதிசய அணிலை கண்டுபிடித்துள்ளனர்.

## செயற்கை இரத்தம் தயாரித்து விஞ்ஞானிகள் சாதனை

லண்டன் இங்கிலாந்தின் எடின்பர்க்கும் பிரிஸ்டல் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் இணைந்து செயற்கை இரத்தம் உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். இவர்கள் ஸ்டெம் செல்களில் இருந்து சிவப்பு அணுக் ளை உருவாக்கி அதன் மூலம் செயற்கை இரத்தத்தை தயாரித்தனர்.

இந்த இரத்தத்தில் 25 இலட்சம் சிவப்பு அணுக்கள் இருக்கும். இவற்றை மனித உடலில் செலுத்த முடியும்.

எந்தவிதமான நோய் தொற்றும் ஏற்படாது. இன்னும் சில ஆண்டுகளில் இது பயன்பாட்டுக்கு வரும்.

## திரையரங்கில் காணப்படும் மிகப் பிரமாண்டமான திரை

சில தினங்களுக்கு முன் உலகிலேயே மிகவும் பெரிய சினிமா திரையை உருவாக்கி சாதனை நிலைநாட்டப்பட உள்ளதாக தகவல் வெளிவந்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரிலுள்ள ஐ மக்ஸ் டார் லிங் கார்பர் எனும் திரையரங்கில் இப்பிரமாண்டமான முப்பரிமாண திரை உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலைவிட்டமானது முன்பு 29.5 மீற்றர் நீளமுடையதாக காணப்பட்டது. தற்பொழுது 35.7 மீற்றர் நீளமுடையதாக பிரதியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



## மடித்து வைக்கக் கூடிய ஸ்கூட்டர் அறிமுகம்



பயணங்களின் போது கைகளிலேயே மடித்து எடுத்துச்செல்லக் கூடிய மிகவும் எளிமையான எலக்ரோனிக் ஸ்கூட்டர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சந்தைக்கு வரவுள்ள இந்த ஸ்கூட்டரானது 4,000 யூரோ பெறுமதி உடையது. அத்துடன் பல சிறப்பம்சங்களையும் கொண்டுள்ளது என்றும் விரைவில் இதன் சிறப்பம்சங்களின் பட்டியல் வெளியிடப்படும் என்றும் தெரிகிறது.

## புற்றுநோயை கண்டறியும் ஸ்மார்ட் போன்கள்!



மனிதனில் ஏற்படும் புற்றுநோயை ஸ்மார்ட் போன்களை பயன்படுத்தி கண்டறியமுடியும் என கொரிய நாட்டு ஆராய்ச்சியாளர்கள் குழுவொன்று தெரிவித்துள்ளது.

அதாவது ஜேர்மன் நாட்டு பத்திரிகை ஒன்றில் வரையப்பட்டிருந்த பயனுள்ள வேதியியல் (ஆங் கிவான்டே கெமி) எனும் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தவாறு தொடுதிரை தொழில் நுட்பத்தை(டச் ஸ்கிரீன்) புற்றுநோயை கண்டறிவதற்கு பயன்படுத்த முடியும் என்று கூறியுள்ளனர்.

இதற்காக தொடுதிரை கொண்ட ஸ்மார்ட் போன்கள் பிடிஏ மற்றும் தொடுதிரை தொழில்நுட்பத்தைக் கொண்ட எலக்ட்ரிக்கல் சாதனங்களையும் இதற்காக பயன்படுத்த முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இத்தொழில்நுட்ப மானது உடலிலுள்ள புரதம் டிஎன்ஏ (பரம்பரை அலகு மூலக்கூறு) என்பவற்றிலிருக்கும் எலக்ட்ரான் ஏற்றங்களுக்கு உகந்தவாறு செயற்படுவதால் இவ்வாறு புற்றுநோயை கண்டறிய, சாதகமாக பயன்படுத்த முடியும் என்பதில் தமக்கு 100 சதவீத நம்பிக்கை இருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## தரையிலும் நீரிலும் மிகவேகமாக ஓடும் றக்



வாகனங்களை அறிமுகப்படுத்தும் போது பொதுவாக தரைவழி, நீர்வழி, வான்வழி என்று பிரித்துத்தான் அறிமுகப்படுத்துவார்கள். இருந்தும் ஆகாயத்திலும் நீரிலும் செல்லக்கூடிய சீ பிளேன்கள் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

தற்பொழுது அவற்றையெல்லாம் தாண்டி தரையிலும் நீரிலும் பாய்ந்து செல்லக்கூடிய புதியவகை றக் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஈரூடகத்திலும் பயணம் செய்யும் ஆற்றலை கொண்டுள்ளதால் அதற்கு Amphitrucks என பெயரிடப்பட்டுள்ளது.

மேலும் இவை நீரில் மணிக்கு 48 கிலோமீற்றர் என்ற வேகத்தில் பயணம் செய்யக்கூடியன.

சாதாரணமாக 12 பயணிகள் ஒரே நேரத்தில் பயணம் செல்லக்கூடிய இந்த றக்குகளின் நிறை 1500 கிலோ கிராம்கள் ஆகும். இவற்றின் விசேட அம்சம் என்னவென்றால் நான்கு சில்லுகளும் நேரடியாக என்ஜினுடன் தொடர்புடையவை என்பதாகும்.

# இரத்தினங்களின் 84 வகைகள்




உலகில் நூற்றுக்கணக்கான கற்கள் (Stones) இருந்தாலும் அவற்றில் சில வகைக் கற்களே மக்களுக்கு நன்மைகள் கொடுக்கும் என ஆன்றோர்கள் கண்டறிந்துள்ளனர்!

இவைகள் தான் மிக்க ஆற்றல் கொண்ட கற்களாகும். மேலும் நல்ல அதிர்வுகளைக் கொண்டவை எனவும் சொல்லியுள்ளனர். இதுவரையிலும் 84 வகையான கற்களை மனிதர்கள் பயன்படுத்தி வெற்றியும் பெற்றுள்ளனர்.

இந்த 84 இரத்தினங்களில் நவரத்தினங்களும் அடங்கும். நவரத்தினங்களை விலை உயர்ந்த கற்கள் (Precious Stones) என்றும் மற்ற வகைக் கற்களை உப இரத்தினங்கள் (Semi Precious Stones) என்றும் பிரித்துள்ளனர். உப இரத்தினங்களைஅதிர்ஷ்ட கற்கள் (Lucky Stones) என்றும் கூறுவார்கள். இவற்றில் சில வகைக் கற்கள் மருத்துகள் தயாரிக்க மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

### நவரத்தினங்கள்(Navarathnas)

### 1.மாணிக்கம் (Ruby)

இது சிவப்பாக இருக்கும் நவரத்தினங்களில் ஒன்று! சூரியன் கிரகத்திற்குப் பிரதிநிதியாக (Representative) இருக்கிறது! இது மிகவும் விலை உயர்ந்த கல்லாகும்! கருஞ்சிவப்பு முதல் பல வர்ணங்களில் இருக்கும். இதன் பௌதீக அமைப்பு$Al_2 0_3$ கடினத் தன்மை எண் 9 அடர்த்தி எண் 4.00.

### 2.முத்து(Pearl)

இது கடலில் விளையும் இரத்தினமாகும். சந்திரனின் சக்தியை ஆகர்ஷிக்கும் இரத்தினமாகும். இது இயற்கை இரத்தினம். (Organic gems) வகையில் சேர்ந்ததாகும். சிவப்பு, மஞ்சள்,கறுப்பு,கலர் உள்ள முத்துக்கள் கூட விளைவதுண்டு.

இதன் இரசாயன குறியீடு:-

$CaCo_{31}$ , $C_3H_{18}$ $N_9$ $N_9$ $O_{11}$ $nH_2O$

இதன் கடினத்தன்மை 3. அடர்த்தி எண் 2.7.1. ஒளி விலகல் எண் 1.53-1.68.

### 3.மஞ்சள்புஷ்பராகம்(Yellow Sapphire)

இந்த வகைக் கற்கல் பல நிறங்களில் கிடைக்கின்றன! இது நவரத்தினங்களில் ஒன்றாகும்! கறுப்பு நிறம் முதல் மிகவும் லேசான மஞ்சள் நிறம் வரை கிடைக்கின்றன. இதுவும் மாணிக்கத்தின் வர்க்கத்தை ( Corundum) சேர்ந்த இரத்தினமாகும். இந்த வகைக்கற்கள் மஞ்சளாக இருக்கும் போது மஞ்சள் புஷ்பராகம் எனவும், நீல நிறத்தில் இருக்கும் போது நீலமணி (Blue Sapphire) என்றும் அழைக்கப்படும்.




இதன் இரசாயன குறியீடு $Al_2 0_3$ இத கடினத்தன்மை 9 அடர்த்தி எண் 4. ஒளிவிலகல் எண் 1.76-1.77 ஆகும்.இது குரு பகவானுக்குரிய இரத்தினமாகும்.

### 4.கோமேதகம் (Hessonite)

இதுவும் நவரத்தினங்களில் ஒன்றாகும். இதுZircon குடும்பத்தைச்சேர்ந்ததாகும். இது தேன் நிறம் முதல் பசுவின் சிறுநீர் நிறம் வரை பல நிறங்களில் கிடைக்கிறது. அதன் இரசாயனக் குறியீடு $Ca_3 Al_2 (so_4)_3$ இதன் கடினத்தன்மை 71/4, இதன் அடர்த்தி எண் 3.65 ஒளி விலகல் எண்1.73-1.75 ஆகும்.இது இராகு கிரகத்திற்குரியதாகும்.

### 5.மரகதம்(Emerald)

இது பச்சை நிறமுள்ளது. நவரத்தினங்களில் ஒன்றாகும். இது சேலாச பச்சை நிறம் முதல் அடர்த்தியான பச்சை நிறம் வரை கிடைக்கிறது. இதன் குறியீடு $B_3 Al_2 (Sio_3)_6$ இதன் கடினத்தன்மை 7 1/2ஆகும். இதன் அடர்த்தி எண் 2.71. இதன் ஒளி விலகல் எண் 1.57-1. 58. இந்த இரத்தினம் புதன் கிரகத்திற்கு உரியதாகும்.

### 6.வைரம் (Diamond)

இது இரத்தினங்களில் மிகவும் விலை உயர்ந்தது. இது வெள்ளை, மஞ்சள், றோஸ், சிவப்பு மற்றும் பல நிறங்களில் கிடைக்கின்ற நவரத்தினங்களில் இதுவும் ஒன்றாகும். மிகவும் ஒளிமிக்கது. இதன் இராசாயனப் பொருட்கள் குறியீடு C. அதாவது வெறும் காபன் அல்லது கரியின் பரிணாம வளர்ச்சியே வைரம் ஆகும்.இதன் கடினத்தன்மை 10 . இதன் அடர்த்தி எண் 3.52 ஒளிவிலகல் எண் 2.42 ஆகும். இது சுக்ரன் கிரகத்திற்கு உரியதாகும்.

### 7.வைடூரியம்(Cats Eye)

இது பூனையின் கண் மாதிரி அமைப்புள்ள அற்புத இரத்தினமாகும். இதுவும் நவரத்தினங்களில் ஒன்றாகும். இது சாம்பல் நிறம்,மஞ்சல் மற்றும் கறுப்பு நிறங்களில் கிடைக்கிறது. இதன் மேற்பரப்பில் ஒளிக்கோடானது பிரகாசிக்கும். இது கிரிஸ்ஸோபெரில் குடும்பத்தைச் சேர்ந்தது.

இதன் இரசாயன குறியீடு $BeAl_2O_4$ இதன் கடினத்தன்மை 81/2இதன் அடர்த்தி எண் 3.71 இதன் ஒளிவிலகல் எண் 1.74-1.75 ஆகும். இது கேது கிரகத்தின் தன்மைகளைப் பெற்றிருக்கும் இரத்தினமாகும்.

### 8.நீலம் (Blue Sapphire)

இதுவும் Corundum குடும்பத்தைச் சேர்ந்தது இது கரும் நீலம் முதல் வெளிர் நீலம் வரை பல வித வர்ணங்களில் கிடைக்கின்றது. இதுவும் நவரத்தினங்களில் ஒன்றாக விளங்குகின்றது. இதன் இரசாயன குறியீடு $Al_2 0_3$(அலுமினிய டிரை ஒட்சைட்) என்பதாகும் இதன் கடினத்தன்மை 9. இதன் அடர்த்தி எண் 4.00 ஒளிவிலகல் எண் 1.76-1.77. இது சனிபகவானுக்குரிய கல் ஆகும்.

### 9.பவளம்(Coral)

இது கடலில் (முத்தைப்போலவே) இயற்கையாக விளையும் இரத்தினமாகும் சில வகை பூச்சிகளின் எச்சமே பவளப்பாறையாக உருவாகிறது.இது நவரத்தினங்களில் ஒன்றாகும். இது சிவப்பு நிறமாகும். வெள்ளை மற்றும் வேறு சில நிறங்களிலும் கிடைக்கிறது.

இதன் குறியீடு$CaCo_3$ ($OrC_3H_{48}$ $N_9$ $O_{11}$) இதன் கடினத்தன்மை 3. இதன் அடர்த்தி எண் 2.68. ஒளிவிலகல் எண் 1.49-1.66 ஆகும். இது செவ்வாய்க் கிரகத்திற்கு உரியது. இதுவரையிலும் சொல்லப்பட்ட 9 வகை இரத்தினங்களும் (மணி களும்) நவரத்தினங்கள் என்னும் பெருமைக்குரியவை. நவக்கிரகங்களில் கதிர்களை நேரடியாக கிரகித்து மனிதனுக்கு மிகவும் நல்ல பலன்களாக மாறிக் கொடுப்பவை.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## கைதடி வடக்கு மூலிகைப்பரம்பலை பயன்படுத்தலும் பாதுகாத்தலும்

வாதநிவாரணியை முருங்கை இலை போன்றவற்றுடன் சேர்த்து வறுத்து உண்ணலாம். மூட்டுவலி,வாத நோய்க்கு இது சிறந்த உணவாகும். முடக்கறுத்தானை இரசம் வைக்கும் போது அதனுள் சேர்க்கலாம். வாதநோயை குணப்படுத்தும்.

வாதமடக்கி , ஆமணக்கம் இலை, எருக்கலமிலை இவற்றை வீக்கம் ,நோவு, வலி உள்ள இடங்களில் சூடாக்கிய பின் வைத்து கட்டலாம். இதனால் மூட்டுக்களில் ஏற்படும் வீக்கம் தணிந்து மூட்டுவலி குறையும்.

கீரைவகைகள் மிகவும் உயர்ந்த போஷாக்கு பெறுமானம் உள்ளவை. ஆதலால் நாள்தோறும் ஒவ்வொரு கீரையை மாற்றி மாற்றி சமைக்கலாம். அல்லது பல கீரைகளை சேர்த்து கலப்பு கீரையாகவும் பாவிக்கலாம். வாய் அவியல்வியல் நிலைமைகளில் அகத்தியில் சொதி செய்து சாப்பிடலாம். வயிறெரிவு நிலைமைகளில் பிரண்டை துளி ரில் சம்பல் அல்லது துவையல் செய்து சாப்பிடலாம்

நாவற்பழவிதையை காயவைத்து பொடித்து துளாக்கி அதனை நேநீர் தயாரிப்பது போல தயாரித்து நீரிழிவு நோய் உள்ளவர்கள் குடிக்கலாம்.

கருவேப்பிலையையும் சிறுகுறிஞ்சா இலையும் காயவைத்து பொடித்து காலை, மாலை ஒரு தேக்கரண்டி சுடுநீரில் உண்டு வர நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இருக்கும்.

ஆவரசம் இலை, பூ, காய், விதை, வேர் இவற்றை காயவைத்து பொடித்து ஒரு மேசைக்கரண்டி சுடுநீரில் ஊறவைத்து நீரை குடித்து வர நீரிழிவு கட்டுப்பாட்டில் இருக்கும்..

| முகப்பரு மற்றும் மேனி அழகிற்கு | தோல்வியாதிகள் | சுளி, இருமல் நிலைமைகள் |
|---|---|---|
| கற்றாளை | பூவரசு | தூதுவளை |
| செவ்வரத்தை | சுரக்கொன்றை | கற்பூரவள்ளி |
| வட்டத்துத்தி-வேர்ப்பட்டை | கோடக்கடலை | ஆடாதோடை |
| பாகல் இலை | வேம்பு | துளசி |
| பப்பாசி | இலந்தை | எருக்கு |
| கரட் | காக்கணவன் | கொவ்வை |
| வேம்பு | சின்ன அம்மான் பச்சரிசி | மொசுமொசுட்டை |
| சின்னஅம்மான் பச்சரிசி | புங்கு | இக்கிரிவேர் |
| திருநீற்றுப்பச்சை | புளி | கண்டங்கத்தரிவேர் |
| | செம்முள்ளி | |
| | பொடுதலை | |
| | பச்சிலை | |
| | குப்பைமேனி | |

| பொடுகு, மயிர் உதிர்தலுக்கு | காய்ச்சல் நிலைமைகள் | மூலநோய் |
|---|---|---|
| பொடுதலை | வேப்பம்பட்டை | காட்டுக்கரணை |
| செம்பரத்தம்பூ | வெண்கொடிவேலி வேர்ப்பட்டை | வட்டத்துத்தி |
| எலுமிச்சைம்பழம் | விஷ்ணு கிராந்தி | வண்டு கொல்லி |
| இலந்தை சுரப்பு | காட்டு நிலவேம்பு | |
| இலந்தை இலை | | |

கற்றாளை உள்ளிருக்கும் சோறை நீரில் கழுவி மஞ்சளுடன் சேர்த்து குதப்பி முகத்தில் பூசி குளித்து வர முகம் பொழிவுறும். செவ்வரத்தம் இலையை அரைத்து முழுகிவர முடி பளபளப்பாக வளரும்.

வட்டத்துத்தி வேர்ப்பட்டையை நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சி முகப்பருமேல் தடவ முகப்பரு நீங்கும்.

பப்பாசிப்பழம்,கரட் போன்றவற்றை உணவில் சேர்த்தோ அல்லது யூஸ் செய்தோ குடித்துவர தோல் பளபளக்கும்.

இலந்தை அரப்பை அல்லது இலையை அரைத்து முழுக பொடுகு தீரும்.

பொடுதலையை அரைத்தோ அல்லது காயவைத்து பொடியை சுடுநீரில் கலந்தோ முழுக பொடுகு தீரும்.

பூவரசம் பட்டை, வேப்பம் பட்டை, புங்கம் பட்டை, புளியமிலையை அவித்து அந்நீரால் புண்கள், சிரங்கு போன்வற்றை கழுவிவர அவை குணமடையும்.

தூதுவளை அல்லது மொசுமொசுக்கை இலையில் சம்பல் அல்லது துவையல் செய்து உண்ண இருமல் நீங்கும்.

ஆடாதோடைவேர் இக்கீரி, கண்டங்கத்தரி வேர் இவை சம எடை எடுத்து 4 கப் நீர்விட்டு ஒரு கப் ஆக வற்றும் வரை காய்ச்சி காலை 1/2 கப் மாலை 1/2 கப் குடித்துவர இருமல் , சளி தீரும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

வேப்பம் பட்டையை அவித்து 30மில்லி லீற்றர் குடித்துவர காய்ச்சல் தீரும் கருணைக்கிழங்கை உணவில் சேர்க்க மூல வியாதிகள் ஏற்படும் அவஸ்தைகள் தீரும்.

வட்டத்துத்தி பூவை அவித்து மூல வாயி லை கழுவ மூலவியாதியால் ஏற்படும் அவஸ்தை தீரும்.வெண்டிகொடி வேலி வேரை எடுத்து பாலில் அவித்து காயவிட்டு அதன் பட்டை எடுத்து ஒரு பங்குக்கு 4 பங்கு நீர்விட்டு ஒரு பங்காக வற்ற காய்ச்சி 30 மில்லிலீற்றர் காலை, மாலை குடித்துவர காய்ச்சல் தீரும்.

சிறுநீரில் எரிச்சலுக்கு வாழைத் தண்டின் சாறை குடித்து வர சிறுநீர் எரிச்சல் நீங்கும்..

# தண்டனைக் களத்திற்கு இழுக்கப்போகிறதா அமெரிக்கா?



ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீமானம் ஒன்றை கொண்டு வரவேண்டியது தவிர்க்க முடியாத விடயம் என்று அமெரிக்கா உணர்ந்துள்ளது. போர் முடிவுக்கு வந்து கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாகப் போகின்றநிலையில்தான், அமெரிக்கா இந்த முடிவுக்கு வந்திருக்கிறது.

கடந்த மாத இறுதியில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளிங்டன், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிசுக்கு எழுதிய கடிதம் ஒன்றில், ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படும் தீர்மானத்தை ஆதரிக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளதாக கூறியிருந்தார்.

இதற்கு முன்னதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பலரும் பல்வேறுவிதமான எச்சரிக்கைகளை கொடுத்திருந்தனர். அவையெல்லாம் ஏதோ ஒரு செய்தியாளர் சந்திப்பில் வெளியிடப்பட்டவை அல்லது அறிக்கையாக வெளியிடப்பட்டவைதான். அவற்றை முற்றிலும் அதிகாரபூர்வமான எச்சரிக்கையாக கருதமுடியாது.

இப்போது ஹிலாரி ஹிலின்டன் அனுப்பியுள்ள கடிதம் முறைப்படியாக எச்சரிக்கை செய்யும் வகையிலானது. எழுத்து மூலமாக கொடுக்கப்பட்டுள்ள முன்னறிவித்தல் இது.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கப்போகிறது என்ற தகவல் பரிமாறப்பட்டுள்ளதற்கு தனியே எச்சரிக்கும் நோக்கம் மட்டும் காரணமல்ல.

அதற்கு அப்பால், இலங்கைக்கு மேலும் சந்தர்ப்பம் அளிக்கும் வாய்ப்பையும் அமெரிக்கா நிராகரிக்க வில்லை என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். அதனால்தான் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை வோஷிங்டனுக்கு விளக்கமளிக்க வருமாறு கேட்டுள்ளார் ஹிலாரி கிளின்டன்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையைக்கொண்டு வரத்தயாராயுள்ள அமெரிக்கா, அதனைச் சத்தமின்றி செய்துவிட்டுப் போயிருக்கலாம். அதாவது, ஈரானைப் போன்று, ஈராக்கைப்போன்று லிபியாவைப் போன்று இலங்கையைத் தண்டிக்க வேண்டும் என்று அமெரிக்கா கருதியிருந்தால், அப்படித்தான் செய்திருக்கும்.

ஆனால், இலங்கையைத் தண்டிக்கும் நோக்கத்தை மட்டும் அமெரிக்கா கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அதற்கும் அப்பால், அமெரிக்காவிடம் இன்னொரு திட்டம் உள்ளது. ஹிலாரியின் கடிதம்கிடைத்த பின்னர், கடந்த வாரம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விவ காரம் குறித்தே அதிகம் விவாதிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே பல பொது மேடைகளில் அவர், மேற்குலகம் தனது ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்வதாகக் கூறியிருந்தார். எவ்வாறாயினும் அமெரிக்காவின் இப்போதைய நகர்வுகளை அரசாங்கம் ஆட்சிக் கவிழ்ப்புக்கான முயற்சியாகவே கருதுகிறது போலுள்ளது. அதற்கான வாய்ப்புக்களை முற்றிலுமாக நிராகரிக்க முடியாது போனாலும் அமெரிக்காவின் இப்போதைய இலக்கு அதுவாக இருக்க வாய்ப்பில்லை.



அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இலங்கையில் நிலையான அமைதியை உருவாக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறது. அப்படிச் செய்யாது போனால், அது தெற்காசியாவில் இந்தியா, சீனா, அமெரிக்கா என்ற பல்வேறு நாடுகளும் தொடர்புபட்ட ஒரு சிக்கலைத் தோற்றுவித்துவிடும்.

சீனாவின் பிடியிலிருந்து இலங்கையை விடுவிக்க முடியாது. மீண்டும் போர் ஒன்று இலங்கையில் எந்த வடிவத்திலும் உருவாவதை அமெரிக்கா அனுமதிக்கப் போவதில்லை. ஏனென்றால், அது சீனாவின் நலன்களை வலுப்படுத்திவிடும்.

இப்படிப்பட்ட நிலையில், இலங்கையில் நிலையான அமைதியை உருவாக்குவதற்காக சில அரசியல் நகர்வுகள் அவசியம் எனக் கருதுகிறது அமெரிக்கா.

போர்முடிவுக்கு வருவதற்கு சில நாட்கள் முன்னதாக கிட்டத்தட்ட விடுதலைப்புலிகளின் பிரசன்னம் இனிஇல்லை என்ற நிலையில், அது பற்றி அமெரிக்கா என்ன கருத்தை முன்வைக்க வேண்டும் என்ற ஆலோசனை ஒன்றை வோசிங்டனுக்கு முன்வைத்திருந்தார் அப்போதைய தூதுவர் றெபேட் ஓபிளேக்.

அதில் அவர் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள், பொறுப்புக் கூறுதல் மற்றும் உறுதியான அதிகாரப்பகிர்வுடன் கூடிய அரசியல் தீர்வு போன்றவற்றை வலியுறுத்த வேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயங்களை இலங்கை அரசிடம் இருந்து எதிர்பார்ப்பதாக போர் முடிந்தவுடன் அமெரிக்கா வெளிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இதையேதான் பெரும்பாலான நாடுகளும் கூறின. ஆனால், அவை எதுவும் அரசாங்கத்தின் காதுகளுக்கு எட்டவேயில்லை. அப்படி எட்டியிருந்தால், இந்த மூன்று ஆண்டுகளிலும் அரசாங்கம் சர்வதேசத்தின் ஆதரவைப் பெற்றிருக்க முடியும்.

போர்முடிவுக்கு வந்தபோது உலகமே இலங்கையைப்பார்த்து வியந்தது. இது எப்படிச் சாத்தியமானது என்று அறியும் ஆவல் பிறந்தது. ஆனால், இப்போது அந்த வியப்பு தொலைக்கப்பட்டுவிட்டது. இப்போதும் அமெரிக்கா, பொறுப்புக் கூறும் விடயத்தில் அடுத்து என்ன செய்யப்போகிறீர்கள், வடக்கு மாகாண சபைக்கு எப்போது தேர்தல் நடத்தப் போகிறீர்கள். நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான அரசியல்தீர்வை எப்போது கொண்டுவரப் போகிறீர்கள் என்றுதான் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை அழைத்துக் கேட்கப்போகிறது. இந்தக் கேள்விகளுக்கு வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் எந்த வகையில் பதில் சொல்லப்போகிறார் என்பது தெரியவில்லை.

ஆனால் ஒன்று, இனிமேலும் வாக்குறுதிகளில் மீது நம்பிக்கை வைத்து செயற்படும் நிலையில் அமெரிக்கா போன்ற நாடுகள் இருக்காது என்பது தெளிவு.

ஏற்கனவே சர்வதேச சமூகத்துக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை அரசாங்கம் நம்பகமான முறையில் நிறைவேற்றவில்லை என விமர்சிக்கப்பட்டுள்ளது. இதனால்தான் அமெரிக்கா நேரடியாகவே களத்தில் இறங்கத் தீர்மானித்துவிட்டது. அந்த முடிவை எடுத்தபின்னர்தான் ஹிலாரி கிளின்டன் ஒரு முன்னறிவித்தலை கொடுத்தார்.

இந்த முன்னறிவித்தலைக் கண்டு இலங்கை அரசாங்கம் பதறிப்போகும் என்பதும் பேசுவதற்காக ஓடிவரும் என்பதும் எதிர்பார்த்த விடயம் தான். அதன்படி நடக்கப்போவதாகவும் தகவல்கள் வெளியாகின்றன.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்து அமெரிக்கா என்ன செய்யப் போகிறது? கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றி அதன்மீது தடைகள் விதிக்கப் போகிறதா அல்லது பொறுப்புக் கூறுவதற்கான சர்வதேசப் பொறிமுறை ஒன்றை உருவாக்கப் போகிறதா அல்லது போர்க்குற்ற நீதிமன்றத்தின் முன் நிறுத்தப் போகிறதா? இவையெல்லாம் பொதுவாக உலகில் கையாளப்படும் வழிமுறைகள்தான்.

ஒரு முறை பிளேக் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் மூலம் குற்றசாட்டுக்களுக்கு உரிய வகையில் பதிலளிக்கப்படாது போனால், சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்துக்கு இலங்கை இழுத்து வரப்படும் என்று வெளிப்படையாகவே எச்சரித்திருந்தார்.

ஆனால், அமெரிக்காவின் இறுதியான நோக்கமும் இலக்கும் இலங்கையைத் தண்டனைக் களத்துக்குள் கொண்டு செல்வதாகவே இருக்கும் என்று கருத முடியாது. அதற்குக் காரணம் நெதர்லாந்து வானொலிக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கான அமெரிக்க பிரதிநிதிகள் குழுவின் பேச்சாளர் டேவிட் கென்னடி அளித்துள்ள செவ்வி.

இந்தச் செவ்வியில் அவர் நல்லிணக்கம் மனித உரிமைகள் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஒரு கருவியாக இந்தத் தீர்மானம் பயன்படும் எனக் கருதுவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஆக, இந்தத் தீர்மானத்தை ஒரு கருவியாகப் பாவித்து இலங்கை அரசைப் பணியவைத்து சில காரியங்களை நிறைவேற்ற அமெரிக்கா முனைகிறது.

பொறுப்புக் கூறுதல், மனித உரிமைகளை உறுதி செய்தல், அதிகாரப்பகிர்வு, அரசியல் தீர்வு என்பனவே அந்த இலக்குகள். அதற்கான கருவியாகவே போர்க்குற்ற விவகாரங்களை அமெரிக்கா

**கே. சஞ்சயன்**

கையில் எடுக்கப் பார்க்கிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பொறுப்புக் கூறுதல் தொடர்பான உறுதியான திட்டங்களை அமெரிக்கா எதிர்பார்த்தது. ஆனால், அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் அறிக்கை அமையவில்லை. அதனை அமெரிக்கா எப்போதோ கூறியும் விட்டது. இந்த நிலையில்தான் அமெரிக்கா ஜெனிவாவில் ஒரு தீர்மானத்தை கொண்டுவரும் முடிவுக்கு வந்துள்ளது...


றொபேட் ஓபிளேக்

இப்போதும்கூட அரசாங்கம் இந்த இலக்குகளை எட்டுவ்தற்கு உறுதியான நடவடிக்கை எடுப்பதற்கு முழு உத்தரவாதம் அளிக்குமேயானால் ஜெனீவாவில் இலங்கை மீதான பிடி தளரக்கூடும். இல்லையேல் ஜெனீவாவில் மட்டுமன்றி அதற்கு அப்பாலும் அமெரிக்காவின் பிடி இறுக்கமடையவும் கூடும்.

# இலங்கை மீனவர்களை விடுவிக்க தமிழக அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் 25 இலங்கை மீனவர்களை விடுதலை செய்வதற்கு தமிழக அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தமிழக அரசு மற்றும் அதன் கண்காணிப்பு குழு என்பன இணைந்து இந்த தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளதாக சென்னைக்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டது.

இதற்கமைய குறித்த மீனவர்களை விடுதலை செய்யும் உத்தரவிற்கு மத்திய அரசின் அனுமதியை பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர்கள் விடுவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தெய்வேந்திரமுனை, குடாவெல்ல மற்றும் நில்வல்ல ஆகிய பகுதிகளில் இருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்றிருந்த மீனவர்களே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஐந்து படகுகளும் விடுவிக்கப்படவுள்ளன.

இதற்கமைய அடுத்த வாரத்துக்குள் குறித்த மீனவர்கள் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என சென்னைக்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# டெங்கு தொற்றுக்குள்ளானவர்களை இனம்காண புதிய செயற்றிட்டம்

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

டெங்கு தொற்றுக்குள்ளானவர்களை ஆரம்பத்திலேயே இனங்காண்பதற்கான புதிய செயற்றிட்டத்தினை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

இதற்காக ஐரோப்பிய ஒன்றியம் 17 கோடி ரூபாவை வழங்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

டெங்குநோயாளர்களை ஆரம்பத்திலேயே இனங்காணல், எந்தவொரு பிரதேசத்திலும் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படின் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல் என்பன இதன்கீழ் முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் ஆராய்வதற்கு சிங்கப்பூர், ஜேர்மன், சுவீடன் மற்றும் அமெரிக்க பல்கலைக்கழகங்களின் போரசிரியர்கள் நேற்றுமுன்தினம் நாட்டிற்கு வருகை தந்திருந்தனர்.

இவர்கள் இலங்கையில் தங்கியிருந்து நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான சிபாரிசுகளை வழங்கவுள்ளனர்.

இந்த செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் டெங்குக் காய்ச்சல் அதிகம் பரவும் இடங்களிலும் ஹோமாகம வைத்தியசாலையை அண்மித்த பகுதிகளிலும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது. (அ-2)

# நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யுங்கள்

## ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

சுங்கத் திணைக்களத்தின் மூலம் வரவு செலவுத்திட்டத்தின் நூற்றுக்கு 56 வீதத்தை அரசாங்கத்துக்குப் பெற்றுக்கொடுக்கும் வகையில் சுங்க அதிகாரிகள் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுங்கத்துறை உத்தியோகத்தர்கள் தமது பெற்றோர்களுக்கு வழங்கக்கூடிய கௌரவத்தையும் கடமையையும் தாய் நாட்டுக்கும் வழங்குவதற்கு முன்வர வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சுங்கத்திணைக்களத்திற்கு சுங்கப் பரிசோதகர்கள் மற்றும் உதவி சுங்க அதிகாரிகளாக 280 பேரைப் புதிதாக நியமிக்கும் விசேட வைபவம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வங்கித்துறைகளில் 20 ஆயிரம் ரூபாவிலிருந்து 80 ரூபா வரை சம்பளம் பெற்று வந்தவர்கள் அதனை விட்டுவிட்டு சுங்கத் துறையின் பதவிகளுக்காக வந்துள்ளனர் என்றால் சுங்கத்துறையின் மேன்மை பற்றி கூற வேண்டியதில்லை.

சுங்கப் பரிசோதகர் மற்றும் சுங்க உதவி அதிகாரிகள் 280 பேருக்கு நியமனம் வழங்கப்படுகின்றது. இவர்கள் தொழில் இல்லாதவர்களல்ல. இவர்களில் நான்கு பேரைத் தவிர ஏனையோர் அத்தகைய தொழில்களில் இருந்தே வந்துள்ளனர்.

சுங்கத்துறை முன்னேற்றமடையும் அளவுக்கு அரசாங்கத்திற்கான வருமானமும் அதிகரிக்க வேண்டும். நாம் எதிர்பார்ப்பது போல் வரவு செலவுத்திட்டத்தில் 100 இற்கு 56 வீதத்தை சுங்கம் அரசாங்கத்திற்கு பெற்றுத்தரும் என்பதே எமது நம்பிக்கை.

இப்போதுள்ள சுங்கத்துறை உத்தியோகத்தர்கள் மிக நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் பணிபுரிவதன் மூலம் நாட்டுக்காக நிறைவேற்ற வேண்டியதை சரிவர செய்ய வேண்டும். நாடு பாரிய முன்னேற்றம் கண்டு வருகின்றது.

சகல பகுதிகளிலும் அபிவிருத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. சுங்கம் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு வழங்கும் பலம் மிகுந்த நிறுவனமாக விளங்குகின்றது.

அரசாங்கத்திற்கு வருமானத்தை பெற்றுத்தருவதற்கென சில நிறுவனங்களே உள்ளன. நமது பங்களிப்புக்கள் தாய் நாட்டை கட்டியெழுப்புவதற்கே என்ற உணர்வு இருக்க வேண்டும் என்றார். (அ-2)



## கரைவலைப்பாடுகள் வழங்குவதற்கான கூட்டம்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கின் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் கரைவலைப்பாடுகள் வழங்குவதற்கான கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு மருதங்கேணி பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில்நடைபெறவுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் அறிவித்துள்ளார்

எனவே, கரைவலைப்பாடுடன் தொடர்புடையவர்களை கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-64)

# பார்க்கின்சன் நோய்க்கு 2 மரபணுக்களே காரணம்

## விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

பார்க்கின்சன் நோய்க்கு காரணமான 2 மரபணுக்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதன்மூலம் இந்நோய் பாதித்துள்ளவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் முன்னேற்றம் ஏற்படும் என்று கருதப்படுகின்றது.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நரம்பு அறிவியல் ஆய்வு மைய விஞ்ஞானிகள் புரதம் சேர்வதற்கு காரணமான மரபணுக்கள் தான் பார்க்கின்சன் நோய்க்கு காரணம் என்றும் இத்தகைய மரபணு உள்ளவர்களுக்கு மிக விரைவாக இந்நோய் வருவதையும் ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர்.

பார்க்கின்சன் நோய் உருவாவதற்கு இவ்விரு மரபணுக்கள் எந்த அளவுக்கு உறுதுணையாக இருக்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்விரு மரபணுக்கள் பார்க்கின்சன் நோய் வளர்ச்சிக்கு 94 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை உறுதுணையாக இருக்கின்றன என்று ஆராய்ச்சிக்குழுவின் தலைவர் டாக்டர் யுயே ஹூவாங் தெரிவித்துள்ளார்.

மூளையில் அதிக அளவு புரதம் சேர்வதே பார்க்கின்சன் நோய்க்கு முக்கிய காரணமாகும். இதனால் நினைவாற்றல் செயலிழந்து போகும். சினுசிலின் எனப்படும் புரதம் அதிகம் சேர்வதால் நினைவுத் திறனுக்கு காரணமாக விளங்கும் டோபமைன் எனும் செல்கள் உற்பத்தி குறையும். இதனால் நினைவுத்திறன் மங்கிப் போகின்றது. இதன்காரணமாக தலை நிற்காமல் ஆடுவது, கை, கால்கள் கட்டுப்பாடின்றி துடித்துக் கொண்டே இருப்பது, செயற்பாடுகளில் மந்த நிலை போன்றவை ஏற்படும். இவை அனைத்தும் பார்க்கின்சன் நோயின் அடையாளமாகும்.மூளையில் புரதம் அதிகம் சேர்வதற்கு காரணமாக என்சிபி மற்றும் எம்எபிடி ஆகிய மரபணுக்கள் காரணமாக உள்ளன.

இப்போதைய கண்டுபிடிப்பின் மூலம் இவ்விரு மரபணுக்களை செயலிழக்கச் செய்வது அல்லது இதை முற்றிலுமாக அழிப்பதன் மூலம் பார்க்கின்சன் நோய்க்கு நிரந்தத் தீர்வு காண முடியும். பார்க்கின்சன் நோய் பாதித்த 123 பேரை பரிசோதித்ததில் இவர்களில் அனைவருக்குமே என்சிபி மற்றும் எம்எபிடி மரபணுக்கள் இருந்தது தெரியவந்துள்ளது. (அ-2)

# றோலர் படகு பாவித்தவர்கள் கிளி.பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் றோலர் படகுகள் இரண்டு கிளிநொச்சி கடற்றொழிலாளர்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இரண்டு நாட்களுக்கு முன்னர் குருநகர் கடற்பரப்பில் இருந்து சென்ற றோலர் படகு கிளிநொச்சி கடற்பரப்பில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

இதன்போது அங்கு வந்த கிளிநொச்சி கடற்றொழிலாளர்கள் றோலர் படகு உட்பட அதில் சென்ற தொழிலாளர்களை நேற்றுமுன்தினம் இரவு பிடித்து கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தடை செய்யப்பட்ட இவ் றோலர் படகுகள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவதனால் எமது கடல்வளம் பாதிக்கப்படும் என்ற காரணத்தினாலேயே இவர்களை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக கிளிநொச்சி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான றோலர் படகுகளை கடற்றொழிலில் ஈடுபடுத்துவது சட்டத்துக்கு விரோதமான செயல் என பலதரப்பட்டவர்களாலும் பல தடவை எச்சரிக்கை செய்யப்பட்டு வருகின்ற போதும் இவ்வாறான தொழிலை மீனவர்கள் கைவிடுவதாக இல்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)

# புதையல் தோண்டிய 6 பேர் கைது

(கொழும்பு)

உப்புவெளி, பெரியகுளம் பகுதியில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த 6 பேர்கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் புராதன இடமொன்றில் புதையல் தோண்டுவதற்கு முயற்சித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்மூலம் சில மாணிக்க கற்கள் அவர்களுக்கு கிடைத்துள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் திருகோணமலை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# கலிபோர்னியாவில் 10.07 ரிக்டர் அளவில் திடீர் நில நடுக்கம்

அமெரிக்காவின் வடக்கு கலிபோர்னியாவின் கடலோரப் பகுதியில் நள்ளிரவு 10. 7 மணியளவில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது.வெஸ்ட் இன்டீஸ் தீவுகளின் டிரினி டாட் நகரின் கிழக்கே 30 கி.மீ. தொலைவிலிருந்து கலிபோர்னியா வரை இடைப்பட்ட கடல் பகுதியில் இந்த நிலநடுக்கம் உருவானது இது ரிக்டர் அளவில் 5.6 ஆக பதிவாகி இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்ட போது கலிபோர்னியா மாகாணத்தின் பல இடங்களில் உணரப்பட்டது.கட்டடங்கள், வீடுகளில் லேசான அதிர்வு ஏற்பட்டது.சில இடங்களில் கட்டடங்கள் குலுங்கியதாகவும் புவியியல் நிபுணர் ஜெனி மானஸ் தெரிவித்தார்.நில நடுக்கம் ஏற்பட்ட போது தான் இருந்த கட்டடம் லேசாக தன்னை தள்ளாட வைத்ததாக தெரிவித்தார்.

ஹீபா என்ற இடத்தை சேர்ந்த டெப்பி பெய்லி என்ற பெண் கூறுகையில், 4.5 விநாடிகளே நிலநடுக்கம் நீடித்தது.அப்போது நான் லேசான அலையில் தள்ளாடுவது போல் உணர்ந்தேன் என்றார்.லேசான நில நடுக்கம் என்பதால் சேதம் எதுவும் இல்லை.டிரினிடாட்டில் நில நடுக்கம் ஏற்பட்ட போது பாடசாலைகளில் பீதி ஏற்பட்டது. இதனால் மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர். (அ-2)

# ஆசிய பசுபிக் கண்டத்தில் அமெரிக்க படைகள் குவிப்பு; சீனா கடும் எச்சரிக்கை



ஆசிய பசுபிக் மண்டலத்தில் அமெரிக்காவின் படைக் குவிப்பு குறித்து சீன துணை ஜனாதிபதி ஷி ஜின்பிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.சீனாவின் அடுத்த ஜனாதிபதியாக பொறுப்பேற்க உள்ள தற்போதைய துணை ஜனாதிபதி ஷி ஜின்பிங் நான்கு நாட்கள் சுற்றுப் பயணமாக நேற்று முன்தினம் அமெரிக்க தலைநகர் வோஷிங்டன் சென்றார்.

தனது பயணம் குறித்து தி வோஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகையில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் ஆசிய பசுபிக் மண்டலத்தில் சீனா, அமெரிக்கா ஆகிய இருநாடுகளுக்கு தேவையான இடமுள்ளது.ஆனால், அமைதி, பொருளாதார வளர்ச்சியை விரும்பும் நாடுகள் அந்த மண்டலத்தின் படையை குவிப்பதை அப்பகுதி நாடுகள் நம்பிக்கையுடன் பார்க்கவில்லை.இருப்பினும் அமெரிக்காவுடன் சீனா பல்வேறு தரப்புகளிலும் தனது ஒத்துழைப்பை முழுமையாக அளிக்கும் என தெரிவித்துள்ளார்.வோஷிங்டனில் ஷி, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சந்திப்பு நடக்க உள்ளது.தொடர்ந்து அவர் அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனில் அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்துகிறார்.அதனையடுத்து அயோவா மாகாணம் மற்றும் லாஸ் ஏஞ்சல்ஸ் நகர் ஆகிய இடங்களுக்கு செல்கிறார். ஷி யின் இந்த சுற்றுப் பயணம் உலகளவில் மிக் முக்கியத்துவம் வாய்ந்த பயணமாக பார்க்கப்படுகிறது. (அ-2)

# இந்தியாவை நாடக்கூடாது ஒபாமா தெரிவிப்பு

அமெரிக்க நிறுவனங்கள் திறன்மிக்க தொழிலாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இந்தியாவை நாடக்கூடாது என்று ஜனாதிபதி ஒபாமா கேட்டுக்கொண்டுள்ளார். வோஷிங்டன் நகரில் பேசிய அவர்,

பொறியியல், ஆராய்ச்சி, அறிவியல் போன்ற துறைகளில் உள்ள காலியிடங்களை சீனா, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த படித்த இளைஞர்களைக் கொண்டு நிரப்புவதை தவிர்த்து உள்நாட்டை சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்றார்.

மேலும் அமெரிக்காவில் கல்விக்கடனுக்கான வட்டியை அதிகரிக்கும் யோசனையை நிராகரித்துள்ள அவர் உயர்கல்வி மிகவும் செலவு பிடிக்கும் அம்சமாகி விடக்கூடாது என்று தெரிவித்தார். (அ-2)




# சிரிய வன்முறையை தடுக்க விரைகிறது அமைதிப் படை

சிரியாவில் பொதுமக்களுக்கு எதிராக இராணுவம் நடத்தி வரும் வன்முறையை தடுப்பதற்காக ஐ.நா. அரபு லீக் இணைந்த சர்வதேச அமைதிப் படையை சிரியாவுக்கு அனுப்ப வேண்டும் என அரபு லீக் கேட்டுக் கொண்டுள்ளது.

சிரியாவில் கடந்த 11 மாதங்களாக ஜனாதிபதி அசாத்திற்கு எதிராக மக்கள் போராடி வருகின்றனர். அவர்களை இராணுவம் மூலம் அடக்கி வருகிறார் அசாத். இப்போராட்டத்தில் இதுவரை 7 ஆயிரம் பேர் பலியாகியுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் எகிப்து தலைநகர் கெய்ரோவில் கூடிய அரபு லீக் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் ஐ.நாவின் பாதுகாப்பு குழு மற்றும் அரபு லீக் இணைந்து சர்வதேச அமைப்பு படை ஒன்றை சிரியாவுக்கு அனுப்ப வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகளுக்கு அரசியல் மற்றும் இராணுவத் தளபாடங்கள் ரீதியாக உதவி செய்ய தயார் எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

சிரியாவில் பிரதிநிதி இல்லாமல் எடுக்கப்பட்ட இந்த முடிவை நிராகரிப்பதாக அந்நாடு தெரிவித்துள்ளது. அரபு லீக்கின் இந்த முடிவை ரஷ்யா மீண்டும் எதிர்த்துள்ளது.இது குறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லேவ்ரோவ் அளித்த பேட்டியில் சர்வதேச அமைதிப் படை சிரியாவுக்குள் நுழைவதற்கு முன் அங்கு இருதரப்பும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் .ஆனால், அங்கு அரசை எதிர்த்து வரும் ஆயுதக் குழு யார் கட்டுப்பாட்டிலும் இல்லை என தெரிவித்தார்.

லிபியாவைப் போல சிரியாவிலும் நேட்டோ படைகளைஅனுப்பி அமைதியை கொண்டு வருவதில் பல்வேறு அரசியல் ரீதியிலான சிக்கல்கள் இருப்பதால் அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் அதில் தயக்கம் காட்டி வருகின்றன .(அ-2)

# பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது கிரீஸ் சிக்கன நடவடிக்கைகள் அறிமுகம்



(கிரீஸ்)

பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் கிரீஸ் நாடு பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.இதற்கு கிரீஸ் நாடாளுமன்றம் நேற்று முன்தினம் அங்கீகாரம் அளித்தது.

இதனையடுத்து தலைநகர் ஏதென்சில் நேற்று முன்தினம் மக்கள் தீவைப்பு உட்பட பல்வேறு வன்முறை போராட்டங்களில் ஈடுபட்டனர் இந்த வன்முறை தற்போது நாட்டின் பிற பகுதிகளுக்கும் பரவி வருகிறது.ஐரோப்பாவில் அயர்லாந்து, போர்த்துக்கல் நாடுகளை அடுத்து கீரிஸ் பொருளாதார நெருக்கடியில் சிக்கியது.கடந்த இரு ஆண்டுகளில் [illegible]த்து நடந்த பல்வேறு கூட்டங்களில் கிரீசுக்கு கடன் உதவி வழங்குவதென ஐரோப்பிய கூட்டமைப்பு முடிவெடுத்தது.

இதன் ஒரு பகுதியாக கடந்த 2010 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தவணையாக 110 பில்லியன் யூரோ கடன் வழங்கப்பட்டது.2011 ஆம் ஆண்டு ஜுலை மாதத்திலும் மேலும் 109 பில்லியன் யூரோ வழங்குவதாக முடிவெடுக்கப்பட்டது.

ஆனால்,அந்தக் தொகை குறைவானது என்பதால் 130 பில்லியன் யூரோவாக அதிகரிக்கப்பட்டது.ஆனால், இத் தொகையை வாங்க வேண்டும் என்றால் வேலைக் குறைப்பு,சம்பளம், ஓய்வூதியம் இவற்றில் குறைப்பு போன்றசிக்கனநடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டும் என சர்வதேச நாணய நிதியமைப்பும் ஐரோப்பியயூனியனும் வலியுறுத்தின.

இதனையடுத்து இந்த சிக்கன நடவடிக்கைகள் அண்மையில் கிரீஸ் நாடாளுமன்றத்தில் மசோதாக்களாக முன்வைக்கபட்டன. பெரும்பான்மையான வாக்குகளுடன் இந்த மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.

இவற்றின்படி எதிர்வரும் 2015 ஆண்டுக்குள் பொதுத்துறையில் பணியாற்றும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் வீட்டுக்கு அனுப்பப்படுவர் .ஊழியர்களின் சம்பளத்தில் 22 சதவீதம் குறைக்கப்படும்.

இந்த நடவடிக்கைகளை எதிர்த்து நேற்று முன்தினம் கிரீஸ் தலைநகர் ஏதென்சில் மக்கள் வன்முறையில் ஈடுபட்டனர். திரையரங்குகள், கடைகள், விடுதிகள், வங்கிகள் ஆகியவை தீக்கிரையாக்கப்பட்டன.150 கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. 48 கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.68 பொலிஸார் உட்பட 100 பேர் காயம் அடைந்தனர். 130 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது இக்கலவரம் நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான தெஸ்ஸலொகினி மற்றும் சுற்றுலாத் தீவுகளான கிரீட், கோர்பு ஆகியவற்றிக்கும் நாட்டின் மத்திய பகுதிகளில் உள்ளசிறுநகரங்களுக்கும்பரவிவருகிறன.

இது குறித்து பிரதமர் லுக்காஸ் பப்பதிமோஸ் விடுத்துள்ள அறிக்கையில் இது போன்ற வன்முறைகளுக்கு ஜனநாயக நாட்டில் இடமில்லை. மீறி ஈடுபடுவோர் தண்டிக்கப்படுவர் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# நெல்லிற்கு உத்தரவாதவிலை பெற்றுத்தரக்கோரி

# முல்லை அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில உள்ள துணுக்காய் மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு ஆகிய 5 பிரதேச செயலர் பிரிவுகளிலும் தற்போது காலபோக நெல்அறுவடை நடைபெறுகின்றது.

இந்நிலையில் உத்தரவாத விலையில் கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சின் நெல்சந்தைப்படுத்தல் சபை, பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் என்பன நெல்லைக் கொள்வனவு செய்யாதிருப்பதன் காரணமாக நெல்லை தனியார் துறைக்கு மிகக்குறைந்த விலைக்கே விற்க வேண்டியுள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

எனவே இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி விவசாயிகளும் கமக்கார அமைப்புக்களின் பிரதி நிதிகளும் இணைந்து முல்லை மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகனுக்கும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் நெல் சந்தைப் படுத்தல் சபைக்கு பொறுப்பான அமைச்சிற்கும் அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இடம்பெயர்வின் பின் மீள்குடியேறிய நாம் பொருளாதார வசதிகள் இன்மையால் அரச வங்கிகள், தனியார் வங்கிகளில் வட்டிக்கு பணம் எடுத்து கூலித் தொழிலாளர்களின் கூலி உயர்வு, விதை உள்ளீடுகள் மற்றும் கிருமிநாசினிகள் ஆகியவற்றின் விலையேற்றம், அறுவடை இயற்திரங்களின் கட்டண உயர்வு என்பவற்றுக்கு மத்தியில் எமது குடும்ப அங்கத்தவர்களின் கடின உழைப்புடனும் விவசாயத்தில் ஈடுபட்டோம்.

ஆயினும் தற்போது அறுவடைக்காலத்தில் உரிய விலைக்கு நெல்லை விற்பனை செய்யமுடியாது. மிகக்குறைந்த விலைக்கு தனியாரிடம் விற்பனை செய்வதால் உற்பத்திக்கு செய்த செலவைக்கூட பெறமுடியாமலும் வங்கிகளில் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

தனியார் வியாபாரிகள் 70 கிலோ கிராம் கொண்ட நெல்லை ஆயிரத்து 200 ரூபா விற்கும் சில இடங்களில் இதைவிட குறைவாகவும் கொள்வனவு செய்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நாம் உற்பத்தி செய்யும் நெல்லை அவித்து அரிசியாக்கிய 10 கிலோ கொண்ட பையொன்று 640 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதனால் உற்பத்தியாளராகிய நாம் பாதிக்கப்படும் போது தனியார் வியாபாரிகள் கொள்ளை இலாபம் பெறுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் இதனைக் கருத்தில் எடுத்து அரசு உரிய உத்தரவாத விலைகளில் விவசாயிகளிடம் இருந்து நெல்லை முறையாக கொள்வனவு செய்ய வேண்டும் என்பதுடன் எதிர்வரும் காலங்களில் விவசாயிகள் உற்பத்தியில் ஈடுபடும் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டுமெனவும் அந்த மகஜரில் குறிப்பிடப் பட்டிருந்தது. (அ-3-15)

# ஆஸ்துமா நோயினை தடுக்கவல்ல தாய்ப்பால்

## ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

குழந்தைகளுக்கு ஆஸ்துமா வராமல் தடுக்க தாய்ப்பால் பெரிதும் உதவுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். தாய்ப்பால் ஊட்டுவதால் குழந்தைகளுக்கு 6 வயது வரை ஆஸ்துமா நோய் தாக்காமல் இருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஒடாகோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவக் குழு மேற்கொண்ட ஆராய்ச்சியில் குழந்தைகளுக்கு பல்வேறு நோய்கள் வராமல் தடுக்கும் சக்தி கொண்டதாக தாய்ப்பால் விளங்குகிறது என்று கண்டுபிடித்துள்ளனர். குறிப்பாக ஆஸ்துமா எனப்படும் மூச்சுத் திணறல் ஏற்படுவதிலிருந்து 6 வயது வரை குழந்தைகளைக் காப்பதாக ஆராய்ச்சி மூலம் நிரூபித்துள்ளனர்.

இதற்காக நியூஸிலாந்தில் உள்ள ஆயிரத்து 105 குழந்தைகளிடம் கடந்த 6 ஆண்டுகளாக மேற்கொண்ட ஆராய்ச்சியில் இது தெரியவந்துள்ளதாக இக்குழுவினர் வெளியிட்டுள்ள ஆராய்ச்சிக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குறைந்தபட்சம் 3 மாதம் வரை தாய்ப்பால் புகட்டிய குழந்தைகளுக்கு 59 சதவீத பேருக்கு ஆஸ்துமா ஏற்படவில்லை. ஆறு ஆண்டுகளாக நடத்தப்பட்ட இந்த ஆராய்ச்சி முடிவுகள் தாய்ப்பால் ஊட்டுவதை மேலும் வலியுறுத்துவதோடு அதன் நன்மைகளை மக்களிடையே பரப்ப உதவும் என்று ஆராய்ச்சிக்குழுவின் தலைவர் டாக்டர் கேரன் சில்வெர்ஸ் தெரிவித்தார். (அ-2)

# நாடு, நகர கட்டளைச்சட்டத்தை மாநகரசபை எதிர்க்க வேண்டும்

## அரியநேத்திரன் எம்.பி. கோரிக்கை



நாடு, நகர கட்டளைச்சட்ட்மூலத்தை கிழக்கு மாகாண சபை எதிர்க்க வேண்டும் இல்லையேல் மாகாணம் எங்கும் தமிழர் பிரதேசங்களில் புத்த விகாரைகளும் சிங்கள குடியிருப்புகளும் அமைக்கப்படுவதை யாராலும் தடுக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டு.ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு, நகர கட்டளைச்சட்டம் கிழக்கு மாகாணசபையால் நிறைவேற்றப்பட்டால், தங்கு தடையின்றி சகல பிரதேசங்களிலும் இவ்வாறான விகாரைகள் உருவாகும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே கிழக்கு மாகாண சபை இந்தச்சட்ட மூலத்தை எதிர்க்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

அண்மையில் மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேசத்திற்குட்பட்ட கச்சக்கொடி சுவாமி மலை எனும் இடத்தில் உள்ள தமிழ் மக்களின் பிரதேசத்தில் பௌத்தபிக்குகளுக்கு இராணுவத்தினரும் சேர்ந்து பௌத்தவிகாரை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தமைக்கு எதிர்ப்பை வெளியிட்டேன் எனக் குறிப்பிட்டார்.

மேலும் எமது கலாசாரத்தை சீரழிப்பதற்கு சில சக்திகள் களமிறக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பாடசலை மாணவர்களை குறிவைத்தே இவர்கள் செயற்படுகின்றனர் எனவே, ஒவ்வொரு பெற்றோரும் தங்களது பிள்ளைகளை எந்நேரமும் கண்காணித்து நன்றாக வழிநடத்த வேண்டும்.

அத்துடன் கையடக்கத் தொலைபேசி போன்ற சில நவீன தொழில்நுட்ப சாதனங்கள் தகவல் தொழில் நுட்பத்திற்கு அளப்பெரிய பங்காற்றினாலும் இவற்றை தவறாக பயன்படுத்துவதால் மாணவர்கள் சீரழிக்கப் படுகின்றனர்.

விளையாட்டென்பது ஒரு மாணவனுக்கு மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. மாணவர்கள் விளையாட்டுப்போட்டிகளில் கலந்து கொள்வதால் அவர்களின் உடலும் உள்ளமும் தூய்மையடைகின்றது. இதனால் அவர்கள் சிறந்த ஒழுக்க சீலர்களாக திகழ்வதற்கு வழி வகுக்கின்றது என்றார். (அ-2)

# சேவைநலன் பாராட்டுவிழா

மானிப்பாய் சண்டிலிப்பாய் கோட்டகல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி பிரதிக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ள எஸ்.கந்தசாமிக்கு சேவைநலன் பாராட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி கனிக்கிழமை காலை 9.15 மணிக்கு யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபர் சங்கத்தலைவர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசிரியுரையினை யாழ். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் வி. ஸ்ரீகாந்தன், யாழ்.புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜே.ஏ.ஜேசுதாசன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ)





நவாலி சென்பீற்றேஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் இடைவேளை நிகழ்வினையும் வெற்றியீட்டிய இல்லத்திற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச. சிவானந்தராஜா வெற்றிக்கேடயம் வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் எஸ். ஜெகதீஸ்வரன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# கடத்தப்பட்ட கைதியை விடுவிக்க உறவினர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதியொருவர் கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்தின் நுழைவாயிலுக்கு அருகில் வைத்து நேற்று முன்தினம் ஆயுதக்குழுவொன்றினால் கடத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடத்தப்பட்டவரின் உறவினர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று காலை புதுக்கடை நீதிமன்றத்திற்கு முன்னால் கூடிய உறவினர்கள் பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து மதியம் வழக்குரைஞர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஹெரோயின் வழக்கொன்றின் சந்தேக நபரான வி.என்.சந்திரபால அல்லது தெமட்டகொட மேர்வின் அல்லது ஜேசுதாசன் என்பவரே கடத்தப்பட்டுள்ளார்.




மிரிஹான பொலிஸாரினால் கங்கொடவில நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றின் சந்தேக நபரான அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவரின் பிணை கோரிக்கை மனு தொடர்பான விசாரணைக்காக நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்படிருந்தார்.

அவருக்கு பிணை வழங்க மேல் நீதிமன்றம் அனுமதியளித்தது. அதன்பின் பிணை ஆவணங்கள் தயாராகும் வரை சந்தேக பிரதம நீதவான் நீதிமன்ற கூண்டில் வைப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்ட போதே கடத்தல் இடம்பெற்றுள்ளது.

வெள்ளை வானொன்றில் வந்த ஆயுதம் ஏந்திய குழுவினர் சிறை அதிகாரியின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டி சந்தேக நபரை பலவந்தமாக கொண்டு சென்றனர்.

சந்தேக நபரின் மனைவி இதை தடுக்க முயன்ற போது அவரை மேற்படி குழுவினர் தள்ளிவிட்டு சந்தேக நபரை வானில் ஏற்றினர்.

பெரும் எண்ணிக்கையானோர் பார்த்துக் கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. (அ-2)

## பேருந்துகளை சேதப்படுத்திய 11 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

தனியார் பஸ் பகிஷ்கரிப்பின் போது போக்குவரத்தில் ஈடுபட்ட பேருந்துகளை சேதப்படுத்தி இடையூறு விளைவித்ததாக கூறப்படும் 11 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை ஜ-எல மற்றும் நாரஹேன்பிட்டி பகுதிகளில் கைது செய்யப்பட்டவர்கள் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

இவர்களில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் 35 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பஸ்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்த சந்தேகத்தின் பேரில் 46 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## அநீதியான முறையில் எரிபொருள் விலை

### சபையை கூட்ட கோருகிறார் ரணில்

(கொழும்பு)



பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு பிரதமர் டி.எம்.ஜயரத்னவிடம் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துத்துள்ளார்.

அநீதியான முறையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் மக்கள் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதுடன் நாட்டில் பிரச்சினை உருவாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் பெற்றோலை 110ரூபாவிற்கும், ஒரு லீற்றர் டீசலை 99ரூபாவிற்கும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றரை 89 ரூபா விற்கும் விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பம் இருந்தும் அநீதியான முறையில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூடவிருந்த போதிலும் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமருக்கு எதிர்க்கட்சித் தலைவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## தீவிரவாதிகள் சட்டத்தில் கைது

# மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவு எம்.பிக்களுக்கு மிரட்டல்

### பாராளுமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம்

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி நஷீத் ஆதரவு எம்.பி.க்களை தீவிரவாதிகள் சட்டத்தின் கீழ் கைது செய்ய போவதாக மிரட்டல் விடுக்கப்படுவதாக புகார் கூறப்படுகிறது. இதனை கண்டித்து பாராளுமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாலைதீவில் சமீபத்தில் பொலிஸார் திடீர் புரட்சியில் ஈடுபட்டதை அடுத்து ஜாதிபதியாக இருந்த முகமது நஷீத் பதவி இழந்தார். அவருக்கு பதிலாக முகமது வாகித் ஹசன் ஜனாதிபதி பொறுப்பை ஏற்றார்.அமெரிக்க தூதுக்குழுவின் யோசனையின் பேரில் அவர் புதிய மந்திரிகளை நியமித்தார். கடந்த 12ஆம் திகதி புதிய மந்திரிகள் பதவி ஏற்றனர். அப்போது எதிர்ப்பு தெரிவித்து பாராளு மன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது .உடனே சிலரை பொலிஸார் கைது செய்த பின்னர் விடுவித்தனர்.

இந்த புதிய அரசாங்கத்தை ஏற்க மறுக்கும் முன்னாள் ஜனாதிபதி நஷீத் பாராளுமன்றத்திற்கு உடனே தேர்தல் நடத்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றார்.தற்போது இயல்பு வாழ்க்கை திரும்பிய நிலையில் மீண்டும் அங்கு பதற்றம் ஏற்படும் சூழ்நிலை உருவாகி வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி நஷீத்தின் மாலைதீவு ஜனநாயக கட்சியை சேர்ந்த எம்.பிக்களை தீவிரவாதிகள் சட்டத்தின் கீழ் கைது செய்ய போவதாக புதிய அரசாங்கம் மிரட்டல் விடுவதாக புகார் கூறுகின்றார்கள். இதுபற்றி அந்தக் கட்சியின் முன்னாள் தலைவரும் தற்போதைய எம்.பி.யுமான மரியா டிடி கூறுகையில், எங்கள் கட்சி எம்.பிக்கள் அனைவரையும் தீவிரவாதிகள் சட்டத்தில் கைது செய்யப் போவதாக மிரட்டுகிறார்கள் என்று தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்,

இந்த சட்டத்தில் கைது செய்யப்படுபவர்களுக்கு 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கலாம். ஆகவே நீண்ட காலத்திற்கு எங்களை சிறையில் தள்ள முயற்சி செய்கின்றார்கள் என்று கூறினார்.

ஆனால், எம்.பி.க்களின் இந்த புகாரை புதிய அரசாங்கம் மறுத்துள்ளது. இயல்பு வாழ்க்கை திரும்பும் நோக்கத்திலேயே சில நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் என விளக்கம் அளித்துள்ளது.

நஷீத் ஆதரவாளர்கள் சுமார் 500 பேர் பாராளுமன்றம் முன்பு திடீரென்று திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். பொலிஸார் மீது அமெரிக்க டொலர், யூரோ நோட்டுக்களை வீசினர். தண்ணீர் போத்தல்களும் பாய்ந்தன. புதிய ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என கோஷமிட்டனர்.

ஆனால், பொலிஸார் இவர்கள் மீது தாக்குதல் எதுவும் நடத்தாமல் சிறிது நேரத்தில் அந்த இடத்தைவிட்டு அகற்றினார்கள். (அ-2)

## பேராதனை கலைப்பீட மாணவர்கள் பகிஷ்கரிப்பு

பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர்கள் விரிவுரைகள் மற் றும் பரீட்சைகள் என்பவற்றை புறக்கணித்து விட்டு அடையாள ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட் டுள்ளதாக கலைப்பீட மாணவர்கள் சங்கத்தின் தலைவர் நுவன சமீர கூறியுள்ளார்.

பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் சங்கத்தின் தலைவரை இடைநிறுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பல்கலைகழக மாணவர்கள் மூவரையும் உடனடியாக விடுதலை செய்யக்கோரியும் மேற்படி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

வெல்லுக அறமும் மெய்ம்மையும் பொறையும்
மேக மேனியனும் வெல்லாமல் செல்லுக பாவம்.
– வில்லி பாரதம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பக்கத்திருப்பவர் துன்பந்தனை பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி

பூமியின் படைப்பு அறத்தின் பாற்பட்டது. அறம் பிழைத்தால் அதன் முடிவு அழிவு என்பது சகல சமயங்களும் போதிக்கும் தத்துவம்.

ஆறறிவு படைத்த மனிதனால் மட்டுமே அறத்தைப் பின்பற்றவும் பாதுகாக்கவும் முடியும்.

ஐந்தறிவு மிருகங்களால் அறத்தை புரிந்து கொள்ளவும் தெரிந்து கொள்ளவும் இயலாது.

புலி புல்லுத்தின்பதற்கான சாத்தியமே இல்லை. சிங்கம் மானுடன் மகிழ்வு கொள்வதற்கான வாய்ப்பே கிடையாது.

புலிக்கும் சிங்கத்துக்கும் ஏனைய விலங்குகளே உணவு என்பது எழுதப்பட்ட விதியாயிற்று.

அவ்வாறாயின் அவற்றால் எங்ஙனம் தருமத்தைப் பேணமுடியும். ஆக மனிதனால் மட்டுமே சிந்திக்கவும் சிந்தித்தவாறு செயற்படவும் முடியும்.

இதன் காரணமாக முன்மாரி என்ற அறக்கருத்து தமிழ் இனப் பண்பாட்டில் ஆழமாக ஊன்றிக் கொண்டது.

நாட்டில் மும்மாரி பொலிய வேண்டும். அந்த மும்மாரி அறத்தை காப்பதற்கான உபயம் என்பது நம்பிக்கை.

வேதம் ஓதும் வேதியர்க்கும், கற்பு நெறி தவறா மங்கையர்க்கும், நீதி நெறிதவறா மன்னனுக்குமாக மும்மாரி பொழியும் என்பது அறத்தின் பாற்பட்ட தத்துவம்.

இத்தகைய தத்துவங்கள் அனைத்தும் நீதி நெறிதவ்றாத வாழ்விற்காக வகுக்கப்பட்டவை தான்.

கடந்த 12ஆம் திகதி இப்பகுதியில் 'ஏழை மாணவர்களுக்கு உதவ முன்வாருங்கள்' என்பது பற்றி எழுதியிருந்தோம்.

இப்பகுதியை வாசித்த அன்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு குறித்த பல்கலைக்கழக மாணவனுக்கு தாம் உதவி வழங்குவதாக குறிப்பிட்டு விபரங்களைக் கேட்டிருந்தார்.

ஆலடி காரைநகரைச் சேர்ந்த அந்த அன்பர் நேற்று முன்தினம் அலுவலகத்துக்கு நேரில் வருகை தந்து அந்த மாணவனுக்கு உதவி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

தமது உதவி விளம்பரப்படுத்தப்படல் ஆகாது என்பது அவரின் இறுக்கமான நிபந்தனை.

இந்த நிபந்தனையை அவர் விதித்தபோது நெஞ்சும் நெருடிக் கொண்டது.

குறித்த மாணவனுக்கு உதவி வழங்குவோம் என்று அவர் கூறியபோது, நெருடாத நெஞ்சம் தனது உதவியை விளம்பரப்படுத்தலாகாது என்றவுடன் ஏன் நெருடிக்கொண்டது தெரியுமா?

செய்கின்ற சிறு உதவிக்கு மேலாக பெரும் செலவில் விளம்பரப்படுத்தப்படும் இன்றைய காலத்தில் இப்படியுமா? என்ற நினைப்பே இதயத்தில் நெருடலை தந்தது.

இந்த மண்ணில் காற்று வீசவும் பூமி தாங்கவும் மழை பொழியவும் புண்ணியச் செயல்கள் தேவை. அந்தப் புண்ணிய காரியங்கள் ஏதோ ஒரு வகையில் வெளியில் தெரியாமல் நடந்து கொள்கிறது என்பதை நினைக்க நெஞ்சம் நெகிழ்ந்து கொள்கிறது.

கொடும் போரிலும் தமிழினம் நின்று நிலைத்து மீண்டும் எழுச்சி பெறுகிறது எனில் அதற்கான அடிப்படைக் காரணம் இந்த மண்ணில் நடக்கும் புண்ணியச் செயல்களே என்றால் அது மிகையன்று.

என் அயலவன் பசித்திருக்கும் போது நான் உண்ட உண்வு எப்படிச் சமிபாடடையும்.

மானிடம் என்பது தனித்து வாழ்வதன்று. அது மற்றவர்களையும் வாழவைப்பது. அந்த பண்பு எங்கள் மண்ணில் இருக்கின்றதெனும் நம்பிக்கையொன்றே போதும் நாம் எழுந்து நிற்பதற்கு.

# மக்கள் சொத்தை அரசதரப்பு சூறையாடினால் எரிபொருளின் விலை இப்படித்தான் ஏறும்

## கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரிக்காத நிலையில் அரசாங்கம் எரிபொருட்களின் விலையை உயர்த்தியிருப்பதானது முறையற்ற செயல் என கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளருமானதயா கமகேதெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளினால் நாட்டின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியடைவதுடன் பொதுமக்கள் மீதான சுமை மேலும் அதிகரிக்கும் என குறிப்பிட்ட அவர் அரசாங்கம் உடனடியாக எரிபொருட்களின் விலைகளை குறைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

உலக சந்தையில் தற்போது நிலவுகின்ற எரிபொருட்களின் விலைக்கேற்ப அரசாங்கம் 1 லீற்றர் டீசலினை 99 ரூபாய்க்கும், மண்ணெண்ணெயை 89 ரூபாய்க்கும், பெற்றோலினை 110 ரூபாய்க்கும் வழங்க முடியும்.

இந்த விலையானது 30 சதவீத இலாபத்தினை உள்ளடக்கியது .

முறையான பொருளாதார கொள்கையின்றி பல்வேறு திட்டங்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுப்பதால் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுகிறது.

அத்தோடு அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் மக்கள் சொத்தை சூறையாடுகின்றனர். இதனால் இறுதியில் இவற்றையெல்லாம் ஈடுசெய்வதற்காக அத்தியாவசிய பொருட்களின் விலைகளை நினைத்த விதத்தில் அதிகரித்து மக்கள் மீது மேலும்மேலும் அரசு சுமையேற்றுகிறது.

தேசத்துக்கு மகுடம் நிகழ்வின் மூலம் அரசாங்கத்திற்கு 2ஆயிரம் மில்லியன் ரூபாய் செலவு ஏற்பட்டுள்ளது. மிஹின் லங்கா நிறுவனம் தொடர்ந்தும் நட்டத்தில் இயங்குகிறது.

அத்தோடு அரசாங்கம் ஆரம்பித்துள்ள பல்வேறு வேலைத்திட்டங்கள் இவ்வாறு நட்டத்திலேயே இயங்குகின்றன. இந்த நிலைமை தொடருமானால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-8,11)

# தென்மராட்சி கல்வி வலயத்தில் இன்று நடைபெறும் போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலை மாணவர்களுக்கான கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய போட்டிகள் இன்று புதன் கிழமை பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் உரிய நேரத்திற்கு வருகை தருவதுடன் தரம் 6, 7 மாணவர்கள் கோலம் போடுவதற்கான பூக்களையும் தரம் 8,9 மாணவர்கள் மாலை கட்டுவதற்கான பூ மற்றும் நார் போன்றவற்றையும் தரம் 12, 13 மாணவர்கள் தோரணம் பின்னுவதற்கு தேவையான ஓலை, உபகரணம் போன்றவற்றையும் கொண்டுவருமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ந-3,29)

# போலிச் சாரதி அனுமதிப்பத்திரம் தயாரித்தவர்களுக்கு தண்டனை

(யாழ்ப்பாணம்)

போலியான சாரதி அனுமதிப்பத்திரத்தினை தயாரித்துக் கொடுத்த இருவருக்கு 6 மாத சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு சட்டத்திற்கு முரணான வகையில் போலியான சாரதி அனுமதிப் பத்திரத்தினை தயாரித்து விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று நபர்களை யாழ்.விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை யாழ்.நீதிமன்றில் கடந்த 10ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவர்கள் மூவரும் மன்றில் குற்றத்தினை ஒப்புகொண்டமையாலும் இவர்களில் ஒருவர் அரச ஊழியர் என்பதனாலும் 1000 ரூபாய் அரச செலவாக செலுத்தும் படியும் மற்றைய இருவருக்கும் தலா 1000 ரூபாய் வீதம் 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சாதாரண சிறைத்தண்டனையையும் விதித்து யாழ். நீதவான் மா.கணேசராஜா தீர்ப்பளித்தார். (ந-4)

# யாழ்.கடற்றொழிலாளர்களுக்கு காப்புறுதித் திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலில் ஈடுபடும் படகுகள் மற்றும் மீனவர்களுக்கு காப்புறுதி வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இத் திட்டத்தில் இதுவரை 750 பேர்வரை இணைந்துள்ளனர்.

பெரிய படகுகள் படகுச்சான்றிதழ்களுடன் காப்புறுதியினை கட்டாயமாக பதிவு செய்யப்படல் வேண்டும் என்ற நடைமுறை இதற்கு முன்னர் காணப்பட்ட போதும் சிறிய படகுக்கு இவ்வருடத்தில் இருந்தே காப்புறுதிப்பதிவு ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அதிகமான மீனவர்கள் வருடத்திற்கு 750 ரூபாய் செலுத்தும் முறையே கடைப்பிடிப்பதாகவும் இதுவரை சிறு விபத்துச்சம்பவங்கள் மூலம் இரண்டு மீனவர்களே காப்புறுதியின் மூலம் சிறு தொகையினை பெற்றுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# எரிந்த நிலையில் சடலம் கொழும்பில் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு பொரிங்டன்-திம்பிரிகஸ்யாயவுக்கு இடைப்பட்ட பகுதியில் எரிந்த நிலையில் சடலம் ஒன்று நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த சடலத்தை மீட்ட நாரஹேன்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சடலம் அடையாளம் காணப்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு நீதிமன்ற வளாகத்தினுள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட நபராக இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இருப்பினும் குறித்த சடலம் பற்றி மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-8,11)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மனதைக் கையாள பயிற்சி



இளமையும் வலிமையும் வளமையும் அறிவுக் கூர்மையும் உடையவர்களே இறைவனைக் அடையக் கூடியவர்கள்.

நீங்கள் கடவுளின் குழந்தைகள் அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள் புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள்.

தூய்மை, பொறுமை ,விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை. அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.நீ வலிமை உள்ளவனாக இருந்தால் நீ ஒருவனே உலகிலுள்ள அத்தனை பேருக்கும் சமமானவனா வாய். அன்றைய தினம் மலர்ந்ததும் பிறரால் தொடப்படாததும் நுகரப்படாததுமான புத்தம் புதிய மலர்களே இறைவனின் பாதகமலங்களில் இடுதற்குரிய தகுதி பெற்றவை . இறைவனும் அவற்றையே விரும்பிட ஏற்கிறான்.

சிந்தனையின் ஆற்றல் தொண்ணூறு சதம் சாதாரண மனிதனால் வீணாக்கப்படுகிறது .எனவே அவன் தவறுகளைச் செய்து கொண்டே இருக்கிறான். சரியான பயிற்சியைப் பெற்றவனோ தவறு செய்வதில்லை .

# இஸ்ரேல் தூதரகர் மீது வெடிகுண்டுத் தாக்குதல்; தூதரக பெண் அதிகாரி உட்பட நான்கு பேர் காயம்

டில்லியில் இஸ்ரேல் தூதரக கார் மீது தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வீசினர். பிரதமர் மன்மோகன்சிங் வீடு அருகே நடைபெற்ற இந்த தாக்குதலில் தூதரக பெண் அதிகாரி உட்பட 4 பேர் படுகாயமடைந்தனர்.



டில்லியில் உள்ள இஸ்ரேல் தூதரகத்திற்கு சொந்தமான ஒரு சொகுசு கார் நேற்று முன்தினம் பிற்பகலில் டெல்லி அவுரங்கசீப் சாலையில் சென்று கொண்டிருந்தது. அந்த காரில் இஸ்ரேல் தூதரக பெண் அதிகாரி டால் (வயது 42) பயணம் செய்தார். ஒரு சிக்னலில் கார் நின்ற போது அதைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் இரண்டு பேர் இந்த காரின் பின்பகுதியில் ஏதோ ஒரு பொருளை வைத்தனர்.

சிக்னல் கிடைத்தபின்னர் இஸ்ரேல் தூதரக கார் புறப்பட்டது. சில நிமிடங்களில் அந்த காரில் திடீரென குண்டு வெடித்தது. கார் தீப்பிடித்து எரிந்தது. வெடிகுண்டு சிதறல்கள் பட்டதால் காரில் இருந்த இஸ்ரேல் தூதரக பெண் அதிகாரி கார் சாரதி உட்பட மொத்தம் 4 பேர் படுகாயமடைந்தனர். மேலும், சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்த 4 கார்களும் சேதம் அடைந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

தகவல் அறிந்தவுடன் தீயணைக்கும் படையினரும் வெடிகுண்டு நிபுணர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

சம்பவ இடத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் துரித விசாரணை நடந்து வருகிறது. முதல் கட்ட விசாரணையில் இஸ்ரேல் தூதரக காரை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அந்த காரில் குண்டு வைத்தது தெரியவந்துள்ளது. அந்த ஆசாமிகளை தேடி கண்டுபிடிக்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

இதற்கு இஸ்ரேல் தான் காரணம் என்று ஹிஸ்புல் தீவிரவாதிகள் குற்றம் சாட்டினர். கொலைகளுக்கு பழி தீர்க்க ஆண்டு தோறும் அவர்கள் இஸ்ரேலை குறிவைத்து நாச வேலையில் ஈடுபட்டு வருகிறார்கள். அந்த வகையில்தான் மேற்கண்ட இரு சம்பவங்களும் நடந்துள்ளதாக கருதப்படுகிறது.

தாக்குதல் குறித்து இஸ்ரேல் வெளியுறவுத் துறை மந்திரி அவிக்டார் லிபர்மன் கூறியதாவது, இஸ்ரேலுக்கு உள்ளேயும், வெளியேயும் எங்கள் மக்களுக்கு ஆபத்து இருப்பதை இச்சம்பவம் உணர்த்துகிறது. இதை நாங்கள் தினமும் சந்திக்கிறோம். இதை செய்தது யார்?. இதன் பின்னணியில் இருப்பவர் யார்? என்று எப்படி கண்டுபிடிப்பது என்று எங்களுக்கு தெரியும். இத்தகைய சம்பவங்கள் எங்கள் பணிகளை பாதிக்கவிட மாட்டோம்.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதில் தொடர்புடைய குற்றவாளிகளை நீதிக்கு முன் நிறுத்தவும் சபை உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி மூனின் செய்தித்தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயற்பட்டு பயங்கரவாதத்தை வேரறுக்க வேண்டும். அதற்கு காரணமானவர்களை நீதிக்கு முன் நிறுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் டில்லியில் இஸ்ரேல் தூதரக கார் தகர்த்தப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து நாடு முழுவதும் உள்ள தூதரகங்களுக்கு பாதுகாப்பை பலப்படுத்துமாறு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

குறிப்பாக இஸ்ரேல் அமெரிக்கா மற்றும் மேலை நாட்டு தூதரகங்களுக்கு பலத்த பாதுகாப்பு அளிக்குமாறு உத்தரவிட்டுள்ளது. டில்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, ஐதராபாத், பெங்களூர் ஆகிய நகரங்களில் உள்ள பாதுகாப்பு அமைப்புக்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளன. இந்த நகரங்களில் உள்ள தூதரகங்களுக்கு எந்த தாக்குதலையும் முறியடிக்க கூடிய வகையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ-2)

## பாரதச் செய்தி

# வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்களின் கறுப்புப்பணம் ரூபா 24.5 இலட்சம் கோடி

## மத்திய புலனாய்வுத்துறை இயக்குநர் தெரிவிப்பு

இந்தியர்களின் கறுப்பு பணம் சுமார் 25 இலட்சம் கோடி வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்று மத்திய புலனாய்வுத்துறை இயக்குனர் ஏ.பி. சிங் தெரிவித்துள்ளார்.

சுவிஸ் வங்கிகளில் இந்திய அரசியல் வாதிகள் மற்றும் தொழிலதிபர் பலர்கறுப்பு பணம் பதுக்கி வைத்திருப்பதாக நீண்ட காலமாக கூறப்பட்டு வருகிறது.

சுவிஸ்லாந்து மட்டுமன்றி, பல்வேறு நாடுகளிலும் பதுக்கப்பட்டுள்ள இந்தியர்களின் கறுப்பு பணத்தை மீட்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் பொது நலன் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில், வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்களின் கறுப்பு பணம் ரூ.24.5 இலட்சம் கோடி உள்ளது என்ற அதிர்ச்சி தகவலை மத்திய புலனாய்வுத்துறை இயக்குனர் ஏ.பி. சிங் நேற்றுமுன்தினம்வெளியிட்டுள்ளார். ஊழல் எதிர்ப்பு மற்றும் சொத்து பறிமுதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தலைநகர் புதுடில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அவர் பேசியதாவது, இந்தியர்களின் வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைத்துள்ள கறுப்பு பணத்தின் அளவு குறித்து பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன.

சுவிஸ் வங்கிகளில் பணம் போட்டு வைத்திருப்பவர்களில் இந்தியர்கள் தான் அதிகம் என்றும் தெரியவந்துள்ளது. சுவிஸ்லாந்து மட்டுமன்றி, மொரீசியஸ், லீசெட்டன்ஸ்டின் மற்றும் சில தீவுகளில் உள்ள வங்கிகளிலும் இந்தியர்களின் கறுப்பு பணம் பதுக்கப்பட்டிருக்கிறது.

அந்த நாட்டில், கறுப்பு பணம் வைத்துள்ளவர்களின் விவரங்களை தெரிவிக்க மறுக்கின்றன. காரணம் அந்த பணத்தால் அந்நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சியடைகிறது.

ஊழல் குறைந்த நாடுகள் என்று கணிக்கப்பட்ட நாடுகளில் கூட கறுப்பு பணம்பதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வரிசையில் முதலிடத்தில் உள்ள நியூசிலாந்து, 5ஆம் இடத்தில் உள்ள சிங்கப்பூர், 7ஆம் இடத்தில் உள்ள சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளின் வங்கிகளில் கறுப்பு பணம் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. (அ-2)

# மும்பை-வியன்னா விமானசேவை மார்ச் மாதம் இடைநிறுத்தப்படும்

(மும்பை)

பொருளாதார சூழ்நிலை காரணமாக, மும்பை- வியன்னா விமான சேவையை, எதிர்வரும் மார்ச் 25 ஆம் திகதி முதல் நிறுத்தவுள்ளதாக ஆஸ்திரியா ஏர்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆஸ்திரியன் ஏர்லைன்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஆஸ்திரியன் ஏர்லைன்ஸ் நிறுவனம் ஏர்ஏசியாஎக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து, இந்தியாவின் பலநகரங்களில் விமானச் வேவையை அளித்து வருகிறது. பொருளாதீர ஸ்திரத்தன்மையற்ற நிலை, போதிய வாடிக்கையாளர் இன்மை உள்ளிட்ட காரணங்களால் எதிர்வரும் மார்ச் மாதம் 25 ஆம் திகதி முதல், மும்பை- வியன்னா விமானசேவை நிறுத்தப்பட உள்ளதாகவும் வாரத்திற்கு 6 நாட்கள் இயங்கப்படும் டில்லி-வியன்னா சேவை வழக்கம் போல தொடரும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.. (அ-2)




புதுடில்லியில் ஜோர்பக் கர்பாலாவில் காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்தில் முஸ்லிம் அமைப்பினர் திடீரென ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்த முயற்சிப்பதைப் படத்தில் காணலாம்.

# பொருளாதார வளர்ச்சி சூழலைப் பாதிக்கக் கூடாது

## பிரதமர் தெரிவிப்பு

(சென்னை)

பொருளாதார வளர்ச்சி சுற்றுப்புறச் சுழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

பிரேசில், தென்னாபிரிக்கா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பு பேசிக் நாடுகள் என்று அழைக்கப்படுகிறது.

பேசிக் நாடுகள் என்றால் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளை குறிக்கும். இந்நிலையில் இந்த நாடுகளின் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன் பிரதமர் மன்மோகன் சிங் தனது ருவிட்டர் இணையத்தில் கூறியிருப்பதாவது,

நாட்டு மக்களுக்கு பொருளாதார வளர்ச்சி முக்கியமானதாகும். ஆனால் இந்த வளர்ச்சி சுற்றுப்புற சுழலுக்கு பாதிப்பு வராமல் பாதுகாக்க வேண்டும் என்று கூறியுள்ளார். (அ-2)

முத்தரப்பு போட்டி 05

# இந்தியாவுக்கு எதிரான போட்டியை சமனிலையாக்கியது இலங்கை



அவுஸ்திரேலியாவில் நடைபெறும் சி.பி. முக்கோணக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நற்று நடைபெற்ற இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான போட்டி சமனிலையில் முடிபுற்றுள்ளது.

மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டியின் 5 ஆவது லீக் ஆட்டம் அடிலெய்டில் நேற்று நடைபெற்றது.

இந்திய அணியில் சேவாக், சகீர்கானுக்கு நேற்றைய ஆட்டத்தில் ஓய்வு கொடுக்கப்பட்டது. அவர்களுக்குப் பதிலாக டெண்டுல்கர், இர்பான் பதான் ஆகியோர் இடம்பெற்றனர்.

இலங்கை அணியில் தம்மிக பிரசாத்துக்குப் பதிலாக ஹேரத் சேர்க்கப்பட்டார். நேற்றைய போட்டியில் இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

தொடக்கமே இலங்கைக்கு அதிர்ச்சியாக இருந்தது. வினேய்குமார் தனது ஓவரின் 2 ஆவது பந்தில் உபுல் தரங்கவை ஆட்டமிழக்கச் செய்தார். அவர் ஓட்டமெதுவும் எடுக்கா ல் தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதேபோல் மற்றொரு தொடக்க வீரர் டில்சான் விக்கெட்டை இர்பான் பதான் கைப்பற்றினார். அவர் 16 ஓட்டங்களில் வெளியேறினார். 7.1 ஓவரில் இலங்கை அணி 28 ஓட்டங்களை எடுப்பதற்குள் 2 விக்கெட்டையிழந்தது.

3 ஆவது விக்கெட்டுக்காக சங்கக்கார-சண்டிமல் ஜோடி பொறுமையுடன் ஆடியது. நிதானமாக ஆடிய சங்கக்கார 31 ஓட்டங்களை எடுத்திருந்த போது அஸ்வினின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இவரையடுத்து சண்டிமலுடன் ஜெயவர்த்தன ஜோடிசேர்ந்தார். இருவரும் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

நிதானமாக ஆடிய ஜெயவர்த்தன 43 ஓட்டங்களை எடுத்திருந்தபோது வினேய் குமார் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

சிறப்பாக ஆடிவந்த சண்டிமல் 81 ஓட்டங்களை எடுத்திருந்தபோது ரன் அவுட் ஆக அடுத்துவந்த பெரேரா 5 ஓட்டங்கள் எடுத்திருந்த போது அஸ்வின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

கடந்த போட்டியில் அதிரடிகாட்டிய மத்யூஸ் இப் போட்டியில் 17 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்துவந்த குலசேகர 12 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது வினேய்குமார் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

மலிங்க வந்தவேகத்திலேயே ரன் அவுட் ஆனார். சேனநாயக்க 22 ஓட்டங்களையும் ஹேரத் ஒரு ஓட்டத்தையும் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 236 ஓட்டங்களை எடுத்தது.

இந்திய அணி சார்பில் வினேய் குமார் 3 விக்கெட்டுக்களையும் ரவிச்சந்திரன் அஸ்வின் 2 விக்கெட்டுக்களையும் இர்பான் பதான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். மற்றைய 3 விக்கெட்டுக்களும் ரன் அவுட் முறையில் விழுந்ததாகும்.



இதையடுத்து 237 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியென்ற நிலையில் இந்திய அணி துடுப்பெடுத்தாடியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக காம்பீரும் சச்சினும் களமிறங்கினர். 15 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது சச்சின் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

அடுத்துவந்த ஹோலியும் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ரோகித்சர்மாவும் 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

ஒரு புறம் விக்கெட்டுக்கள் விழுந்தாலும் மறுபுறம் நிலைத்து நின்று ஆடிய காம்பீர் அரைச்சதம் அடித்து அசத்தினார். தடுப்பாட்டம் ஆடிய ரெய்னா 8 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மலிங்கவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட காம்பீர் 91 ஓட்டங்கள் (6 பவுண்டரிகள் உட்பட) எடுத்திருந்த போது ரன் அவுட் ஆனார்.

அடுத்துவந்த ஜடேஜா மூன்று ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். அஸ்வின் 14 ஓட்டங்களுடனும் இர்பான் பதான் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த வினேய் குமார் ஒரு ஓட்டத்துடன் ரன் அவுட் ஆனார்.

இந்திய அணி வெற்றி பெறுவதற்கு கடைசி ஓவரில் 2 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 9 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இந்திய அணித்தலைவர் தோனி கடைசி வரை ஆட்டமிழக்காமல் அதிரடியாக விளையாடி இந்திய அணியை வெற்றிக்கு அழைத்துச் செல்ல முயன்றார். கடைசிப்பந்தில் 4 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையிருந்தது.



எனினும் அந்த ஓவரில் ஒரு விக்கெட்டையிழந்து 8 ஓட்டங்களை மாத்திரமே இந்திய அணி பெற்றது.

கடைசிப்பந்தில் பவுண்டரிக்கு முயற்சித்தார் தோனி. ஆனால் 3 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்ததால் இந்த ஆட்டம் சமனிலையில் முடிந்தது.

தோனி 58 ஓட்டங்களுடனும் உமேஷ் யாதவ் ஓட்டமெதுவுமின்றியும் களத்திலிருந்தனர். ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் சமநிலையில் முடிந்த 26ஆவது போட்டி இதுவாகும்.

### வெற்றியை தட்டிப் பறித்த நடுவர்கள்

இலங்கை அணி வீரர் மலிங்க வீசிய 30 ஆவது ஓவரில் 5 பந்துகள் மட்டுமே வீசப்பட்டுள்ளன. இதனைக் களத்திலிருந்த நடுவர்களும் கவனிக்கவில்லை ரீவி நடுவராக இருந்த புரூஸ் ஆக்ஷன்போர்ட்டும் கவனிக்கவில்லை. அந்த ஓவரில் இந்தியா 9 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கடைசியில் இந்தியாவுக்கு ஒரு ஓட்டம் தேவையென்ற நிலையில் இந்த பந்து கிடைத்திருந்தால் இந்தியா வெற்றியை சுவைத்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஆனால் நடுவர்களின் கவனக்குறைவால் இரு அணிகளின் வெற்றிவாய்ப்பும் பறிபோயுள்ளது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

---

# ஆலோசனைக் குழுவில் சவேந்திர...

பட்டியல் ஒன்றை தாம் பேணி வருவதாகவும் குறிப்பிட்ட அவர்,மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்துக்கு கவலை தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நவநீதம்பிள்ளையின் இந்தக் கருத்து தொடர்பாக உடனடியாக கருத்து எதையும் வெளியிட ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மறுத்துள்ளார் என ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

அத்துடன் நியூயோக்கில் உள்ள சிறிலங்காவின் வதிவிடப்பிரதி பணியகம் இது குறித்து கருத்து வெளியிடமறுத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்த சிறிலங்கா படைத்தரப்பின் 58வது படைப்பிரிவின் தளபதியாகச் செயற்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மீது மனிதவுரிமை மீறல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படும் நிலையிலேயே இந்த நியமனம் இடம் பெற்றுள்ளது.

போர்க்குற்றங்கள் தொடர்பில் சிறிலங்கா அரசாங்கத்தின் மீது மேற்குலக நாடுகள் தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன.

இம்மாத இறுதிப்பகுதி யில் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரிலும் சிறிலங்காவுக்கு எதிரான பிரேரணை ஒன்று மேற்குலக நாடுகளால் கொண்டுவரப்படவுள்ளது. இந்தப் பின்னணியிலேயே சவேந்திர சில்வாவின் இந்த நியமனம் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கியநாடுகள் சபை அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான ஆலோசனைக் குழுவுக்கு ஐ.நாவுக்கான சிறிலங்காவின் நிரந்தர பிரதி வதிவிடப்பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமைக்கு அமெரிக்காவைத் தளமாக கொண்டியங்கும் மனிதவுரிமை அமைப்புக்கள் ஏற்கெனவே கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தவுடன் இந்நியமனத்தை நிராகரிக்குமாறும் ஐக்கியநாடுகள் சபை செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கோரிக்கை விடுத்திருந்தன

சர்வதேச மனிதவுரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான அடிப்படைக் கொள்கைகள் மீறப்பட்டிருந்த இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா முக்கிய பங்குவகித்ததாக இவ்வமைப்புக்கள் சுட்டிக் காட்டியிருந்தன.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமை தாங்கிய சிறிலங்கா படைத்தரப்பின் 58வது படைப்பிரிவு போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டதாக இவ்வமைப்புக்கள் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

## அமெ.இராஜாங்க...

படையினருக்கும் எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்திவருகின்றது.

நாட்டில் இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங்களை கண்டு அரசாங்கம் கலக்கமடைய வேண்டியதில்லை

மாலைதீவில் இடம்பெற்று வரும் குழப்ப நிலைமைகளுக்கு அமெரிக்காவே பொறுப்பு என குற்றம் சுமத்திய அமைச்சர் மேர்வின் சில்வா இந்நாட்டின் முக்கிய தேசிய வீரனாகப் போற்றப்படும் கெப்டிபொலவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவாக மறுஜென்மம் எடுத்துள்ளார் என்றும் கூறினார். (ந-8,11)


## மரண அறிவித்தல்

### திருமதி சச்சிதானந்தம் தங்கமுத்து



கரணவாய் சோழங்கன் பிரதேசத்தை பிறப்பிடமாகவும், அளவெட்டி மேற்கு பிரதேசத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சச்சிதானந்தம் தங்கமுத்து அவர்கள் 13.02.2012 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்றவர்களான சண்முகம் சிவக்கொழுந்து தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை தங்கம்மா தம்பதியினரின் மருமகளும் சச்சிதானந்தத்தின் அன்பு மனைவியும் எந்திரி வசந்தகுமார் (பிரதித் திட்டப் பணிப்பாளர் நிக்கொட், யாழ்ப்பாணம்-கிளிநொச்சி) அவர்களின் பாசமிகு அருமைத் தாயாரும் தங்கமணி, அன்னலட்சுமி, சித்திரம், வள்ளிப்பிள்ளை, நவரட்ணம், இராசாத்தி குருகுலசிங்கம், தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், வாசுகி, கிரிஷாந்தி (லண்டன்), விஜிதா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு பெரிய தாயாரும், ஸ்ரீரதி வசந்தகுமார் (ஆசிரியர் C.C.T.M.S வவுனியா) அவர்களின் மாமியாரும் தரங்கினி, சுஜானன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 16.02.2012 வியாழக் கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொ.இல. :- 077 772 2754 (7494) தகவல்: மகன்



## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 டிரக்டர் - 24000/=
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/=)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

(7493)


# ஐ.நா. அலுவலகம் முன் புகலிடம் கோரி போராட்டம்

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் காரியாலயத்தின் எதிரில் இலங்கையர் ஒருவர் தனது குடும்பத்துடன் புகலிடம் கோரி போராட்டம் நடத்தி வருகின்றார்.

புகலிடம் வழங்கப்படாவிட்டால் தீக்குளிக்கப் போவதாக அவர் அதிகாரிகளை அச்சுறுத்தியுள்ளார்.

37 வயதான கவினமுதம் தேவகுமார் என்ற இலங்கையரே இவ்வாறு போராடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேவகுமார் அவரது மனைவி மற்றும் நான்கு பிள்ளைகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் மீளவும் தம்மையும் தமது கு[...] பத்தாரையும் இலங்கைக்கு ந[...] கடத்தக் கூடுமென தேவகுமா[...] அச்சம் வெளியிட்டுள்ளார்.

புகலிட விண்ணப்பம் உரி[...] தகுதிகளைக் கொண்டிருந்தா[...] புகலிடம் வழங்கப்படும் என அ[...] காரிகள் தேவகுமாரிடம் வாக்குறு[...] யளித்துள்ளனர்.

இதேவேளை தேவகுமா[...] வைத்தியசாலைக்கு அழைத்து[...] சென்றதாகவும் குடும்ப உறுப்[...] னர்கள் முகாமிற்கு அனுப்பி வை[...] கப்பட்டதாகவும் பிந்திக் கிடைத்த த[...] வல்கள் தெரிவிக்கின்றன. (ந-8,11)

## நெடுங்கேணி...

தாக்குதல் மேற்கொண்டதாக படையினர் அப் பகுதி மக்களுக்கு தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக வன்னிப் பகுதிக்குச் செல்லும் தென்பகுதி சுற்றுலாப் பயணிகள் மற்றும் தொழிலாளிகளுக்கும் உள்ளூர் மக்களுக்கும்இடையே நிலவிவரும் முறுகல் நிலையை அடுத்தே இத்தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. (ந-8,11)

## இலங்கை...

இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சிகளையும் வழங்கியிருந்தது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையில் அமைதியை நிலை நாட்டுவதில் பாகிஸ்தான் பெரும் பங்காற்றியுள்ளது என்கின்ற பொதுவான எண்ணப்பாடு இலங்கையர்கள் மத்தியில் நிலவுவதால் அங்கு பாகிஸ்தான் உயர்வாக மதிக்கப்படுகிறது.

இந்தியாவானது தனது பிராந்திய நாடுகளுடன் குறிப்பாக அயல் நாடுகளின் விவகாரங்களில் அதிகாரப் போக்கை கடைப்பிடிக்க முயற்சித்து வருவதானது பாகிஸ்தான்-இலங்கை உறவு மேலும் நெருக்கமடைய காரணமாக அமைந்துள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8,11)


**வேலையாட்கள் தேவை**

பெண்பிள்ளைகள் மட்டும்.
சுன்னாகத்தை அண்டி வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

Rokkith Phone Shop
No. 56, K.K.S Road,
Chunnakam.
T.P:- 077 3504585
(5860)


## ஜனாதிபதி மகிந்தவுக்கு...

இலங்கையின் இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு ஒன்றினை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுக்களில் இணக்கம் ஒன்றைக் காண்பது மிகவும் கடினமானது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளோம்.

இருந்த போதிலும் அரசியல் தீர்வு ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு இரு தரப்பும் பேச்சுக்களில் ஈடுபடுவது அவசியம்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க பிரதிநிதிகளே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

போருக்குப் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கைக்கு ஒரு வாய்ப்பை அளிக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் வரும் தீர்மானத்தை அமெரிக்கா ஆதரிக்கும்.

அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் பணிகளை பாராட்டியுள்ள மரியா ஒட்டேரோ, அதன் பரிந்துரைகளில் பொறுப்புக்கூறல் குறித்து சில குறைபாடுகள் இருக்கின்[...] போதிலும் பல முக்கிய விடய[...] களில் அது கவனம் செலுத்தியிரு[...] பதாகவும், நல்லிணக்கம், அதிகா[...] பகிர்வு, இராணுவ மயமாக்கலை[...] குறைப்பது மற்றும் மனித உரிமை[...] கள் மீறல்கள் போன்ற விடய[...] களில் அது கணிசமான பரிந்துரை[...] களைச் செய்திருப்பதாகவும் கூ[...] யுள்ளார்.

அது நடைமுறைப்படுத்தப்ப[...] டால், உண்மையான நல்லிண[...] கம், ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் அவற்றின் நடைமுறைகளை பலப்படுத்தல் ஆகியவற்றில் அது நல்ல பங்களிப்பை செய்யும் எ[...] றும் நல்லிணக்க ஆணைக்கு[...] வின் பரிந்துரைகளை முழுமை[...] யான வகையில் நடைமுறைப்படு[...] துவதற்கு தான் நடவடிக்கை எ[...] பதாக ஜனாதிபதி மகிந்த ராஜப[...] தம்மிடம் கூறியுள்ளதாகவும் மரி[...] ஒட்டேரோ குறிப்பிட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு இல[...] கைக்கு விஜயம் செய்த அமெரி[...] கொலின் பவலுக்கு பின்னர் இல[...] கைக்கு விஜயம் செய்யும் மி[...] உயர்ந்த அமெரிக்க இராஜதந்[...] மரியா ஒட்டேரோ என்பது குறி[...] பிடத்தக்கது. (ந-8,11)


உள்நாடு வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை விஸ்தரிக்கும் முகமாக DHL யாழ்.குடாநாட்டுகளில் நம்பமுடியாத கட்டணங்கள் இப்பொழுது வழங்கப்படுகின்றது...

உள்நாட்டுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை 24 மணிநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு
அதிரடி விசேட சலுகை...!
கனடா - 1 kg - 500/= சுவிஸ் - 1 kg - 400/=



**திருமுருகன் கொம் நெற்**

இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2 தொ.பே.:021 222 7835



Rs.14,400 off - Course fees
CIMA-UK
CIMA-UK நிறுவனத்தின் Approved Listed College
MCS
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Qualified Lectures pane[...]
CIMA Passing Guarante[...]
12 Years Experience
பதிவுகளுக்கு 18.Feb.2012 க்கு முன் நேரில்
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
Full Course fee Free All Computer Diploma courses, IELTS Diploma in Business English, TOEFL
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
SMS Your name & Course to 772395895 & Get Schol.



GTV ENTERPRISES PVT LTD
மகாராஜா Food இன் மற்றுமொரு முயற்சி
வீட்டுப் பொருட்கள் மற்றும் வர்தகப் பொருட்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் விரைவாகவும், பாதுகாப்பாகவும் உரியவர்களின் முகவரிக்கு கையளிக்கப்படும்.






➤ G.T.V Transport
NO. 225, Kasthuriyar Road, Jaffna. Tel-021 222 4338
NO. 18/3, Dr.E.A. Cooray Mawatha Wellawatte, Colombo. Tel-021 236 0926
No.272, K.K.S. Road, Jaffna. Tel-021 222 4825





**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், குளியலறை கட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சுவேலைகள், Painting, Plumbing, Electrical மற்றும் பூந்தோட்டம் அமைத்தல் அனைத்தும் தரமாகவும் நவீன முறைகளிலும் குறைந்த செலவிலும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும். அழையுங்கள் 0776679564 எங்கள் சேவை உங்கள் இல்லம் தேடிவரும்.

AXSHAYA CONSTRUCTION, JAFFNA (C-5856)
Hot Line 0776679564


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது